# நம்மைச் சுற்றியுள்ள உலகம்

## பகுதி 2

## மூன்றாம் வகுப்பு





# டெலி மானஸ் ஹெல்ப்லைன்

**டெலி- மானஸ் (டெலி மனநல உதவி மற்றும் மாநிலங்கள் முழுவதும் நெட்வொர்க்கிங்)**

**(14416 / 9800 - 89 - 14416)**

**தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலிமானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப்படுகிறது. டெலிமானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண் மூலம் 24 X 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலிமானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.**

# மனோதர்பன்

**வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப் பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.**

இப்பாடநூல் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மகாராஷ்டிரா, புனே தயாரித்த பாடத்திட்டம் மற்றும் பாட நிர்ணயத்தின்படி தயாரிக்கப்பட்டு, இந்தப் பாடநூல், இந்நிறுவனத்தின் மூலம் சரிபார்க்கப்பட்டது. அரசு தீர்மானம் எண் : அபயாஸ் - 2116/(ப்ர எண் 43/16) எஸ்டி - 4 நாள் 25/04/2016 இன் படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவின் 01/04/2026 ஆம் நாளின் கூட்டத்தில் இப்பாடநூலை 2026-2027 கல்வி ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.



# நம்மைச் சுற்றியுள்ள உலகம்

## பகுதி 2

## மூன்றாம் வகுப்பு



மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே-411004.

பக்கத்தில் உள்ள சதுரத்தில் காணப்படும் விரைவுக் குறியீட்டை (Q.R Code) ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கேன் செய்வதனால் உங்களுக்கு டிஜிட்டல் பாடநூல் மற்றும் பாடநூலில் உள்ள உட்பிரிவுகளுக்குத் தொடர்புடைய ஒலி, ஒளி, ஒலி - ஒளி வடிவிலான கற்றல், கற்பித்தல் உபகரணங்களைப் பெறலாம்.

முதல் பதிப்பு
ஜூன்- 2026

© மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வு கழகம், புனே-411004

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வு கழகம் இப்பாடநூல் தொடர்பான அனைத்து உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள எந்தப் பகுதியையும் மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் ஆய்வு கழக இயக்குநரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறு உருவாக்கம் செய்யக்கூடாது.

## வரலாறு பாடக்குழு

டாக்டர். கணேஷ் ராவுத், (தலைவர்)
டாக்டர். மஞ்சரி பாலேராவ் (உறுப்பினர்)
திரு. பாபுசாகேப் சிந்தே (உறுப்பினர்)
திரு. வைஜ்நாத் காளே (உறுப்பினர்)
திரு. சுபாஷ் ராதோட் (உறுப்பினர்)
திருமதி. உஷா கோபடே (உறுப்பினர்)
திரு. விஜய்குமார் இங்கவலே (உறுப்பினர்)
திருமதி . பல்லவி கர்ணிகர் (உறுப்பினர்)
திரு. இராம்குமார் ராய் (உறுப்பினர்)
திரு. நாகேஷ் சிங்ணே (உறுப்பினர்)
திரு. இரவீந்தர பாப்கர் (உறுப்பினர்)
திரு. சந்தோஸ் தலேகர் (உறுப்பினர்)
திரு. நித்தின் படே (உறுப்பினர்)
திரு. இராஜன் கரூட் (உறுப்பினர்)
திரு. நிலேஷ் போரே (உறுப்பினர்)
திரு. சுனில் மேஷராம் (உறுப்பினர்)
திரு. ஹனுமத் ஜாதவ் (உறுப்பினர்)
திரு. தத்தாத்ரய சௌதரி (உறுப்பினர்)
குமாரி. ப்ரஜக்தா அம்புல்கர் (உறுப்பினர்)
திரு. அவினாஷ் பஹாடே (உறுப்பினர்)
டாக்டர் சதானந்த் டோங்கரே (உறுப்பினர்)
திரு. ராம்தாஸ் டாகர் (உறுப்பினர்)
திருமதி. மனிஷா சோனாவனே (உறுப்பினர்)
டாக்டர். சோம்நாத் ரோடே அழைப்பாளர்
திரு. மொகல் ஜாதவ், அழைப்பாளர் ஒருங்கிணைப்பானர்
திரு. அருண் ஜாதவ் கலைத்திட்ட ஒருங்கிணைப்பானர்)
திரு. ராமேஸ்வர் லோட்கே கலைத்திட்ட ஒருங்கிணைப்பானர்
திருமதி. வர்ஷா சரோதே (உறுப்பினர், செயலாளர்)

## குடிமையியல் பாடக்குழு

டாகடர். சஞ்யோத் அப்டே (தலைவர்)
பேரா. இராஜேந்திர போயிவார் (உறுப்பினர்)
திரு. இர்பான் சையது (உறுப்பினர்)
டா. நாகநாத் ஏவ்கல்
திரு. விக்ரம் அட்சூல் (உறுப்பினர்)
திரு. இராஜேந்திர டேகாடே (உறுப்பினர்)
திருமதி. ரோஹினி கவாணே (உறுப்பினர்)
டாக்டர். அசோக் பாங்கர் (உறுப்பினர்)
திருமதி. பாரதி ஔடி (உறுப்பினர்)
திரு. ஷீயாம்காந்த் ருளே (உறுப்பினர்)
திரு. சாந்த்கான் படாண் (உறுப்பினர்)
திரு. நாகாநாத் விபூதே (உறுப்பினர்)
திரு, ஆகாஷ் ஜாடே (உறுப்பினர்)
திரு. வினோத் அவராதி (உறுப்பினர்)
திரு. ஸ்ரீனிவாஸ் மோரே (உறுப்பினர்)
திருமதி. ஸ்புஹா இந்து (உறுப்பினர்)
திரு. அவினாஷ் பஹாடே (உறுப்பினர்)
திரு. அணில் ராஜ்குரு (உறுப்பினர்)
திரு. ப்ரமோத் வாக்மோடே (உறுப்பினர்)
டாக்டர். பரிமல் சுதாகர் (அழைப்பாளர்)
டாக்டர். விராஜ் மகாஜன் அழைப்பாளர்)
டாக்டர். அஜிங்கிய காய்குவாட் (அழைப்பாளர்)
பேரா. வீணா கைஞ்சி (அழைப்பாளர்)
திருமதி. வர்ஷாரானி போப்ளே (கலைத்திட்ட ஒருங்கிணைப்பானர்)
திருமதி. வர்ஷா சரோதே (உறுப்பினர், செயலாளர்)

## முதன்மை பாடக்குழு உறுப்பினர்கள்

டாக்டர். மகேஸ்வர் களலாவே
திரு. மோகன் சேடே
திரு. பிரஷாந்த் திவேகர்
திருமதி. பிரதிமாபா குப்தே

## ஆய்வு

டாக்டர். சதானந்த் மோரே (தரப் பரிசோதகர்)
டாக்டர். நீதா போகில் (தரப் பரிசோதகர்)
அட். ஸ்ரீகாந்த் தல்வி (சட்டநிபுணர்)
டாக்டர். ஷர்மிஷபா ஒக் (CWSN நிபுணர்)

## எழுத்தாளர்

திருமதி. இந்திராயணி சௌஹான்
டாக்டர். காயத்ரி லேலே

## ஒருங்கிணைப்பு

**திருமதி வர்ஷா சரோதே**
வரலாறு மற்றும் குடிமையியலுக்கான
சிறப்பு அதிகாரி, பாடநூல் மண்டலம், புனே

## மொழிபெயர்ப்பு, ஆய்வு:

திருமதி. சரோதே இராஜலக்சுமி
திருமதி. பியூலா அகஸ்டின்

## மொழியாக்க ஒருங்கிணைப்பு :

முனைவர். துலசி பாாத் பூஷண்,
(CB)சிறப்பு அதிகாரி - தெலுகு

அட்டை படவிளக்கம் : திரு. தேவதத்த பலக்வடே

அச்சுக்கோர்ப்பு : கேசன் லாங்வேஜ் பியூரோ, மும்பை

காகிதம் : 70 ஜி.எஸ்.எம் கிரீம்வோவ்

அச்சிடும் ஆணை :

அச்சுப்பொறியாளர் :

## தலைமை தயாரிப்பு அதிகாரி

**திருமதி. மிதாலி ஷிதப்**
முக்கிய தயாரிப்பு அதிகாரி

**திரு. ஷஷாங்க் கணிகதளே**
தயாரிப்பு அதிகாரி

## வெளியிடுவோர்

**திரு. ஹேமந்த் பாபர்**
கட்டுப்பாட்டு அதிகாரி
பாடபுத்தக நிறுவன மண்டலம் ப்ரபாதேவி, மும்பை-25

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பகுதி 4A

# குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு **51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;
b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;
c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;
d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;
e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;
f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;
g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;
h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;
i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;
j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;
k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# राज्यगीत

जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।धृ।।

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।१।।

काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ।।२।।

# முகவுரை

பிரிய

மாணவர்களே,

இருபத்தோராவது நூற்றாண்டின் முதல் தேசியக் கல்வி கொள்கை 2020 க்கு ஏற்ப மகாராஷ்டிரா மாநிலத்தால் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி வரலாறு மற்றும் குடிமைப்பணி பாடங்களை அறிமுகப்படுத்தும் நம்மைச் சுற்றியுள்ள உலகம் பகுதி-2 என்ற பாடப்புத்தகம் உங்கள் கைகளில் ஒப்படைக்கப்படுகிறது. அதில் மிகுந்த ஆத்ம திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகிறேன். இந்த பாடம் இயற்கையிலிருந்து தொடங்கி உங்கள் முதல் ஆண்டிலேயே படிக்கத் தொடங்குகிறீர்கள். இந்தப் பாடத்தைப் படிப்பதன் மூலம் உங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறு நிகழ்ச்சிகளைப் புதிய முறையில் அறிந்து கொள்வீர்கள்.

உங்கள் குடும்பத்திலிருந்து இந்தப் பாடப்புத்தகத்தில் ஆர்வம் தொடங்குகிறது. உறவினர், நண்பர், அண்டை வீட்டுக்காரர் மற்றும் அதன் பிறகு உங்கள் அருகிலுள்ள பள்ளி மூலம் உங்களுக்கு அதிக தகவல்கள் கிடைக்கும். உங்கள் சுற்றுப் புறத்தில் உள்ள சந்தைகள் பற்றிய தகவல்களை அறிந்துக் கொள்வீர்கள். அதேபோல் உங்கள் தேவைகள், பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள். நீரின் முக்கியத்துவம்,பாதுகாப்பு, சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறு வரலாற்றுக் கட்டிடங்கள், வடிகால் வசதிகள் இயற்கை பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வீர்கள். நாம் இந்தியாவில் வாழ்கிறோம். எனவே இங்குள்ள பாரம்பரியம், பன்முகத் தன்மை, சமூகத்தில் உள்ள முக்கிய நபர்கள், சமூக சீர்திருத்தவாதிகள் பற்றியும் கற்றுக் கொள்வீர்கள்.

உங்கள் நாட்டில் நீங்கள் ஒன்றுபட்டு வாழ்வதே உங்கள் 'இலக்காக இருக்கும்.

இப்பாடப்புத்தகத்தில் முக்கிய பக்கத்தில் இடம் பெற்றுள்ள படங்கள் இந்தியாவின் பல்வேறு இடங்களைக் காட்டுகிறது. பாடப்புத்தகத்தில் உள்ள பல்வேறு செயல்பாடுகளைச் செய்யும் போது உங்களுக்கு சிறப்பு மகிழ்ச்சி கிடைக்கும். இந்தப் புத்தகத்தில் விவாதம், எழுத்து, படம் பார்த்தல், உற்று நோக்குதல் சிந்தித்தல், கருத்துத் தெரிவித்தல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் எளிதான முறையில் உள்ளன. இதன் மூலம் பாடத்தை நீங்கள் அறிந்துக் கொள்வீர்கள். பாடப்புத்தகத்தில் கவர்ச்சிகரமான படங்கள் உள்ளன. படங்களிலிருந்து எளிதாக புரிந்து கொள்ள முடியும். இது ஒரு விளைமாட்டு-கற்றல் முறையில் உள்ளது. இந்தப் புத்தகம் முழுவதும் மகிழ்வுடன் கற்றல்-கற்பித்தல் முறையில் உள்ளது. நாம் அனைவரும் இந்தப் புதிய பாட உலகிற்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம் மற்றும் இயற்கையின் மூன்றாம் ஆண்டு படிப்பிற்கு வாழ்த்துகள்!

பெற்றோர், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடப்புத்தகத்தில் ஆர்வத்துடன் சில சிரமங்களை எதிர்கொண்டால், பாடப்புத்தகத்தின் கருத்துகளையும் நோக்கங்களையும் எளிதில் அடைய முடியும்.

புனே

**தேதி: 19 ஏப்ரல் 2026**

**இந்திய நேரப்படி: 02 வைசாக் 1048**

**அக்ஷய திருதிய**

**(அனுராதா ஒக்)**

**இயக்குநர்**

பாடப்புத்தக மண்டலம்

புனே.

# நம்மைச் சுற்றியுள்ள உலகம் பகுதி-2

| | | | | |
|---|---|---|---|---|
| பாடத்திட்ட இலக்கு: CG-1 மாணவர்கள் தங்களை சுற்றியுள்ள இயற்கை சமூக கலாச்சார பண்பாடுகளை அறிந்து அதை பாதுகாத்தல் | | | | |
| வரிசை எண் | பாடத்தின் பெயர் | பாடத்திட்டத்திறன் | கற்றல் விளைவுகள் | பக்க எண் |
| 1 | நமது குடும்பம் | C-1.2<br>குடும்பம் மற்றும்ற் சமூக உறவுகள் (மனிதர்கள், விலங்குகள்/ இயற்கை) மற்றும் மரபுகள் (கலை,பண்டிகைகள்) ஆகியவற்றை விவரிக்கிறது | • குடும்பத்தின் பல்வேறு வகைகள் மற்றும் தன்மைகளை விளக்கி உறவுகளைக் கூறுகிறது.<br>i) குடும்பத்தின் வகைகள் மற்றும் தன்மைகளை விளக்குகிறது. | 1,2,3,4,5,6 |
| 2 | குடும்ப வம்ச வரலாறு | C-1.5<br>உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி சொந்தமாகப் பொருட்களை (வம்சாவளி, உறைகள், காகித விலங்குகள்) தங்கள் வீட்டில் (அ) வகுப்பறை அலங்காரத்திற்காக செய்கிறது. | • சொந்த குடும்பத்தின் வம்சாவளியை விளக்குகிறது | 7,8,9,10 |
| 3 | எனது பள்ளி | C 1.4 – உள்ளூர் நிறுவனங்களின் (குடும்பம், பள்ளி, வங்கி, அஞ்சல், அலுவலகம்,சந்தை மற்றும் கிராம பஞ்சாயத்து) செயல்பாடுகளைப் பல்வேறு வடிவங்களில் (கதை, படங்கள், அட்டவணைத் தகவல், அறிக்கை) விளக்கி அவற்றின் பங்குகளை பகுப்பாய்வு செய்கிறது. | • உள்ளூர் நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கூறி அவற்றின் பங்குகளை பகுப்பாய்வுச் சேய்கிறது.<br>i) பள்ளியின் செயல் பாடுகளை விளக்கி அவற்றின் பங்குகளை கருத்தாய்வு செய்கிறது. | 11,12,13,14, 15,16,17 |
| 4 | சந்தை | C1.4<br>உள்ளூர் நிறுவனங்களின் (குடும்பம், பள்ளி, வங்கி, அஞ்சல், அலுவலகம், சந்தை மற்றும் கிராம பஞ்சாயத்து) செயல்பாடுகளைப் பல்வேறு வடிவங்களில் (கதை, படங்கள், அட்டவணைத் தகவல், அறிக்கை) விளக்கி அவற்றின் பங்குகளை கலந்தாய்வு செய்கிறது. | • சந்தையின் செயல்பாடுகளை விளக்கி அதன் பங்குகளை கலந்தாய்வு செய்கிறது | 18,19,20,21, 22,23,24 |
| பாடத்திட்ட இலக்கு: CG-6 சுற்றியுள்ள சூழலில் உள்ள பல்வேறு ஆதாரங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துதல்.<br>CG-4 சமூக மற்றும் இயற்கைச் சூழல்கள் குறித்து உணர்திறனை வளர்த்துக் கொள்ளுதல்<br>CG-9 இந்தியாவின் புகழ்பெற்ற வரலாற்றில் உள்ள மாமனிதர்களின் (குறிப்பாக மகாராஷ்டிராவைப் பொறுத்த வரை) வாழ்க்கை வேலைகளில் ஆர்வம் காட்டுதல். தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அவர்களின் பங்களிப்பு மற்றும் சமூக மாற்றத்தின் பங்கை விளக்குதல். | | | | |
| 5 | உங்கள் தேவைகள் மற்றும் பிரச்ச னைகள் | C-4.3<br>சுற்றியுள்ள சூழலில் உள்ள இயற்கைவளங்களின் பயன்பாட்டை விவரிக்கிறது.<br>C-4.6<br>பல்வேறு சூழ்நிலைகளில் மக்களின் தேவைகளை அடையாளம் காட்டுகிறது உதாரணத்திற்கு: வளங்களின் கிடைக்கும் தன்மை, சம வாய்ப்புகள், வேலைப் பகிர்வு மற்றும் தங்குமிடம் போன்றவை.<br>C- 6.1<br>தனித்தனியாகவோ அல்லது குழுக்களாகவோ குறிப்பிட்ட கேள்விகளைப் பற்றி பொதுவான விசாரனைகளை மேற்கொள்கிறது.<br>C-9.2<br>புத்திசாலித்தனம், தைரியம் மற்றும் விவேகம் ஆகியவற்றால் பிரச்சனைகளை சமாளிக்கமுடியும். இதை பெரியவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள முடிகிறது | • சுற்றுச் சூழலில் இயற்கை வளங்களின் பயன்பாடுகுறித்த தகவல்களை வழங்குகிறது.<br>• மனிதர்களின் அடிப்படைத் தேவைகளைப் பட்டியலிட்டு அவற்றின் முக்கியத்துவத்தை விளக்கவும்.<br>• கிடைக்கக் கூடிய வளங்கள் மற்றும் திறன்களுக்கு ஏற்ப மக்களுக்கு வேலை வாய்ப்பு பகிர்ந்தளிக்கப்படுகிறது, தீர்வுகளைப் பரிந்துரைக்கிறோம்.<br>• மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான வசதி வாய்ப்புகளை கேள்வி பதில் மூலம் அறிதல்.<br>• சமூகத்தில் மக்களுக்குத் தேவையான அடிப்படைக் காரணிகளை பட்டியலிடுதல்<br>• மற்றும் விவேகம் மூலம் எந்த ஒரு சங்கடத்தையும் சமாளிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை உதாரணத்துடன் விளக்குதல். | 26,27,28, 29, 30<br>26,27,28, 29, 30,33,34 31,32,33,34, 35,36 31,32,33,34, 35,36<br>13,14,32,33, 34,35,36,83<br>26,28,29<br>34,36 |

<table>
<tr><td>6</td><td>நீர்பற்றிய விழிப்புணர்வு</td><td>C-9.3<br>நாம் மாபெரும் மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து சமத்துவம், நீதி,சுற்றுச் சூழல் பாதுகாப்பு நீர் குறித்த விழிப்புணர்வு போன்றவற்றைக் கற்றுக் கொண்டு, அதற்கேற்ப செயல்படுகிறோம்</td><td>• நீர் பற்றிய விழிப்புணர்வு என்னும் கருத்தைப் புரிந்துக்கொள்வதன் மூலம் நீர் எழுத்தறிவுத் துறையின் மாபெரும் மனிதர்கள் ஆற்றிய பணிகளை நாம் புரிந்துக் கொண்டு நடைமுறைப்படுத்துகிறோம்</td><td>34,38,47,39,<br>40,41</td></tr>
<tr><td colspan="5">பாடத்தின்நோக்கம்: CG-4 சமூக மற்றும் இயற்கைச் சூழல்கள் மீது உணர்திறனை வளர்த்தல்.<br>CG-2 சுற்றுச் சூழலில் உள்ள ஒன்றோடொன்று தொடர்புடைய தன்மைகளைக் கவனித்து அனுபவிப்பதன் மூலம் ‘‘வசுதேவ குடும்பகம்‘‘ எனும் கருத்தைப் புரிந்துக் கொள்வது.<br>CG-6 பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி சுற்றியுள்ள சூழலில் உள்ள பல்வேறு கேள்விகளுக்குப் பதில்களைக் கண்டறிதல்.<br>CG-8 மனித பரிமான வளர்ச்சியின் 3 நிலைகளையும் ஒவ்வொரு நிலையிலும் ஏற்படும் பண்பாட்டு மற்றும் சமூக மாற்றங்களையும் அறிந்துக்கொள்ளல்.</td></tr>
<tr><td>7</td><td>இந்திய பாரம்பரியம் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை</td><td>C-3.3<br>சுற்றியுள்ள பகுதியில் நிலவும் இயற்கைச் சூழலுக்கும், பண்பாட்டு நடைமுறை களுக்கும் (வேலை வகைகள், உணவு, திருவிழாக்கள் மரபுகள்) இடையேயான தொடர்பை விளக்குகிறது.<br>C-4.2<br>சுற்றியுள்ள பகுதியின் கலாச்சாரப் பன்முகத் தன்மையை(உணவு, உடை, விளையாட்டுகள், வெவ்வேறு பருவர்கள் அறுவடை மற்றும் விதைப்பு தொடர்பான திருவிழாக்கள்) கவனித்து விவரிக்கிறது.<br>C.C.R<br>படைப்பு ஊடகங்கள், வரைப்படங்கள், கவிதைகள், நாடகங்கள், திரைக்கதைகள், விளையாட்டுகள், வாய்மொழி அல்லது எழுத்துப்பூர்வ விளக்கக் காட்சிகள் மூலம் அவதரிப்புகளையும் கருத்துக்களையும் முன் வைக்கிறது.<br>C-8.2<br>கடந்தகால மற்றும் தற்கால பழக்க வழக்கங்கள் மரபுகள் மற்றும் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கண்டறிந்து விளக்குதல்.</td><td>• அறுவடைக் காலம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பண்டிகைகள் மற்றும் உற்சவத்தைப் பற்றிக் கூறுகிறது<br>• அப்பகுதியின் இயற்கைச் சூழல் மற்றும் கலாச்சாரம் இது மரபுகளை இணைக்கிறது<br>• அப்பகுதியில்உள்ள சுற்றுச் சூழல் காரணிகள் குறித்த தகவல்கள்<br>• கலாச்சார பிளவு/பாரம்பரிய பிளவு சுற்றியுள்ள சூழலுடன் தொடர்பை ஏற்படுத்து.<br>• அப்பகுதி மக்களின் உணவு மற்றும் உடை பலவிதம் என்கிறாம்<br>• அப்பகுதியில் உள்ள விளையாட்டுகள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கிறது<br>• பாரம்பரிய விளையாட்டுகள் குறித்த அவதானிப்புகளையும் முடிவுகளையும் முன் வைக்கிறது<br>• பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகுறித்த அவதானிப்புகளையும் முடிவுகளும் பாஞ்சே பரிசுகள்<br>• கடந்தகால மற்றும் தற்கால பழக்கவழக்கங்கள் மற்றும்மரபுகள் பற்றிய தெளிவான தகவல்கள்</td><td>42, 43, 57<br>44, 47,<br>44, 45, 46<br>44, 47, 48, 49<br>44, 47, 48, 49<br>42, 43, 49, 48</td></tr>
<tr><td>8</td><td>போக்குவரத்து</td><td>C-2.3<br>முன்னோர்கள் கூறியவற்றிலிருந்து சுற்றுச்சூழல் மாற்றங்கள், குடும்பம் மற்றும் சமூக மாற்றங்களுக்கு தொழில், உணவுப்படிக்க வழங்கங்கள், வளங்கள் தகவல் தொடர்பு, சடங்குகள் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் இடையேயான தொடர்புகளை விளக்குகிறது.</td><td>• பாரம்பரிய மற்றும் நவீன தகவல் தொடர்பு வழிமுறைகள் குறித்த கருத்தை விளக்குகிறது.<br>i) தகவல் தொடர்பு எனும் கருத்தை விளக்கி அதன் வகைகளைத் விளக்குகிறது.<br>ii) பாரம்பரிய மற்றும் நவீன் தகவல் தொடர்பு வழிமுறைகள்.<br>iii) தொலைத் தொடர்பு காலத்திற்கேற்ப வழிமுறைகளால் ஏற்படும் மாற்றத்தைப் பற்றி விளக்கிக் கூறுகிறது.</td><td>48, 49, 51<br>49, 50, 51, 52,<br>53, 54, 55<br>53, 54, 55<br>49, 50, 51, 52,<br>53, 54, 55<br>49, 50, 51, 52,<br>53, 55</td></tr>
<tr><td colspan="5">பாடத்தின் நோக்கம் : CG-9 இந்தியாவின் புகழ்பெற்ற வரலாற்றைச் சேர்ந்த மாபெரும் ஆளுமைகளின் வாழ்க்கையில் ஆர்வம் குறிப்பாக மகாராஷ்டிராவைப் பொறுத்தவரை தேசிய வளர்சியில் அவர்களின் பங்களிப்பையும் சமூக மாற்றத்தில் அவர்களின் பங்கையும் உருவாக்கி விளக்க வேண்டும்.</td></tr>
<tr><td>9</td><td>வரலாற்று கட்டிடக கலை</td><td>C- 9.5<br>உள்ளூர் பகுதியில் உள்ள வரலாற்றுக் நிகழ்வுகள், கட்டிடங்கள், இடங்கள் நினைவுச்சின்னங்கள் போன்றவைகுறித்த நகல் களைச் சேகரிக்கிறது.</td><td>• உள்ளூர் பகுதியில் உள்ள வரலாற்றுக் கட்டிடங்கள், இடங்களையும் நினைவுச் சினங்களையும் பராமரிக்க வேண்டும், அதனுடன் தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் குறித்த தகவல்களை நாம் சேகரித்துக் கொள்ள வேண்டும்.</td><td>51, 57, 58, 59, 60</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| பாடத்தின் நோக்கம் : CG–9 இந்தியாவின் புகழ் பெற்ற வரலாற்றில் குறிப்பாக மகாராஷ்டிராவின் பின்னணியில்) இடம் பெற்ற மாபெரும் ஆளுமைகளின் வாழ்க்கை மற்றும் பணிகளில் ஆர்வத்தை வளர்ப்பது தேசத்தைக் கட்டமைப்பதில் அவர்களின் பங்களிப்பையும் சமூக மாற்றத்தில் அவர்களின் பங்கையும் விளக்குவது. | | | | |
| 10 | **வீரம் மற்றும் புரட்சியின் கதை** | C- 9.4<br>சமூக சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விழுமியங்களை நிலைநாட்டுவதற்காக புனிதர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் நல்ல செயல்களை அறிந்துக் கொள்ளுதல் மற்றும் இதன் மூலகாரணத்தை அறிந்துக் கொள்ளல்.<br>C- 9.6<br>இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்த மாமனிதர்கள் மற்றும் புரட்சியாளர்களின் வீரக் கதைகளைக் கூறி, அவர்களை பெரிய நாயகர்களாக சித்தரிக்கிறது.<br>C- 9.2<br>சாமர்த்தியம், துணிவு மற்றும் ஞானத்துடன், ஒருவர் இடர்களை வெல்ல முடியும். இதை நாம் மகான்களின் குணநலன்களிலிருந்து கற்றுக்கொள்கிறோம்.<br>C–9.1<br>இது, சத்ரபதி சிவாஜி மகாராஜ் போன்றவர்களின் வரலாற்றின் மாபெரும் ஆளுமைகளின் ஆளுமையில் இடம்பெற்ற பல்வேறு எழுச்சியூட்டும் சம்பவங்களை விவரித்து ஆய்வு செய்கிறது. | • சமூக சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் நீதி ஆகிய விழுமியங்களை நிலைநாட்ட முயன்ற மாபெரும் மனிதர்கள் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளின் கதைகளைக் கூறுவதன் மூலம், எழுச்சியூட்டும் நிகழ்வுகளிலிருந்து நாங்கள் உத்வேகம் பெறுகிறோம்.<br>• உங்கள் சுற்றும் புறத்தில் உன்னத மனிதர்களே, இது சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் புரட்சியாளர்களின் கதைகளைக் கூறுவதோடு அவர்களின் பங்களிப்பு குறித்த தகவல்களையும் வழங்குகிறது.<br>• தனது புத்தி, தைரியம் மற்றும் ஞானத்தைப் பயன்படுத்தி வாழ்க்கைப் பிரச்சினைகளை வெல்கிறார்.<br>• ஒரு மகான் வாழ்க்கையிலிருந்து உத்வேகம் தரும் கதைகள் நிகழ்வுகளை விவரிக்கிறது. | 61, 62, 63, 64<br>61, 62, 63, 64<br>61, 62, 63, 64<br>61, 62, 63, 64<br>61, 62 |
| 11 | **சுற்றுச்சூழல் பாதுகாப்பு என் பொறுப்பு** | C–10.5<br>தூய்மைச் பணிகள் மரம் நடுதல் மற்றும் பிற சமூக நடவடிக்கைகளில் பங்கேற்பதோடு தனது சொந்தப் பொறுப்பையும் உணர்ந்துக் கொள்கிறார். | • அக்கம் பக்கத்து தூய்மைப் பிரச்சாரத்தில் பங்கேற்பதன் மூலம் அவற்றின் முக்கியத்துவத்தைக் கூறுகிறது.<br>• மரம் நடும் செயல்பாட்டில் பங்கேற்பதன் மூலம் மரப் பாதுகாப்புக்கான செயல்பாடுகளை விவரிக்கிறது. | 65, 66,67<br>65, 66,67, 68<br>69, 70 |
| பாடத்தின் நோக்கம் : CG– 9 இந்தியாவின் புகழ்பெற்ற வரலாற்றைச் சேர்ந்த ஒரு மாபெரும் ஆளுமையின் (குறிப்பாக மகாராஷ்டிராவின் பின்னணியில்) வாழ்க்கை வரலாற்றை உருவாக்குதல் தேசத்தைக் கட்டமைப்பதில் அவரது பங்களிப்பையும் சமூக மாற்றத்தில் அவருது பங்கையும் விளக்குதல். (அரசியலமைப்புப் பொறுப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், ஜனநாயகக் கோட்பாட்டைப் புரிய வைப்பதற்கும் பயன்படுகிறது. | | | | |
| 12 | **தேசிய ஒருங்கிணைப்பு** | C–10.3<br>மையக் கூறுகள் குறித்த கருத்தைப் புரிந்துகொண்டு இந்தியாவின் தேசிய ஒற்றுமையை வளர்க்கும் கண்ணோட்டத்தில் அவற்றைப் பயன்படுத்துகிறார். | • தேசிய ஒற்றுமையின் முக்கியத்துவத்தை அடிப்படையாக அங்கீகரிக்கிறது. | 71, 72, 73, 74 |
| 13 | கேளுங்கள் பேசுவோம் மற்றும் அறிந்துக் கொள்வோம். | C–9.2<br>சாதுரியம், தைரியம் மற்றும் விவேகத்துடன் ஒரு சங்கடத்தை எப்படி சாதுரியமாக கையாள்வது என்பதைப் பற்றி மாமனித கதைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.<br>C–10.7<br>அவனுடைய கருத்தை முழு சுதந்திரத்துடன் வெளியிட வேண்டும், மற்றவர்களின் ஆலோசனைகளுக்கும் மரியாதைக் கொடுக்க வேண்டும் மற்றும் எல்லோரிடமும் சமமாக நடந்துக் கொள்ள வேண்டும். | • காபாபூத்குழுவில்தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை அறிதல்.<br>• வெவ்வேறு விஷயங்களில் அவனது யோசனையைக்கூட்டி மற்றவர்களின் ஆலோசனைக்கும் மரியதை செலுத்த வேண்டும். | 75, 76, 77, 78,<br>79, 80 |

**குறிப்பு:** பாடப்புத்தகத்திலுள்ள வரைபடங்கள் கல்வி நோக்கங்களுக்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றை எந்தவொரு புவியியல் அல்லது அரசியல் பயன்பாட்டிற்கும் திட்டநிலையாகக் கருதக் கூடாது. வரைபடங்களைத் தயாரிக்கும்போது அதிகப்பட்ச துல்லியம் பேணப்படுகிறது. இருப்பினும் ஏதேனும் பிழை இருந்தால் அது தொழில்நுட்ப வரம்பு-களால் ஏற்பட்டிருக்கலாம்.

## ஆசிரியர்கள் பாடப்புத்தகத்தை கையாளும் போது கவனிக்க வேண்டியவை

- தேசிய கல்விக் கொள்கையின் முக்கிய நோக்கம் மாநிலத்தில் உள்ள அனைத்து மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதாகும். ஆகவே, பாடப்புத்தகத்தின் தொடக்கப்பக்கங்களில் உள்ள கற்றல் விளைவுகளை அனைவரும் கவனத்தில் கொண்டு கற்பித்தல் செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு பாடத்தையும் கற்பிக்கும் போது, கற்றல் விளைவுகளின் அடிப்படையில் கற்றல் அனுபவங்கள் மற்றும் பல்வேறு செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்.
- பாடங்களில் பல்துறை நோக்கில் பல்வேறு கற்றல் அனுபவங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதை புரிந்துக் கொண்டு, மாணவர்கள் பல்வேறு பாடங்களின் உதவியுடன் ஒருங்கிணைந்த முறையில் கற்றுக் கொள்ள உதவ வேண்டும்.
- பல்வேறு செயல்பாடுகள் மூலம் மாணவர்களின் புரிதலை. அதிகரிக்க முடியும்.
- மாணவர்களுக்கும் பல்வேறு கற்றல் அனுபவங்களை வழங்கும் போது, இந்திய அறிவியல், பஞ்சகோஷம்' போன்றவற்றைப் பற்றிய தகவல்களையும் வழங்கும் திறன் அவசிய மாகும்.
- சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறு கூறுகளின் உருவாக்கம் பாதுகாப்பு, இந்திய கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் பல்வகைமை ஆகியவற்றை அறிமுகப்படுத்த வேண்டும். பாடப்புத்தகத்தில் இதை படங்களின் மூலம் விளக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பல்வகைமையை கோட் இந்திய வரைபடம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் முன்னேற்றத்திற்காக தேசிய ஒற்றுமையை பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. இந்த உணர்வு கற்றல் அனுபவங்களை வடிவமைக்கும் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.
- பாடப்புத்தகத்தில் உள்ள எல்லா வரலாற்றுப் பொருட்கள் மற்றும் முக்கியமான நபர்களின் தகவல்களை முழுமையாக வழங்க இயலாது. எனவே கற்றலில் உள்ளூர் உதாரணங்களைச் சேர்க்க வேண்டும். செயல்பாடுகளில் உள்ளூர் அம்சங்களையும் -இணைக்க வேண்டும்.
- நமது தேவைகள், அவற்றைப் பூர்த்திச் செய்யும் போது வரும் பிறத்தினைகள், சுற்றுச் சூடில் பாதுகாப்பு, நீர்சேமிப்பு போன்ற முக்கிய விஷயங்களில் விழிப்புணர்வை பல்வேறு கற்றல் அனுபவங் களின் மூலம் உருவாக்க வேண்டும்.
- நமது சுற்றுப்புறத்தில் உள்ள வரலாற்று இடங்களை அறிந்து அவற்றின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை மாணார்கள் புரிந்துக்கொள்ள வேண்டும்.
- பாடப்புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு தலைப்பிற்கும் விரிவான விளக்கங்களை அளிக்க இயலாது. ஆசிரியர்கள் பல்வேறு ஆதாரங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு தேவையான தகவல்களை எளிதாகப் புரியும் வகையில் வழங்க வேண்டும்.
- ஆசிரியர்கள் கல்விச் சுற்றுலா போன்றவற்றை ஏற்பாடு செய்ய வேண்டும். மாணவர்களுக்கு நேரடி அனுபவம் அளிக்க வேண்டும். உதாரணமாக, குழந்தைகள், விழாக்கள் வரலாற்று இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், அருங்காட்சியகங்களுக்கு செல்லுதல், சுற்றுலா போன்றவை.
- மாணவர்களின் ஒனிப்ப பட்ட வளர்ச்சிக்காகப் பல்வேறு போட்டிகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

குறிப்பு: சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டின் போது சைகை மொழி மற்றும் பிற துணை கற்பித்தல் முறைகளை பயன்படுத்த வேண்டும். சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்கள் தங்களால் இயன்ற வழிகளில் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

# பொருளடக்கம்


| பாடம் | பக்க எண். |
|---|---|
| 1. நமது குடும்பம் | 1 |
| 2. குடும்ப வம்ச வரலாறு | 7 |
| 3. எனது பள்ளி | 11 |
| 4. சந்தை | 18 |
| 5. நமது தேவைகளும் பிரச்சனைகளும் | 26 |
| 6. நீர் குறித்த விழிப்புணர்வு | 37 |
| 7. இந்தியப் பாரம்பரிய மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை | 44 |
| 8. போக்குவரத்து | 52 |
| 9. வரலாற்றுக் கட்டிடங்கள் | 59 |
| 10. கதை: வீரம் மற்றும் புரட்சியின் | 65 |
| 11. சுற்றுச் சூழல் பாதுகாப்பு | 70 |
| 12. தேசிய ஒருங்கிணைப்பு | 76 |
| 13. கேட்போம், பேசுவோம், புரிந்து கொள்வோம் | 80 |



# 1. நமது குடும்பம்



மீனாவின் வீட்டில் மிகுந்த உற்சாகம் நிலவியது. இன்னும் இரண்டு நாள்களில் அவளுடைய அபி அண்ணனின் திருமணம் நடைபெறவிருந்தது. அதனால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை நிலவியது. மீனா தனக்கு அண்ணி வரப்போகிறார் என்பதால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாளள். மீனாவின் சித்தப்பா - சித்தி, மாமா- மாமி, பெரியப்பா- பெரியம்மா, அத்தை- மாமா அவர்களின் குடும்பம் என அனைத்து உறவினர்களும் திருமணத்தை முன்னிட்டு ஒன்று கூடியிருந்தனர். மாமா-மாமி அவர்களுடைய நான்கு வயது மகனை உடன் கொண்டு வந்திருந்தனர். அனைவரும் அவனுடன் விளையாடிக் கொண்டிருந்தனர் மற்றும் அவனது செயல்களை கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

மீனா அம்மாவின் அப்பா-அம்மா, மீனா அப்பாவின் அப்பா-அம்மா என இரண்டு பாட்டிகளும் தாத்தாக்களும் இருந்தனர். மீனாவிற்கு அவர்களின் அதிகமான அன்பு கிடைத்தது. மீனாவும் அவளது சகோதரர்களும் பெரியவர்களுக்கு உதவி செய்தார்கள். பாட்டி, தாத்தா எல்லா வேலைகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்கள். வந்திருந்த விருந்தினர்களை வரவேற்றார்கள். எல்லா உறவினர்களும் ஒன்றாக சேர்ந்து சிரித்து விளையாடி மகிழ்ச்சியாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

## அறிந்து கொள்வோம்!

**உறவுகள் -** அப்பாவின் சகோதரர், அம்மாவின் சகோதரி, அத்தையின் மகள், மாமாவின் மகன்

## சொல்லிப் பாருங்கள்!

- உங்கள் தாத்தா பாட்டிக்கு எந்த வேலைகளில் உதவுகிறீர்கள்?
- அதில் உங்களுக்கு எந்த வேலை மிகவும் பிடிக்கும்?

மீனாவின் குடும்பத்தில் அவளுடைய அப்பா, அம்மா, சித்தப்பா, சித்தி, தாத்தா, பாட்டி மற்றும் உடன் பிறப்புகள் உள்ளனர். சீமா மீனாவின் உடன்பிறந்த மூத்த சகோதரி ஆவர். அபி அண்ணன் மீனாவின் சித்தப்பா மகன் என்பதால் அவன் மீனா மற்றும் சீமாவின் ஒன்றுவிட்ட சகோதரன் ஆவான். அதாவது மீனாவும் சீமாவும் அபி அண்ணனின் ஒன்று விட்ட சகோதரிகள் ஆவர்.

**நமது குடும்ப அட்டவணையை இந்த முறையில் உருவாக்குவோம். !**




**குடும்பம் என்பது ஒருவருக்கொருவர் உறவு கொண்ட நபர்களின் குழுவாகும். அதன் வகைகள் பின்வருமாறு**

**பெரிய குடும்பம்:** பெற்றோர், தாத்தா-பாட்டி சித்தப்பா-சித்தி மற்றும் உறவினர்கள் ஒன்றாக வாழும் குடும்பம் பெரிய குடும்பம் ஆகும்.



பெரிய குடும்பம்

**சிறிய குடும்பம் :** பெற்றோரும் அவர்கள் குழந்தைகளும் மட்டும் ஒன்றாக வாழும் குடும்பம் சிறிய குடும்பம் ஆகும்.



சிறிய குடும்பம்



விரிவான குடும்பம்

**விரிவான குடும்பம்:** தாய் மற்றும் தந்தை வழி உறவினர்களே நம் விரிவான குடும்பத்தினர் ஆவர். விரிவான குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒரே வீட்டில் ஒன்றாக வசிப்பது இல்லை. இருப்பினும் அவர்கள் அவ்வப்போது ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்கிறார்கள். அவர்கள் ஒருவரையொருவர் கவனித்துக்கொள்கிறார்கள். ஒருவருக்கொருவரின் இன்ப-துன்ப நேரங்களில் பங்கு கொள்கிறார்கள்.



ஒற்றைப் பெற்றோர் குடும்பம்

**ஒற்றைப் பெற்றோர் குடும்பம்:** சில குடும்பங்களில் பெற்றோரில் ஒருவர் மட்டுமே குழந்தைகளை கவனித்துக் கொள்கிறார்கள். குழந்தைகள் அவர்களால் வளர்க்கப்படுகிறார்கள். அத்தகைய குடும்பம் ஒற்றைப் பெற்றோர் குடும்பம் என்றுஅழைக்கப் படுகிறது.

### விவாதிக்கவும்

- மீனாவுக்கு எத்தகைய குடும்பம் இருக்கிறது?
- உங்கள் குடும்பம் எத்தகையது?



சீமாவின் தோழிகளான சுஷ்மிதாவும், யாஸ்மினும் வாசலுக்கு முன்னால் ஓர் அழகான வண்ண கோலமிட்டனர். அபி அண்ணனின் நண்பர்களான டேவிட் மற்றும் குருதீப்பும் பூ மாலைகளால் வீட்டை அலங்கரித்தனர்.

மீனாவின் அண்டை வீட்டாரும் உதவி செய்ய வந்தனர். யார் வீட்டிலாவது விசேஷம் என்றால் அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடுவர். தேவைப்படும் பொழுது ஒருவருக்கொருவர் உதவியும் செய்து கொள்வார்கள். கடந்த ஆண்டு மீனாவின் தாத்தாவிற்கு உடல் நிலை சரியில்லாமல் போனது. அப்போதும் அவர்களின் அண்டைவீட்டார் மிகவும் உதவினார்கள். விடுமுறை நாள்களில் அக்கம் பக்கத்துச் சிறு குழந்தைகள் மாலையில் மீனாவின் தோட்டத்தில் கூடுவார்கள். மீனாவின் பாட்டி அவர்களுக்கு அற்புதமான கதைகளைச் சொல்வார்கள்.

### பார்க்கலாம்!

உங்கள் அண்டை வீட்டாருடன் சேர்ந்து என்னென்ன பண்டிகை கொண்டுகின்றீர்கள்?

### உங்களுக்குத் தெரியுமா?

நாம், நமது குடும்பத்தினர், நமது நண்பர்கள், நம் சக பணியாளர்கள், நமது அண்டை வீட்டார் போன்றோர் சமூகத்தின் அங்கங்கள் ஆவோம். வெவ்வேறு குடும்பங்கள் ஒன்றிணைந்து ஒரு சமூகத்தை உருவாக்குகின்றன.



மீனாவின் வீட்டில் ஒரு நாயும் ஒரு பூனையும் இருந்தன. மோத்யா என்ற அந்த நாய் வீட்டில் இத்தனை பேரைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்தது. அது தன் வாலை ஆட்டிய படி வீட்டைச் சுற்றி நடந்து கொண்டிருந்தது. இரவு உணவிற்கு பிறகு உடன் பிறப்புகள் அனைவரும் பாம்பு- ஏணி விளையாட்டை விளையாட ஆரம்பித்தனர். மோத்யாவும் வந்து அங்கே அமர்ந்தது. ஆனால் பூனை மணிமா வழக்கம் போல் பாலைக் குடித்துவிட்டு மூலையில் தூங்கிவிட்டது.



பாம்பு ஏணி விளையாட்டை விளையாடும் போது

மீனாவின் தோட்டத்தில் ஒரு மூலையில் இரண்டு மண் பானைகள் உள்ளன. தினமும் மீனா அவைகளில் பறவைகளுக்காக தானியமும் தண்ணீரும் வைக்கிறாள்.

- நம்மை சுற்றியுள்ள மரங்களும் விலங்குகளும் பறவைகளும் நம் வாழ்வின் முக்கிய அம்சங்களாகும்.
- நாங்கள் மரங்களை நடுகிறோம். பல்வேறு விலங்குகளையும் பறவைகளையும் பராமரிக்கிறோம்.
- நாம் பல்வேறு பண்டிகைகள் மற்றும் விழாக்கள் மூலம் ஒன்று கூடுகிறோம்; மகிழ்வுடன் கொண்டாடுகின்றோம்.

## எழுதுவோம்!

| வேலை | வீட்டில் யார் இந்த வேலையை செய்கிறார்? |
|---|---|
| சமைத்தல் | |
| வீட்டை சுத்தம் செய்தல் | |
| துணி துவைத்தல் | |
| சந்தையில் பொருள்கள் வாங்குதல் | |
| முதியவர்கள் /நோயாளிகளை பராமரித்தல் | |

★ படங்களில் உள்ளவர்கள் என்ன வேலை செய்கிறார்கள்? என கட்டத்தில் எழுதவும்.









குடும்பம் சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் குடும்ப உறுப்பினர்கள் இணக்கமாக வாழ்கிறார்கள். அவர்கள் ஒருவரையொருவர் கவனித்துக் கொள்கிறார்கள், ஒருவருக்கொருவர் உதவுகிறார்கள், தேவைகளை பகிர்ந்துக் கொள்கிறார்கள். அவர்களுக்குள் ஒருவர் மீது ஒருவருக்கு அன்பும் மரியாதையும் உண்டு. குடும்பச் சூழல் பாதுகாப்பானது. வெவ்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்த பல குடும்பங்கள் ஒன்று கூடுவதால் ஒரு சமூகம் உருவாகிறது. இத்தகைய மகிழ்ச்சியான குடும்பங்கள் இணைந்து, ஒரு மகிழ்ச்சியான சமூகத்தை உருவாக்குகின்றன.

### முயற்சி செய்து பாருங்கள்!

* உங்கள் உறவினர்களைப் பட்டியலிடுங்கள்.
* பக்கத்து வீட்டுக்காரர்களுடன் பழகித் தெரிந்து கொள்ளுங்கள்.

## வீட்டுப்பாடம்

**கேள்வி 1. அது யார்? என்று எழுதுக**

(அ) மாமா மாமியுடன் வந்தார் ------------------------

(ஆ) அனைத்து பணிகளையும் மேற்பார்வையிட்டவர் ------------------------

(இ) முதியவர்களுக்கு உதவியவர் ------------------------

(ஈ) மீனாவின் உறவினர் ------------------------

**கேள்வி 2. அங்கே யார் வசிக்கிறார்கள்? என்று எழுதுங்கள்**



சிறிய குடும்பம்

------------------------
------------------------
------------------------
------------------------



ஒற்றைப் பெற்றோர் குடும்பம்

------------------------
------------------------
------------------------
------------------------



பெரிய குடும்பம்

------------------------
------------------------
------------------------
------------------------

கேள்வி 3. உங்கள் குடும்பத்தில் பின்வரும் உறுப்பினர்கள் என்ன செய்கிறார்கள்? என்பதை எழுதுக.

(அ) அம்மா ..............................................................................

(ஆ) அப்பா ..............................................................................

(இ) பாட்டி ..............................................................................

(ஈ) தாத்தா ..............................................................................

(உ) நீ ..............................................................................

(ஊ) உனது உடன் பிறப்புகள் ..............................................................................

கேள்வி 4. **பின்வரும் கூற்றைத் திருத்தி எழுதுக**

(அ) சீமா மீனாவின் ஒன்று விட்ட சகோதரி ஆவார்.

..............................................................................

(ஆ) விரிவான குடும்பம் தந்தை வழி உறவினர்களை மட்டும் கொண்டது.

..............................................................................

(இ) செல்லப் பிராணிகள் குடும்ப உறுப்பினர்கள் அல்ல.

..............................................................................

கேள்வி 5. **சுருக்கமான பதில்களை எழுதுக.**

(அ) அபி அண்ணனின் திருமணத்தில் யார் யார் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்தார்கள்?

(ஆ) உங்கள் தேவைகளில் எவை குடும்பத்தினரால் பூர்த்திச் செய்யப்படுகிறது?

(இ) உங்களுக்குப் பிடித்த செல்லப்பிராணி எது? அதை நீங்கள் எப்படி பராமரிக்கின்றீர்கள்?

**செயல்பாடு :**

- உங்கள் குடும்ப உறுப்பினர்களின் புகைப்படங்களை எடுத்து அவற்றை ஒரு நோட்டில் ஒட்டி, புகைப்படத்தில் உள்ளவர்களுடன் உங்களுக்குள்ள உறவை கீழே எழுதுங்கள்.
- உங்கள் பகுதியில் உள்ள செல்லப்பிராணிகள் மற்றும் பறவைகளின் பட்டியலைத் தயாரிக்கவும்.

✻✻✻



# 2. குடும்ப வம்சவரலாறு



அலமாரியைக் கிளறிக் கொண்டிருந்தபோது வர்ஷா தன் பெற்றோரின் திருமணப் புகைப் படத்தொகுப்பைக் (ஆல்பம்) கண்டாள். அந்த புகைப்படத்தொகுப்பை அவள் புரட்டி பார்த்தபோது. அதில் அவள் பார்த்த நபர்கள் இன்று பார்க்கும் போது சற்று வித்தியாசமாகத் தெரிந்தனர். அதில் பெற்றோருடன் முழு குடும்பமும் இருந்த ஒரு புகைப்படம் இருந்தது. வர்ஷா அதைப்பற்றி தன் அம்மாவிடம் கேட்டாள். அம்மா அவளிடம் சொல்ல ஆரம்பித்தார்கள். வர்ஷா, இது நம் குடும்பம் முழுவதும் உள்ள புகைப்படம். இதில் உனக்கு யாரையெல்லாம் தெரியும் என்று பார்ப்போம் என்றார். வர்ஷா அந்த புகைப்படத்தைக் கவனமாகப் பார்த்து, தனக்குத் தெரிந்த உறவினர்களின் பெயர்களைக் கூறினாள். இருப்பினும் சிலரை அவளால் அடையாளம் காண முடியவில்லை.

அம்மா, இந்தப் புகைப்படத்தில் இருப்பது யார்?. என்று வர்ஷா தன் அம்மாவிடம் கேட்டாள், ''வர்ஷா அவர் உன் அப்பாவின் பாட்டி'' என்று அம்மா அவளிடம் கூறினார்கள். தன் அப்பாவின் பாட்டியையும், தன் கொள்ளுப் பாட்டியையும் பார்த்ததில் வர்ஷா மிக்க மகிழ்ச்சியடைந்தாள். அதனால் அவள் தன் பெற்றோர், பெற்றோரின் தாய் வழிப்பாட்டி, தன் தாத்தா, பாட்டி, மற்றும் தன் தாத்தாவின் அம்மா ஆகியோரின் புகைப்படங்களைப் பார்க்க முடிந்தது. இதன் மூலம் அவள் தன் தந்தை, தாத்தா, மற்றும் கொள்ளுத்தாத்தா என மூன்றும் தலைமுறைகளைப் பற்றித் தெரிந்து கொண்டாள். ஒரு தலைமுறை என்பது ஒவ்வொரு குடும்பத்திற்கும் முன்பு வாழ்ந்த நபர்களைக் குறிக்கும். இப்போது பாருங்கள்! வர்ஷா தன் குடும்பத்தின் வம்சத்தை, தன் பெற்றோர், தாத்தா, பாட்டி, மற்றும் அவர்களின் பெற்றோர் வழியாகக் கண்டறிய முடிந்தது.



நான் உன் தந்தையின் தாய். உனக்கு நான் யார்?.

-----------------------------

நான் உன் தந்தையின் மகன். உனக்கு நான் யார்?

-----------------------------

நான் உன் தாயின் தந்தை. உனக்கு நான் யார்?.

-----------------------------

நான் உன் அம்மாவின் அம்மா. உனக்கு நான் யார்?

-----------------------------

நான் யார் என்று சொல்லுங்கள்?



நான் உன் தந்தையின் தந்தை உனக்கு நான் யார்?

-----------------------------

நான் உன் தந்தையின் சகோதரன். உனக்கு நான் யார்?

-----------------------------

நான் உங்கள் தந்தையின் மகள். உங்களுக்கு நான் யார்?

-----------------------------

நான் உன் தந்தையின் சகோதரி. உனக்கு நான் யார்?

-----------------------------

**பரம்பரை:**

பரம்பரை: வம்சவரலாறு என்பது தலை முறையாக வரிசைப்படுத்தப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் பட்டியல் ஆகும். அதில் பெற்றோர், தாத்தா, பாட்டி மற்றும் கொள்ளுத் தாத்தா, கொள்ளுப்பாட்டி ஆகியோர்களின் பெயர்கள் அடங்கும்.

பரம்பரை என்பது நம் குடும்பத்தின் சிறிய வரலாறு ஆகும். நமது குடும்பத்தின் வரலாறு நம் வம்சத்தின் மூலம் (பரம்பரை) அறியப்படுகிறது. நமது குடும்பத்தின் முன்னோர்கள் யார் என்பதனை நாம் கண்டறியலாம். நமது வம்சத்தில் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும் குடும்பப் பெயர்களையும் நாம் அறிந்து கொள்கிறோம்



## புரிந்து கொள்வோம்!




வர்ஷாவின் குடும்ப மரம் [பரம்பரை]

**வம்ச வரலாறு (பரம்பரை) ஏன் ஆய்வு செய்யப்படுகிறது?**

- **குடும்ப வரலாற்றை கண்டறிய:** குடும்ப வரலாறு மற்றும் மூதாதையர்கள் பற்றிய தகவல்களைக் கண்டறிய நாம் வம்ச வரலாற்றைப் படிக்கின்றோம்.

- **உறவுகளைப் புரிந்து கொள்ள:** குடும்ப உறுப்பினர்களின் உறவுகளும் அவர்களுக்கு இடையிலான உறவுகளும் வம்ச வரலாற்றின் ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளப் படுகின்றன.

- **பரம்பரைப் பற்றிய தகவல்களைப் பெற:** இந்த முறை ஒரு தனிநபர் அல்லது குடும்பத்தின் உண்மையான அடையாளத்தைக் கண்டறிய உதவுகிறது..

**ஒரு வம்சவரலாறு (பரம்பரை) எவ்வாறு உருவாக்கப்படுகிறது?**

ஒரு குடும்பத்தின் வம்சம் என்பது பெரியமரம். அதாவது குடும்ப மரம் என்ற வடிவில் பதிவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு புதிய தலை முறையின் பிறப்பும் குடும்ப மரத்தின் விரிவாக்கத்தைக் குறிக்கின்றது. குடும்ப மரத்தின் மூலம் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் முன்னோர்களை அறிந்து கொள்கிறார்கள். இதன் மூலம் புதிய தலை முறையானது முந்தைய தலை முறையினரை அறிந்து கொள்கின்றது.



## சுய ஆய்வு

**கேள்வி 1. சரியான இணைகளைப் பொருத்துக**

| ஒரு குழு | பதில்கள் | மறுகுழு |
|---|---|---|
| 1. அம்மாவின் சகோதரர் | ------------- | (அ) அத்தை |
| 2. தந்தையின் சகோதரி | ------------- | (ஆ) சித்தப்பா |
| 3. அம்மாவின் சகோதரி | ------------- | (இ) மாமா |
| 4. தந்தையின் சகோதரர் | ------------- | (ஈ) சித்தி |

**கேள்வி 2. பின்வரும் கூற்றுகள் உண்மையா? என எழுதுக. தவறான கூற்றுகளைத் திருத்தி சரியான கூற்றை மீண்டும் எழுதுக.**

(அ) தலைமுறை என்பது குடும்பத்தில் நமக்கு முன் வந்த நபரைக் குறிக்கும்

[ ]

--------------------------------------------------------------------

(ஆ) தந்தை வழி உறவினர்கள் அனைவருக்கும் ஒரே குடும்பப் பெயர் இருப்பதில்லை.

[ ]

--------------------------------------------------------------------

(இ) வம்ச வரலாற்று ஆய்வின் மூலம் குடும்பங்களின் வரலாறு புரிந்து கொள்ளப்படுவதில்லை. [ ]

--------------------------------------------------------------------



**கேள்வி 3. அடையாளம் கண்டு எழுதுக:-**

| | | | |
|---|---|---|---|
| சில நேரங்களில் சண்டையிடுவான். சில நேரங்களில் என்னைச் சிரிக்க வைப்பான், விளையாடும் போது என்னை அழ வைப்பான், தன் தாயின் கையிலிருந்து உணவைப் பெறுவான். அவன் என்னுடையவன்.<br>____________ | அன்பு மரம். என் இதயத்தின் கூரை, அவள் இல்லாமல் என்னால் இருக்க முடியாது என் தாய் தான் என்<br>____________ | என் அப்பாவின் சகோதரி என்னைக் கொஞ்சுகிறாள், எனக்குப் பொம்மைகளைக் கொண்டு வருகிறாள், இனிப்புகளை சாப்பிட வைக்கிறாள், அவள் எனக்கே உரியவள்.<br>____________ | என் அம்மாவின் சகோதரரை எனக்குப் பிடிக்கும், ஏனென்றால் அவர் என்னை நடைப் பயிற்சி செய்ய சொல்கிறார். என்னுடன் விளையாடுகிறார். எனக்கு உணவு ஊட்டுகிறார். அவர் என்னுடையவர்.<br>____________ |

**கேள்வி 4. இவர்களுடன் உங்களுக்கு உள்ள உறவை எழுதுங்கள்.**

தாய் வழி உறவினர்கள்: ----------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

தந்தை வழி உறவினர்கள்: ----------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------

**கேள்வி 5.** பின்வரும் கேள்விகளுக்கானப் பதில்களை இரண்டு முதல் மூன்று வாக்கியங்களில் எழுதுக

(அ) குடும்ப வம்ச வரலாற்று ஆய்விலிருந்து உங்களுக்கு என்ன தகவல்கள் கிடைக்கின்றது?

(ஆ) ஒரு வம்ச வரலாறு எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது?

**செயல்பாடு**

- உங்கள் பெற்றோருடன் கலந்துரையாடி, உங்கள் தந்தை வழி உறவினர்களின் புகைப்படங்களைச் சேகரித்து ஒரு குடும்ப மரத்தை உருவாக்குங்கள்.
- உங்கள் பெற்றோர் உதவியுடன் உங்கள் தாய்வழி உறவினர்களின் குடும்பப் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.

***





# 3. எனது பள்ளி



**நாங்கள் பள்ளிக்குச் செல்கிறோம்.**

நாம் எழுத வாசிக்க, படிக்க,
விளையாட, உடற்பயிற்சி செய்ய,
ஞானம் பெற பள்ளிக்குச்
செல்கிறோம்.

நாம் பாடல்கள்
பாடுகிறோம்.
நாடகங்கள்
அரங்கேற்றுகிறோம்,
படங்கள் வரைகிறோம்,
நடனமாடுகிறோம்,
புத்திசாலிகளாகிறோம்,
நாம் பள்ளிக்குச்
செல்கிறோம்.

நாங்கள் நண்பர்களுடன்
மகிழ்ச்சியாகப்
பொழுதைக்
கழிப்போம்,
வளர்வோம்,
பெயர் சம்பாதிப்போம்.
நாங்கள் தான்
நாட்டின் எதிர்காலம்.
நாங்கள் பள்ளிக்குச்
செல்கிறோம்.



**எனக்கு என் பள்ளியை மனதின் ஆழத்திலிருந்து மிகவும் பிடிக்கும்.**
**ஒரு தாய் தன் குழந்தையை நேசிப்பதுபோல் நான் இப்பள்ளியை நேசிக்கிறேன்.**

பள்ளி விளையாட்டு மைதானம் வண்ண மயமான கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பள்ளியின் ஆண்டு விழா விளையாட்டுப் போட்டி நடந்து கொண்டிருந்தது. குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர். ஓட்டப் பந்தயத்தில் ரோகித் முதலிடம் பிடித்தான். ரோகித்தின் போட்டியாளரான மிஹிர் ரோகித்தை பாராட்டினார். பின்னர் கபடிப் போட்டிகள் தொடங்கின. அதற்காக நீதாவின் அணி மைதானத்திற்குள் நுழைந்திருந்தது. குழந்தைகள் கூச்சலிட்டு அவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தனர்.



மாணவியரின் கபடி விளையாட்டு



## சொல்லுங்கள் பார்க்கலாம்!

* நீங்கள் பள்ளி விளையாட்டு மைதானத்தில் என்னென்ன விளையாட்டுகளை விளையாடுவீர்கள்?

### பள்ளி என்றால் என்ன?

பள்ளி என்பது நாம் கற்க செல்லும் ஓரிடம். அங்கு நாம் விதிகளைப் பின்பற்ற கற்றுக் கொள்கிறோம். சரியான நேரத்திற்கு பள்ளிக்கு வருவது, பள்ளிச்சீருடை அணிவது, பள்ளி நடைமுறைகளுக்காக வரிசையில் நிற்பது போன்றவற்றின் மூலம் நாம் ஒழுக்கத்தை கற்றுக் கொள்கிறோம். வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் பள்ளியில் படிக்க வருகிறார்கள், அவர்களுடன் எங்களுக்கு நட்புறவு உள்ளது. நாங்கள் எங்கள் நண்பர்களுடன் இணக்கமாக பழகுகிறோம். நாங்கள் ஒருவருக்கொருவர் உதவுகிறோம். நாங்கள் ஒருவரை யொருவர் கவனித்துக் கொள்கிறோம்.

நாம் ஆசிரியர்களை மதிக்க கற்றுக் கொள்கிறோம். பள்ளியில் ஆசிரியர்கள் நமக்கு பல்வேறு பாடங்களைக் கற்பிக்கிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் இடையிலான உறவு ஆசிரியர் - மாணவர் உறவாகும். சமூகத்தில் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் பள்ளியில் கற்றுக் கொள்கிறோம். இந்தக் கல்வி மூலம் நாம் நல்ல குடிமக்களாக ஆகிறோம். நம் வாழ்வில் குடும்பத்தைப் போலவே பள்ளியும் முக்கியமானது.



## உங்களுக்குத் தெரியுமா?

பள்ளிச் சீருடைகள் மாணவர்களிடையே சமத்துவம், ஒழுக்கம் மற்றும் ஒற்றுமை உணர்வை உருவாக்குகின்றன. பள்ளிச் சீருடைகள் மாணவர்களிடையே இந்தப் பள்ளிக்கு தாங்கள் சொந்தமானவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. பள்ளிச் சீருடைகள் அந்தப் பள்ளியின் அடையாளம்.

**கீழேயுள்ள படம் பள்ளிக்குத் தேவையான கருவிகளைக் காட்டுகிறது. அவற்றை அடையாளம் கண்டு, படங்களின் கீழே அவைகளின் பெயர்களை எழுதவும்.**

- **இயற்பியல் கூறுகள்:** கட்டிடம், பலகை, சுண்ணக்கட்டி துடைப்பான், இருக்கைகள், மணி, புத்தகங்கள், குறிப்பேடுகள், பென்சில்கள், அழிப்பான்கள், மறைகாணி(CCTV), ஒளிப்படக்கருவி (Camera), புகார் பெட்டிகள், ஆய்வகங்கள், மைதானங்கள், பாதுகாப்பு சுவர்கள், குடிநீர் வசதிகள், குறிப்பு எழுதுகோல் (Marker pen), தொடுதிரைப் பலகை (Smart board) கரும் பலகை, சரிவுப்பாதைகள், நூலகம், கொல்லைப்புறம், கணினி அறை, முதலுதவிப் பெட்டி, சிறுவர்-சிறுமிகளுக்கான தனித் தனி கழிப்பறைகள், கை கழுவும் இடங்கள், பள்ளிப் பேருந்துகள் முதலியன.





## உங்களுக்குத் தெரியுமா?

பள்ளியில் படிக்கட்டுகளுக்கு அருகில் ஒரு சரிவுப்பாதை கட்டப்பட்டுள்ளது. இந்தச் சரிவுப் பாதை 'சாய்வுப்பாதை' என்று அழைக்கப்படுகிறது. சரிவுப் பாதைகள் மாற்றுத் திறனாளிகள் சக்கர நாற்காலிகளில் பள்ளிக்குச் சென்று வர உதவுகின்றன.



- **மனிதக் காரணிகள் :** மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், முதல்வர்கள், அலுவலகப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், பள்ளி ஊட்டச்சத்து சமையல்காரர்கள் மற்றும் உதவியாளர்கள் போன்றோர் மனிதக்காரணிகள் ஆவர். விராஜின் பள்ளியில் பள்ளி அமைச்சரவைக்கான தேர்தல் நடைப்பெற்றது. பள்ளி அமைச்சரவைக்கு முதலமைச்சர், ஒழுக்கத்துறை அமைச்சர், சுகாதாரத் துறை அமைச்சர். கல்வித் துறை அமைச்சர், கலாச்சாரத்துறை அமைச்சர், மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட இருந்தனர். அனைத்து மாணவர்களும் வாக்களித்தனர். விராஜ் கலாச்சாரத்துறை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே இனி பள்ளியில் நடைபெறும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு அவரே பொறுப்பாளர் ஆவார்.



பள்ளி அமைச்சரவைத் தேர்தல்

**செயல்பாடு: பள்ளித் தூய்மை வாரத்தைக் கொண்டாட உள்ளது. உங்கள் வகுப்பிலிருந்து மூன்று குழந்தைகளை உருவாக்கி கீழே உள்ள அட்டவணையின்படி பணியைப் பிரித்துக் கொள்ளுங்கள்.**

| குழு - அ | குழு - ஆ | குழு - இ |
|---|---|---|
| ---------------------------- | ---------------------------- | ---------------------------- |
| ---------------------------- | ---------------------------- | ---------------------------- |

- பள்ளியில் மாணவர்கள் பல்வேறு பள்ளிப் பணிகளைச் செய்வதற்கானப் பொறுப்பை ஏற்கிறார்கள்.
- பள்ளி நமக்கு அறிவைத் தருகிறது. அது சிக்கல்களைத் தீர்க்கக் கற்றுக் கொடுக்கிறது. அது ஒன்றிணைந்து செயல்பட கற்றுக் கொடுக்கிறது. எனவே பள்ளி என்பது சமூகத்திற்கு மிகவும் பயனுள்ள ஒரு நிறுவனமாகும்.
- பள்ளியில் ஒவ்வொருவரும் பேசுவதற்கும் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும் மற்றவர்களின் எண்ணங்களையும் கருத்துகளையும் கேட்பதற்கும் பழக்கத்தைப் பெறுகிறார்கள். பள்ளியில் நாம் ஜனநாயகத்தின் விழுமியங்களை கற்றுக் கொள்கின்றோம்.

இப்படித் தான் நம் நாடு ஆளப்படுகிறது. இது தான் ஜனநாயகம் ஆகும்.



### பதில் கூறுங்கள்!

* உங்கள் பள்ளியில் உங்களுக்கு மிகவும் பிடித்த இடம் எது?
* நீங்கள் ஒரு நாள் ஆசிரியராக நேர்ந்தால் எதற்கு தயாராவீர்கள்?

### முயற்சி செய்துப் பாருங்கள் !

நிரஞ்சன் ஒரு வரைப்படத்தை வரைந்துள்ளார். உங்கள் வீட்டிலிருந்து உங்கள் பள்ளிக்கு ஒரு வரைபடம் வரையுங்கள்.



வீடு மற்றும் பள்ளி வரைபடத் திட்டம்

**கல்வி உரிமை :** இந்திய அரசு இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 இல் இயற்றப்பட்டுள்ளது. அதன்படி இந்தியாவில் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு.

समग्र शिक्षा Samagra Shiksha

## உங்களுக்குத் தெரியுமா?



மகாத்மா ஜோதிராவ் பூலே

பெண்கல்வி பெறுவதை உறுதி செய்வதற்காக மகாத்மா ஜோதிராவ் பூலேவும் சாவித்திரிபாய் பூலேவும் கடுமையாக உழைத்தனர். மகாத்மா ஜோதிராவ் பூலே 1848 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி பூனேவின் பிடேவாடாவில் ஒரு பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். இது மகாராஷ்டிராவின் முதல் பெண்கள் பள்ளியாகும். ஆரம்பத்தில் மகாத்மா பூலேவும் சாவித்திரி பாய் பூலேவும் இந்தப் பெண்கள் பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். சாவித்திரி பாய் பூலே முதல் இந்தியப் பெண் ஆசிரியர் ஆனார்.




சாவித்திரிபாய் பூலே

## சுய ஆய்வு

**கேள்வி 1. பட்டியல் படுத்துக.**

பள்ளியில் நீங்கள் விரும்பும் விளையாட்டுகள்

| |
|---|
| |
| |
| |
| |
| |

**கேள்வி 2. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள கூறுகளை வகைப்படுத்தி அவற்றைப் பின்வரும் அட்டவணையில் எழுதுக.**

(கட்டிடம், ஆசிரியர்கள், கழிப்பறைகள், தலைமை ஆசிரியர், பள்ளி ஊட்டச் சத்து சமையல்காரர், நூலகம், மாணவர்கள், ஆய்வகம், சாய்வுப் பாதை,பெற்றோர்கள், மைதானம், புகார்ப்பெட்டி, கணினி அறை)

| பௌதிகக் கூறுகள் | மனிதக் கூறுகள் |
|---|---|
| .......................................... | .......................................... |
| .......................................... | .......................................... |

**கேள்வி 3. பின்வரும் செயல்பாடுகளை நிறைவு செய்க.**

பள்ளியில் பின்வரும் நபர்களின் பணிகள் குறித்து ஒரே வாக்கியத்தில் எழுதவும்.



பள்ளி ஊட்டச்சத்து சமையல்காரர்



வகுப்பு ஆசிரியர்



பெற்றோர்



முதல்வர்



சுகாதார அமைச்சர்

**கேள்வி 4. நீங்கள் இங்கே என்ன செய்வீர்கள்?**



படிக்கும் மூலை

---------------------------------------------------

---------------------------------------------------

---------------------------------------------------



விளையாட்டு மைதானம்

---------------------------------------------------

---------------------------------------------------

---------------------------------------------------




கொல்லைப் புறம்

---------------------------------------------------

---------------------------------------------------

---------------------------------------------------

**கேள்வி 5: நீங்கள் பள்ளியில் கற்கும் விஷயங்களை எழுதவும்.**

---------------------------------------------------

---------------------------------------------------

---------------------------------------------------

---------------------------------------------------

### மாற்றுத் திறன்

- மாணவர்களுக்கு என்னென்ன வசதிகள் வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்களின் உதவியுடன் தகவல்களைப் பெற்று எழுதுங்கள்.
- பள்ளிப் படிப்பிற்குத் தொழில் நுட்பத்தின் பயன்கள் குறித்து உங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள். மேலும் தொழில் நுட்பத்தின் பயன்கள் பற்றி எழுதுங்கள்.

***

# 4. சந்தை




சிறுவர் கண்காட்சி: குழந்தைகள் பல்வேறு பொருள்களை விற்கிறார்கள். பெற்றோர்கள் அவற்றை வாங்குகிறார்கள்.

பாலானந்த் கண்காட்சியில் பல்வேறு பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் அமைத்திருந்த கடைகள் ஒரு சந்தையின் சிறு வடிவமாக இருந்தது. நேகாவும், சலீலும் தாங்கள் தயாரித்த பரிசு அட்டைகளை பாலானந்த் கண்காட்சியில் விற்பனைக்கு வைத்திருந்தனர். கண்காட்சி முடிந்த பின்பு அவர்கள் அவற்றை எண்ணிக் கொண்டிருந்தனர்.

''ஓ சலீல், நமக்கு அதிகப்பணம் கிடைத்திருக்கிறது'' என்று நேகா மகிழ்ச்சியுடன் கூறினாள். ''அடுத்த முறை விளக்குகளுக்கு வண்ணம் தீட்டி அவற்றை பரிசு அட்டைகளுடன் சேர்த்து விற்போம்'' என்றான்.

**பதில் கூறுங்கள்!**

- நீங்கள் எப்போதாவது பாலானந்த் போன்ற கண்காட்சியில் கலந்து கொண்டதுண்டா? அங்கு பொருள்களை வாங்கினீர்களா? அல்லது விற்றீர்களா?
- அடுத்த பாலானந்த் கண்காட்சியில் நீங்கள் என்னென்ன பொருள்களை விற்க விரும்புகிறீர்கள்?

சந்தை என்பது பல்வேறு பொருள்கள் வாங்கப்பட்டு விற்கப்படும் ஓர் இடமாகும். பொருள்களை விற்பவர், 'விற்பவர்' என்று அழைக்கப்படுவார். பொருள்களை வாங்குபவர் 'வாடிக்கையாளர்' என அழைக்கப்படுவார். ஒரு சந்தையில் ஏராளமான மக்கள் கூடுகிறார்கள்.



## உங்களுக்குத் தெரியுமா?

பலவகையான சந்தைகள் உள்ளன. நகரங்களிலும் கிராமங்களிலும் சந்தைகள் இருக்கின்றன.




முதலில் கிராமத்தில் உள்ள வாராந்திர சந்தைக்குச் செல்வோம்- வாருங்கள்.

இது ரகு மற்றும் ரமாவின் கிராமத்தில் உள்ள சந்தை. அவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் சந்தைக்கு வந்துள்ளனர்.இது வாராந்திர சந்தை. வாராந்திர சந்தை என்பது வாரத்தில் ஒரு குறிப்பிட நாளில் நடைபெறும் சந்தையாகும். இங்கு ஒவ்வொரு புதன்கிழமையும் சந்தை நடைபெறுகிறது. கிராம மக்கள் வாராந்திர சந்தைக்காக ஆவலுடன் காத்திருக்கிறார்கள். சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் வயல்களில் இருந்து புதிய காய்கறிகளையும் தானியங்களையும் விற்பனைக்காகக் கொண்டு வருகிறார்கள். பல கைவினைஞர்கள் பல்வேறு பொருள்களை விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள். இப்போதெல்லாம் நகரத்திலும் வாராந்திர சந்தைகள் நடைபெறுகின்றன. இங்குள்ள விற்பனையாளர்களும் வாடிக்கையாளர்களும் ஒருவருக்கொருவர் நன்கு அறிமுகமானவர்கள். வாராந்திர சந்தையின்போது அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்கின்றனர்.



வாராந்திர சந்தை

கிராமத்திற்கு அருகில் உள்ள ஒரு திறந்த வெளியில் வாராந்திர சந்தை நடைபெற்றது. சில வியாபாரிகள் தரையில் அமர்ந்தும் பரவியும் இருந்தனர். சிலர் மரபெஞ்சுகளில் தற்காலிகக் கடைகள்அமைத்திருந்தனர். அந்தச் சந்தையில் பச்சை கீரைகள், வண்ணமயமான மலர்கள் புதிய பழங்கள், மசாலாப் பொருள்கள், பலவகையான தின்பண்டங்கள் மற்றும் இனிப்பு பண்டங்களால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பருத்திப் பைகள், தொப்பிகள், புடவைகள், மண் மற்றும் உலோகப் பானைகள், ஆடைகள், விவசாயக்கருவிகள் மற்றும் பல பொருள்கள் விற்பனைக்கு இருந்தன. வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காக வியாபாரிகள் கூச்சலிட்டு தங்கள் பொருள்களை விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தனர். சில இடங்களில் பொருள்களின் விலைத் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. ஒட்டுமொத்தமாக சந்தையின் சூழல் உற்சாகமும் சத்தமும் நிறைந்ததாக இருந்தது.

அப்பா கூறியபடியே ரகு வீட்டிலிருந்து வாங்க விரும்பிய பொருள்களின் பட்டியலைக் கொண்டு வந்திருந்தான்.

**ரமா தன்னுடன் சில சிறிய மற்றும் பெரிய துணிப்பைகளை எடுத்துச் சென்றிருந்தாள்.**



**சிந்தியுங்கள்!**

சந்தைக்குச் செல்லும் போது ஏன் எப்போதும் துணிப்பைகளை எடுத்துச் செல்ல வேண்டும்?

மறுநாள் சிலர் வீட்டில் நோன்பு இருந்ததால் அவர்கள் பழங்கள் வாங்க விரும்பினார்கள்.

புதிய பழங்கள் கொண்ட வண்டி சந்தையின் நுழைவாயிலுக்கு அருகில் இருந்தது. அந்த வண்டியில் எல்லா பழங்களும் அழகாக அடுக்கப்பட்டிருந்தன.

''வணக்கம் மாமா. எனக்கு ஒரு டஜன் வாழைப்பழங்கள் கொடுங்கள்'' என்று ரகு சொன்னான்

''அப்பா நாமும் கொஞ்சம் பேரிக்காய் வாங்கலாம்'' என்று பச்சை நிறப் பேரிக்காய்களைப் பார்த்தபடி ரமா சொன்னாள்.

அப்பொழுது ''ரமாவின் அப்பா ஒரு டஜன் வாழைப்பழங்களும் ஒரு கிலோ பேரிக்காயையும் வாங்கினார்.

காய்கறிகள் வாங்கும்படி ரமா கூறினாள். அப்பா! காய்கறி வாங்கும் போது பாகற்காய் மற்றும் பெருஞ்சீரகக் கீரை தவிர, மற்றவை எதுவாயினும் வாங்குங்கள்'' என்று கூறினான்.

பின்னர் ரமாவிடம் விளக்கமாக அவள் அப்பா கூறினார். ரமா சில காரியங்கள் ஆசையால் செய்யப்படுவதில்லை. தேவையின் காரணமாகவே செய்யப்படுகின்றன. உணவு விஷயத்திலும் அப்படிதான். ஒவ்வொரு காய்கறியிலும் குறிப்பிட்ட ஊட்டச் சத்துகள் உண்டு, அவை எல்லாம் நம் உடலுக்கு கிடைக்க வேண்டும், இல்லையா? இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு, காரம், உவர்ப்பு போன்ற எல்லா சாறுகளையும் நாம் பெற வேண்டும். அப்போதுதான் நம் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உனக்குப் பிடித்த வெண்டைக்காய் மற்றும் ரகுவிற்கு பிடித்த கீரையையும் நாம் எடுத்துக் கொள்வோம்.

ரகு வாங்க வேண்டிய பொருள்களின் பட்டியலைப் பார்த்து விட்டு அப்பாவிடம், ''அப்பா இனி நான் மன்சுக் லால் மாமா கடையில் இருந்து இனிப்புச்சேவு மற்றும் ரவை லட்டு வாங்க வேண்டும்'' என்று கூறவே, அப்பா அவற்றை வாங்கினார். பின்பு அவனது பாட்டி விளக்குத் திரி வாங்கக் கூறியதாகவும் மற்றும் (கெருசுனி) சாம்பிராணி, துடைப்பம் வாங்க கூறியதால், அவற்றையும் வாங்க வேண்டும் என்றான். பக்கத்து வீட்டு அத்தைகளால் சந்தைக்கு வர முடியாததால் இரண்டு கிலோ எலுமிச்சைப் பழம் வாங்கி வர சொல்லியிருக்கிறார்கள் என்றான்.

எல்லா பொருள்களையும் வாங்கி முடித்த பின்பு, ரமாவிற்கு சிவப்பு மற்றும் பச்சைநிற அரக்கு வளையல்களையும் ரகுவிற்கு ஒரு பம்பரத்தையும் வாங்கினார்.

அப்பொழுது வண்ணமயமான கண்ணாடி மணிகள் மற்றும் பித்தளை மணிகள் நிரம்பிய பெரிய கூடைகள் தனக்கு முன்னால் இருப்பதை ரமா கண்டாள். ரமாவின் தோழி வர்ஷாவும் அவள் தாத்தாவும் அங்கு பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்தனர்.

''அவர்களிடம் மாட்டுகள் இருக்கிறது இல்லையா? அவர்கள் தங்களின் அழகான காளைகள் மற்றும் கபில் பசுக்களின் கழுத்தணிக்காக மாலைகளையும் வண்ண மணிகளையும் வாங்கிக் கொண்டிருக்க வேண்டும். மாடுகளை அலங்கரிக்க அவை அவர்களுக்குத் தேவைப்படும்'' என அப்பா கூறினார்.



## உங்களுக்குத் தெரியுமா?

அத்தியாவசியமான பொருள்களை வாங்குவதற்காக சந்தை இருப்பதைப் போலவே, விலங்குகளுக்கும் வாராந்திர சந்தை ஒன்று உள்ளது. சோலாப்பூர் மாவட்டத்தில் உள்ள சாங்கோலாவில் நடைபெறும் வாரச்சந்தை கில்லர் மாடுகளுக்கும் காளைகளுக்கும் புகழ் பெற்றது. இந்தச் சந்தையில் மாடுகள், காளைகள், எருமைகள், ஆடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்குத் தனித்தனியே பிரிவுகள் உள்ளன. ஞாயிற்றுக் கிழமை சந்தை நாளாகும். மாட்டு வண்டி பந்தயங்களுக்காக கில்லர் காளைகளுக்கு அதிகத் தேவை உள்ளது. இது போன்ற சந்தைகள் பல கிராமங்களில் நடைபெறுகின்றன.



சாங்கோலாவில் வாராந்திர கால்நடை சந்தை

கோடைகாலத்தில் பறவைகளுக்கு தண்ணீர் வைப்பதற்காக மண்பாண்டங்கள் ரகுவிற்கு தேவைப்பட்டது. மல்லப்பா என்பவரின் கடையில் மண்பாண்டங்கள் நன்கு கிடைக்கும். அங்கு பரேல் எனப்படும் அகலமாண மண்பாண்டம் வாங்கினார்கள். சந்தையில் ரகு, ரமா மற்றும் அவர்களின் அப்பா ஆகியோர் கரும்புச் சாறு குடித்தார்கள். பின்பு அவர்கள் வாங்கிய பொருள்கள் நிறைந்த பைகளை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார்கள். ரமா, ரகு இருவரும் சேர்ந்து செலவுக் கணக்கை எழுதினார்கள்.

## பல்பொருள் அங்காடி:

பல்பொருள் அங்காடி: என் பெற்றோர் சில சமயங்களில் பல் பொருள் அங்காடிக்குச் செல்வார்கள். மளிகைப் பொருள்கள், காய்கறிகள், ரொட்டிகள், பிஸ்கட்டுகள், சுவர்க்காரம் (Soap), சிகை கழுவி (Shampoo), அழகுச் சாதனப் பொருள்கள், வீட்டு உபயோகப் பொருள்கள், எழுது பொருள்கள் மற்றும் பல பயனுள்ள பொருள்கள் ஒரே கடையில் விற்கப்படும் அங்காடி 'பல்பொருள் அங்காடி' என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக இத்தகைய பல்பொருள் அங்காடிகள் நகரப்புறங்களில் அமைந்துள்ளன.



பல்பொருள் அங்காடி

## வணிக வளாகம்:



வணிகவளாகம்

இது ஒரு வகையான சந்தை. ஒரு பெரிய நகரத்தில் பல மாடி கட்டிடங்களில் பல்வேறு வகையான பொருள்களை விற்கும் ஏராளமான கடைகள் உள்ளன. அங்கு சுற்றி வருவதற்கு நகரும் படி கட்டுகளும். மின் தூக்கிகளும் உள்ளன. ஒரு வணிக வளாகத்தில் காய்கறிகள், பழங்கள், மற்றும் தானியங்களுடன், பொம்மைகள், ஆடைகள், தளவாடங்கள், மின் மற்றும் மின்னணுப் பொருள்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்களும் உள்ளன.

மக்கள் அமர்வதற்கு இடம் உள்ளது. பலவிதமாக உணவு மற்றும் பானங்களை விற்கும் கடைகள் உள்ளன.

இங்கு அனைத்தும் ஒரே ஒரு கூரையின் கீழ் கிடைக்கின்றன. அனைத்து பொருள்களிலும் விலைகள் குறிக்கும் தாள் ஒட்டப்பட்டிருக்கும். அதில் உள்ள வரிக்குறி (Barcoole) அமைப்பு பொருள்கள் வாங்கியதற்கான கட்டணத்தை செலுத்த பயன்படுகிறது. வரிக்குறியை (பார்க்கோட்) துருவு (scan) செய்வதன் மூலம் விலை சரிபார்க்கப்படுகிறது. வாங்கிய பொருளுக்கு ரசீது வழங்கப்படும். வாங்கப்பட்ட பொருள்களுக்கானக் கட்டணத்தை ரொக்கமாகவோ அல்லது இணையக்கட்டணம் (online) மூலமாகவோ செலுத்தலாம்.



### உங்களுக்குத் தெரியுமா?

பொதுவாக சந்தை என்பது தினமும் பொருள்கள் வாங்குவதும் விற்பதும் நடைபெறும் ஓர் இடமாகும். ஒரு குறிப்பிட்ட நாளில் அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும் இதனை ‘சந்தை’ என்று அழைக்கிறோம். வாரச் சந்தை என்ற சொல்லும் இதிலிருந்து தான் பயன்படுத்தப்படுகிறது. பாத்திரங்கள் அல்லது துணி போன்ற ஒரே ஒரு வகை பொருள்கள் மட்டும் விற்கப்படும் சந்தை மொத்த விற்பனை சந்தை, ‘மண்டி’ என்று அழைக்கப்படுகிறது. ‘கஞ்ட்’ எனப்படும் துணிக்களுக்கான மொத்த விற்பனை சந்தை ‘துணி மண்டி’ என்று அழைக்கப்படுகிறது.



### பார்க்கலாம் !

- உன் வீட்டின் அருகே எந்தச் சந்தை இருக்கிறது? உங்களுக்குச் சந்தைக்குச் செல்ல பிடிக்குமா?.
- சந்தை நமக்கு என்ன கற்பிக்கிறது?.

## விவேகமான நுகர்வோராக மாறுங்கள்.

பொருள்களில் கலப்படம், பொருள்களின் விலை உயர்வு, எடை பார்க்கும் கருவிகளில் நடக்கும் மோசடி போன்ற ஏமாற்றப்படுதலில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக நுகர்வோர் இயக்கம் உருவானது. மேலும் நுகர்வோர் பொருள்களை வாங்கும் போது அவற்றின் சரியான அளவையும் சரியான விலையையும் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.






## சுய ஆய்வு

**கேள்வி 1. பெயர்களை எழுதுக**

(அ) பொருள்களை விற்பவர் ____________

(ஆ) பொருள்களை வாங்குபவர் ____________

(இ) பொருள்களை வாங்கும் மற்றும் விற்கும் இடம் ____________

**கேள்வி 2. சந்தையின் வகைகள் மற்றும் அவற்றில் விற்பனை செய்யப்படும் பொருள்களின் கருத்து வரைப்படத்தை முழுமையாக்குங்கள்.**



கேள்வி 3. கடையில் வாங்கிய பொருள்களின் ரசீது படத்தைப் பார்த்து பின்வரும் கேள்விகளுக்கானப் பதில்களை எழுதுங்கள்.

(1) இது என்ன கடை? ---------------

(2) ரசீதில் வாங்கிய பொருள்களின் பெயர்களை எழுதுக. ---------------

(3) ரசீதில் உள்ள பொருள்கள் வாங்கிய தேதியை எழுதுக. ---------------

(4) ரசீதின்படி விற்பனையாளருக்கு எவ்வளவு ரூபாய் செலுத்து வேண்டும்? ---------------

(5) விற்பனையாளர் ஏதேனும் தள்ளுபடி வழங்கினாரா? அப்படி என்றால் எவ்வளவு? -------------

பொருள்களை வாங்குவதற்கான வரி விலைப்பட்டியல்

GSTIN : 27ABCDE1234S1Z9.

## பொம்மையு டன் மகிழுங்கள்

ரங்காலா கடற்கரை, கோலாப்பூர்-416012.

கைபேசி-9999900000
மின்னஞ்சல்: toynjoy@gmail.com

விலைப்பட்டியல் எண் 25-26/099 விலைபட்டியல் தேதி:1-ஜனவரி-2026

| பொம்மைகள் | HSN எண் | வரிஏற்கும் மதிப்பு | GST | | | | வரி உட்பட்ட விலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | CGST மீவிகிதம் மதிப்பிடவும் | | SGST மீமதிப்பிடவும் | | |
| | | | விலை | வரி | விலை | வரி | |
| மின்கலன் ரயில் | 9503 | ₹400 | 9% | 36 | 9% | 36 | ₹472 |
| முச்சக்கர வண்டி | 9508 | ₹300 | 6% | 18 | 6% | 18 | ₹336 |
| | | | | | | | |
| | | | மொத்தச் செலவு | | | | ₹808 |

**கேள்வி 4.** பின்வரும் அட்டவணையை நிரப்புக. (எ.கா இடம் மற்றும் கிடைக்கும் பொருள்கள்)

| வாரச் சந்தை | பல்பொருள் அங்காடி | வணிக வளாகம் |
|---|---|---|
| ------------------------------ | ------------------------------ | ------------------------------ |
| ------------------------------ | ------------------------------ | ------------------------------ |
| ------------------------------ | ------------------------------ | ------------------------------ |
| ------------------------------ | ------------------------------ | ------------------------------ |

**கேள்வி 5.** இவை நடந்ததற்கான காரணத்தை எழுதுங்கள்.

(1) ரமா சந்தைக்குச் செல்லும் பொழுது துணிப்பைகளைத் தன்னுடன் எடுத்துச் சென்றாள்.
(2) ‘‘சில விஷயங்கள் ஆசையால் செய்யப் படுவதில்லை. தேவையின் காரணமாகவே செய்யப்படுகின்றன’’ என்று அப்பா ரமாவிடம் கூறினார்.
(3) விற்பனையாளர்கள் கூச்சலிட்டு தங்கள் பொருள்களை விளம்பரப்படுத்தினார்.
(4) ரகு வீட்டிலிருந்து வாங்க வேண்டிய பொருள்களின் பட்டியலைக் கொண்டு வந்திருந்தான்.

**கேள்வி 6. பின்வரும் கேள்விகளுக்குச் சுருக்கமானப் பதில்களை எழுதுக.**

(1) வாராந்திர சந்தையில் என்னென்ன பொருள்கள் கிடைக்கும்?
(2) ரமாவின் தந்தை சந்தையில் என்ன வாங்கினார்?
(3) பொருள்களை வாங்கும் பொழுது எவற்றில் கவனமாக இருக்கவேண்டும் என்பதனை குறித்த அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதத்தை தயாரிக்கவும்.
(4) வரிக்குறி (Barcode) அமைப்பு எதற்காக பயன்படுத்தப்படுகிறது?

**செயல்பாடு**

- உள்ளூர் சந்தைக்குச் சென்று அங்கு நடக்கும் நிகழ்வுகளைப் பற்றி எழுதுங்கள்.
- உங்கள் பகுதியில் உள்ள ஒரு பிரபலமான சந்தையைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து எழுதுங்கள்.
- பல்பொருள் அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்களுக்குச் சென்று அங்குள்ள உங்கள் அனுபவங்களைப் பற்றி எழுதுங்கள்.

***



# 5- நமது தேவைகளும் பிரச்சனைகளும்







**மேலே உள்ள படத்தைக் கவனியுங்கள்!**

ஒரு மனிதனுடைய அன்றாட வாழ்க்கைக்குப் பல பொருள்கள் தேவைப்படுகின்றன. மேலே உள்ள படத்தில் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு பொருள்கள் தண்ணீர் மற்றும் உணவு ஆகும். ஒரு மனிதனுக்கு வேறு என்னென்ன தேவைப்படும்? என்று சிந்தித்து அவற்றை மேலே உள்ள கட்டங்களில் எழுதவும். காலையில் எழுந்ததிலிருந்து இரவு தூங்க செல்லும் வரை ஒவ்வொரு நாளும் நீங்கள் என்னென்ன செய்கின்றீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். அதைச் செய்வதற்கு நீங்கள் என்னென்ன செய்ய வேண்டுமென்று சிந்தியுங்கள். அந்த விஷயங்கள் ‘தேவைகள்’ என்று அழைக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் வாழ்வதற்கு இன்றியமையாதப் பொருள்கள் அவனது ‘அடிப்படைத் தேவைகள்’ என அழைக்கப்படுகின்றன.

✻ அடிப்படைத் தேவைகள் : **உணவு, உடை, உறைவிடம், சுகாதாரம், கல்வி,**



## யோசிக்கலாம்

**உங்கள் வீட்டில் இரண்டு நாள்களுக்குக் குழாயில் தண்ணீர் வரவில்லை என்றால் என்னவாகும்?.**



**அத்தியாவசியங்கள் மற்றும் விருப்பமானவைகள்:**

இவ்விரண்டிற்கும் இடையே ஏதேனும் வேறுபாடு உள்ளதா?

ஆம்! நிச்சயமாக வேறுபாடு உண்டு. தேவைகள் என்பவை அவை இல்லாமல் நாம் உயிர்வாழ்வது கடினம் என்பதனை குறிக்கும். உதாரணமாக உணவும் நீரும் இல்லாமல் நம்மால் வாழ முடியாது. அதே சமயம் விருப்பமானவை நமது வாழ்க்கையை மிகவும் இனிமையாகவும் வசதியாகவும் மாற்றுகின்றன. எனினும் விருப்பமானவைகள் இல்லாமல் கூட நம்மால் வாழ முடியும்.

**ராஜிவுக்கு இனிப்புகள் மிகவும் பிடிக்கும். அவன் தினமும் அதிகமான இனிப்புகளைச் சாப்பிடுகிறான். இது சரியா?**

அத்தியாவசியமானவை அனைத்தும் விருப்பமானவையாக இருக்க முடியாது. அதேபோல் விருப்பமானவை அனைத்தும் அத்தியாவசியமானதாக இருக்க முடியாது.

சுருக்கமாகச் சொன்னால் தேவைகள் பூர்த்திச் செய்யப்பட வேண்டும். ஆனால் ஆசைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

**பின்வருவனவற்றில் எது தேவை? எது விருப்பமானது? எனத் தீர்மானியுங்கள். தேவை என்பதற்கான கட்டத்தில் தேவை என்றும் விருப்பம் என்பதற்குள்ள கட்டத்தில் விருப்பம் என்றும் எழுதுங்கள்.**

| | |
|---|---|
| 1. தானியம் ..................  ..................... | 2. மென் தட்டை அப்பம் (wafer) மிட்டாய் .......  ..................... |
| 3. குளிர் பானங்கள்  ..................... | 4. வீடு ................  ..................... |
| 5. தண்ணீர் ................  ..................... | 6. பொம்மைகள் ................  ..................... |
| 7. ஆடைகள் ...................  ........... | 8. புத்தகங்கள் ......................  ..................... |

## இப்போது நமது அடிப்படைத் தேவைகளைப் பார்ப்போம்!

**நீர் :** நீர் தாகத்தை தணிக்கிறது. மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் விலங்குகள், பறவைகள், தாவரங்களுக்கும் நீர் இன்றியமையாதது. நீர் இல்லாமல் அவற்றால் உயிர் வாழ இயலாது. அதனால் தான் நீர் 'உயிர்' என்று அழைக்கப்படுகிறது.

மழை நீரானது நீரின் பிரதான ஆதாரம் ஆகும். மேலும் நீர் ஒரு பொதுச் சொத்து ஆகும். அதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு.



### முயற்சிக்கவும் !

உங்கள் வீட்டில் தண்ணீர் எங்கிருந்து எப்படி வருகிறது என்பதனை கீழேயுள்ள கட்டத்தில் ஒரு கருத்து வரைபடத்தின் மூலம் காண்பிக்கவும்.

மழை

↓

முக்கிய ஆதாரம்

↓

..........................................................................

நீர் ஆதாரம் : பல்வேறு நீர்த்தேக்கங்கள்

(ஆறு, அணை, கிணறு, கரைமேடு, ஓடை, ஊற்று, கால்வாய் முதலியன)

↓

..........................................................................

எங்கே சேமிக்கப்படுகிறது?

(அணை, நீர்த்தேக்கம், கிணறு முதலியன)

↓

..........................................................................

எப்படி வீட்டிற்கு வருகிறது?.

(கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள், குழாய்கள், பொது நீர்க்குழாய்கள், நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்றவை)

**உணவு :** மனிதர்கள் உயிர் வாழ நீருடன் உணவும் தேவைப்படுகிறது. அனைவருக்கும் போதுமான மற்றும் ஆரோக்கியமான உணவு கிடைக்க வேண்டும். உணவு வீணாகாமல் இருப்பதை உறுதி செய்வதும் நம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.



### சொல்லுங்கள் பார்க்கலாம்!

- நீங்கள் தினமும் என்னென்ன உணவைச் சாப்பிடுகிறீர்கள்?
- உணவை எங்கிருந்து பெறுகிறீர்கள்?
- வீட்டில் உள்ள அனைவருக்கும் போதுமான உணவு இருப்பதை எப்படி உறுதி செய்வது?





**மேற்கண்ட இடங்களில் நீங்கள் எந்த இடத்தில் வாழ விரும்புகிறீர்கள்? ஏன்?**

**காற்று :** நல்ல ஆரோக்கியத்திற்குத் தூய்மையான காற்று ஒரு முக்கியத் தேவையாகும். தூய்மையானகக் காற்று நமது உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்கின்றது. நுரையீரல் ஆரோக்கியமும் நன்றாக இருக்கும். நாம் ஓடுவதற்கும் மெதுவோட்டம் (Jogging) செய்வதற்கும் உற்சாகம் கொள்கிறோம். சில நேரங்களில் வாகனப்புகை, தொழிற்சாலைப் புகை மற்றும் தூசு துகள்கள் காற்றில் கலக்கின்றன. இது காற்றை அசுத்தமாக்குகின்றது. இது நமது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கிறது.

### சொல்லுங்கள் பார்க்கலாம்!

- உங்கள் பகுதியில் காற்று சுத்தமாக உள்ளதா?
- காற்றைச் சுத்தமாக வைக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

**ஆடை :** வெப்பம், காற்று மற்றும் மழையிலிருந்து உடலைப் பாதுகாக்க ஆடைத் தேவைப்படுகிறது. நாம் வெவ்வேறு பருவங்களில் வெவ்வேறு வகையான ஆடைகளை அணிகிறோம். ஒவ்வொருவரும் தத்தமது தேவைகளுக்கு ஏற்ப ஆடைகளைப் போதுமானதாக வைத்திருப்பது அவசியம்.

**உறைவிடம் :** ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பான உறைவிடம் தேவை. ஏனெனில் உறைவிடம் நமக்குப் பாதுகாப்பை வழங்குகின்றது. உறைவிடம் என்பது நாம் வாழ்வதற்கான ஓரிடம். நாம் தங்குமிடமே நமது வீடு. நாம் கிராமத்தில் வாழ்கிறோமா? அல்லது நகரத்தில் வாழ்கிறோமா? நாம் வசிக்கும் இடத்தில் காலநிலை எப்படி இருக்கிறது? அங்கு என்னென்ன வசதிகள் கிடைக்கின்றன? என்பவற்றை பொறுத்தே நமக்கு எத்தகைய வீடு அமைய வேண்டும் என்பது தீர்மானிக்கப்படுகின்றது.




**ஆரோக்கியம் :** நல்ல பழக்க வழக்கங்களும் நல்ல உணவும் நல்ல ஆரோக்கியத்திற்கு வழிவகுப்பன ஆகும். வழக்கமான உடற்பயிற்சியும், யோகா, பிராணாயமும் நாம் ஆரோக்கியமாக இருக்க உதவுகின்றன. நமது உடல் ஆரோக்கியம் நன்றாக இருந்தால் மட்டுமே நம்மால் நமது அன்றாடப் பணிகளைச் செய்யவும் நம்மையும் நமது குடும்ப உறுப்பினர்களையும் கவனித்துக் கொள்ளவும் முடியும். மக்கள் பல்வேறு காரணங்களால் நோய்வாய்ப்படலாம். அத்தகைய நேரங்களில் முறையான சிகிச்சையையும் மருந்துகளையும்

பெறுவது அவசியம். இதற்காக கிராமங்களில் ஆரம்ப சுகாதார மையங்கள் இருக்கின்றன. நகரங்களில் சிறிய மற்றும் பெரிய மருத்துவமனைகள் உள்ளன. அனைவருக்கும் அவரவர் தேவைக்கு ஏற்ப மருந்துகள் வழங்கப்படுகின்றன.

- **நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**
- நல்ல ஆரோக்கியத்தைப் பேண என்ன செய்யலாம்?

**கல்வி :** சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் கல்வி அவசியம்.கல்வி அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காக அரசாங்கம் பல்வேறு திட்டங்களைத் தீட்டுகிறது. கல்வியின் மூலம் நாம் பல விஷயங்களைப் புரிந்து கொள்கிறோம். சிந்திப்பது, சிக்கல்களைத் தீர்ப்பது, புதிய விஷயங்களை உருவாக்குவது போன்றவற்றை நாம் கல்வியின் மூலம் அடைகிறோம். உணவு, உடை, இருப்பிடம், உடல் நலம் மற்றும் கல்வி ஆகியவை மனிதர்களின் அடிப்படைத் தேவையாகும். ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்வதற்கு ஒவ்வொருவரின் அடிப்படைத் தேவைகளும் பூர்த்திச் செய்யப்பட வேண்டும்.



**சொல்லுங்கள் பார்க்கலாம்!**

- உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உங்கள் சமூகத்தையும் பற்றிச் சிந்தித்து பாருங்கள். வேறு ஏதேனும் தேவைகள் இருப்பதாக தெரிகிறதா?
- கல்வி மற்றும் சுகாதாரம் குறித்த உங்கள் எண்ணங்களைப் பகிருங்கள்.

**துப்புரவு பணியாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், காவல்துறையினர், ராணுவ வீரர்கள் என்னென்ன தேவைகளைப் பூர்த்திச் செய்கிறார்கள்?**

**இயற்கை வளங்கள் :** வளங்கள் என்பவை நம்மை சுற்றியுள்ள, பயனுள்ள மற்றும் நமது வாழ்க்கையை மேம்படுத்த நாம் பயன்படுத்தக் கூடிய அனைத்துக் கூறுகளும் ஆகும்.

தேவைகளைப் பூர்த்தி செய்ய வளங்கள் தேவைப்படுகின்றன. நமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இயற்கையிலிருந்து கிடைக்கும் மற்றும் நமது சுற்றுச் சூழலில் இருக்கும் பொருள்களை நாம் பயன்படுத்துகிறோம். அந்தப் பொருள்கள் இயற்கை வளங்கள் என்று அழைக்கப்படுகின்றன. உதாரணமாக, ஓர் இயற்கை வளமான நீரை நாம் சிக்கனமாகவும் செலவழிக்க வேண்டும் கவனமாகவும் பயன்படுத்த வேண்டும். மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களில் பணம், சொத்து, போக்குவரத்து சாதனங்கள், இயந்திரங்கள் போன்றவை அடங்கும்.



இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களை அடையாளம் காண்க

**நமது பிரச்சனைகள்:**

நமது தேவைகளை நாம் புரிந்து கொண்டோம். இப்பொழுது நமது பிரச்சனைகளைப் புரிந்துக்கொள்ளப் போகிறோம். பிரச்சனைகள் என்பவை அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளப் படும் சிரமங்கள் ஆகும். ஒரு நபர் நல்ல வாழ்க்கை வாழ்வதற்கு தேவையானவற்றை எளிதில் அணுக முடியாத நிலையே பிரச்சனைகள் ஆகும்.

ஜெகனின் கிராமத்தில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. நீர்த்தேக்கத் தொட்டியில் தண்ணீர் இல்லை. ஆறுகள் வற்றி விட்டன, கிணறுகளும் வற்றிவிட்டன. அணையின் நீர் மட்டம் குறைந்து விட்டது. அவரது கிராம மக்களுக்கு அன்றாட பயன்பாட்டிற்குக் கூட தண்ணீர் கிடைப்பதில்லை. அவர்கள் கிராமத்தில் உள்ள பிரச்சனை போதுமான தண்ணீர் கிடைக்காதுதான்.

உணவுப் பற்றாக்குறை ஒரு பெரிய பிரச்சனையாகும். இதற்கான காரணங்கள் பின்வருமாறு இருக்கலாம். உதாரணமாக ஈரவறட்சி, வறண்ட வறட்சி, குறைந்த அளவு விவசாய நிலம், பணவீக்கம், போர் போன்றவை ஆகும்.

**சொல்லுங்கள் பார்க்கலாம்!**

உங்கள் பகுதியில் உள்ள பிரச்சனைகள் யாவை? அவற்றுக்கு என்ன தீர்வுகள் காண முடியும்?









மேலே உள்ள படங்களில் நீங்கள் என்னென்ன பிரச்சனைகளைக் காண்கிறீர்கள்? அந்தப் பிரச்சனைகள் நமது அன்றாட வாழ்வில் என்னென்ன சிரமங்களை ஏற்படுத்துகின்றன?

நம்மில் சிலர் பிறவி நோய் அல்லது விபத்து காரணமாக உடல் குறைபாடுகளுடன் வாழ்கின்றனர். அவர்கள் பொது இடங்களில் நடமாடும்போது பல சிரமங்களையும் அசௌகரியங்களையும் கடந்து செல்ல வேண்டியுள்ளது. எனவே அவர்களுக்குச் சிறப்புச் சேவைகளும் உதவியும் தேவைப்படுகின்றன.



## சொல்லுங்கள் பார்க்கலாம்!

பார்வையற்ற ஒருவர் வெள்ளைக் கைத்தடியுடன் தெருவில் நடந்து செல்கிறார். இந்தச் சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

வெள்ளைக் கைத்தடியின் உதவியுடன் பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் பொது இடங்களில் சுதந்திரமாக நடமாட முடியும்.அவர்களால் தொட்டுணரும் எழுத்து முறையைப் (பிரெய்ல்) பயன் படுத்திப் படிக்கவும் எழுதவும் கணக்கு செய்யவும் முடியும்.




பிரைய்லி எழுத்துகள்

### சொல்லுங்கள் பார்க்கலாம் !

பள்ளிப் படிகட்டுகளுக்கு அருகில் உள்ள சரிவுப் பாதையின் நோக்கம் என்ன?



சில சமயங்களில் பிறவியிலேயோ அல்லது விபத்து காரணமாகவோ ஒருவரின் கால் செயலிழந்து விடுகிறது. அத்தகைய நிலையில் அந்த நபரால் படிக்கட்டுகளில் ஏறவோ இறங்கவோ முடிவதில்லை. இதற்காக சரிவுப் பாதைகள் பயன்படுத்தப்படுகின்றன. சரிவுப் பாதைகள் சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்கள் கட்டிடத்திற்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் வழிவகை செய்கின்றன. சில இடங்களில் சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்களுக்கென பிரத்யேகக் கழிப்பறை வசதிகளும் உள்ளன.

### சொல்லுங்கள் பார்க்கலாம் !

உங்களுக்கு சைகை மொழி தெரியுமா?

காது கேளாதவர்களுக்கு என ஒரு சைகை மொழி உள்ளது. பேசுபவரின் உதடு அசைவுகளையும் சைகைகளையும் கவனிப்பதன்மூலம் சொல்லப்படுவதைப் புரிந்து கொள்ளும் நுட்பம் அவர்களுக்குத் தெரியும். தொலைக்காட்சியில் காது கேளாதவர்களுக்காகச் சைகை மொழியில் சிறப்புச் செய்தி நிகழ்ச்சிகள் உள்ளன.

மாற்றுத் திறனாளிகளுக்குத் தடையற்ற சூழலை உருவாக்குவது அவசியம். பள்ளிகள், பல்வேறு அலுவலகங்கள், பொதுக் கட்டிடங்கள், சுகாதார மையங்கள், பொழுது போக்கு மையங்கள் போன்றவற்றில் அவர்கள் எளிதாக நடமாடுவதற்குகாக அரசாங்கம் பல்வேறு வசதிகளை ஏற்படுத்த முயன்று வருகிறது.



சைகை மொழி

- **பாடப்புத்தகத்தின் தொடக்கத்தில் வழங்கப்பட்டுள்ள விரைவு பதிலளிப்புக் குறியீடு (QR CODE) உள்ள இணைப்பிலிருந்து சைகை மொழியைப் புரிந்து கொள்ளுங்கள்.**

## உங்களுக்குத் தெரியுமா?



**முரளிகாந்த் பெட்கர் :** இவர் சாங்கலியைச் சார்ந்தவர். ஜெர்மனியில் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹைடெல்பெர்க்கில் பாரா - ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. இந்தப் போட்டியில் இவர் ஓர் உலக சாதனைப் படைத்ததுடன், முரளிகாந்த் பெட்கர் நமது நாட்டிற்காக தங்கப் பதக்கத்தையும் வென்றார். இவருக்கு 2018 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது, முரளி காந்த் பெட்கர் இந்திய ராணுவத்தில் பணியாற்றினார். 1965 ஆம் ஆண்டு நடந்த இந்தியா- பாகிஸ்தான் போரின் போது இவர் துப்பாக்கி குண்டுகளால் காயமடைந்தார். இதன் காரணத்தால் இவர் மாற்றுத்திறனாளி ஆனார். இருப்பினும் அவர் குத்துச்சண்டை, ஈட்டி எறிதல் மற்றும் குண்டு எறிதல் ஆகியவற்றிலும் சிறந்து விளங்கினார்.



**ஷீதல் தேவி :** ஷீதல் தேவி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்தவர் . மாற்றுத் திறனாளிகளுக்காக நடத்தப்பட்ட போட்டியில் இவர் வில்வித்தை விளையாட்டில் கலந்து கொண்டு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். இந்தச் சிறப்புச் சாதனைக்காக இந்திய அரசு இவருக்கு அர்ஜுனா விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது.

## சுய ஆய்வு

**கோடிட்ட இடங்களைச் சரியான விடைகளால் நிரப்புக.**

(அ) குடிநீர் இங்கு ............... சுத்திகரிக்கப் படுகிறது.

(1) கிணறு தோண்டுதல் (2) தண்ணீர் தொட்டி

(3) நீர் சுத்திகரிப்பு மையம் (4) தொழிற் சாலை

(ஆ) கிராமத்தில் இந்த இடத்தில் ................. மருந்து கிடைக்கிறது.

(1) கிராமஞ்சாயத்து (2) வங்கி

(3) ஆரம்ப சுகாதார நிலையம் (4) பள்ளிகள்

(இ) நாம் இயற்கை வளங்களை ................ பயன்படுத்த வேண்டும்

(1) விரும்பியபடி (2) எப்போதாவது

(3) ஏராளமாக (4) சிக்கனமாக

**வினா 2. பின்வரும் கூற்றுகளுக்கானக் காரணங்களை எழுதுக.**

(1) நாட்டில் அவ்வப்போது உணவு பற்றாக்குறை ஏற்படலாம்.

(2) ஒருவர் தனது ஆசைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(3) நீர் ‘உயிர்’ என்று அழைக்கப்படுகிறது.

**வினா 3. பின்வரும் கூற்றுகளைப் படித்து, அவற்றால் கிடைக்கும் நன்மைகளை எழுதவும்.**

(1) உணவு வீணாவதைத் தடுப்பது அனைவரின் பொறுப்பாகும்.

(2) அனைவருக்கும் பாதுகாப்பானத் தங்குமிடம் கிடைக்க வேண்டும்.

(3) அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பது அவசியம் ஆகும்.

(4) சமுதாயத்தில் உள்ள அனைவரும் கல்வி பெற வேண்டும்.

**வினா 4. பின்வரும் கருத்து வரைப்படத்தை நிரப்புக.**




**வினா 5. பின்வரும் சூழ்நிலைகளில் நீங்கள் என்ன செய்வீர்கள் ?**

(1) திருமணங்களில் மக்கள் உணவை வீணடிக்கிறார்கள்.

(2) மாற்றுத்திறனாளி ஒருவர் சாலையைக் கடக்கிறார்.

(3) என் பக்கத்து வீட்டு ரமேஷ் ஒழுங்காக பள்ளிக்குச் செல்வதில்லை.

(4) கவிதா எப்போதும் குளிர்பானங்களை மகிழ்ச்சியுடன் குடிப்பாள்.

**கேள்வி 6. உங்கள் பள்ளியில் சர்வதேச யோகா தினம் எப்போது கொண்டாடப்படுகிறது ?- கூறுங்கள்.**

**செயல்பாடு**

- வெவ்வேறு பருவகாலங்களில் மக்கள் அணியும் ஆடைகளின் படங்களைச் சேகரித்து அவற்றின் கீழே பெயர் பட்டியை எழுதவும்.
- உங்கள் பெற்றோரின் உதவியுடன் மாற்றுத் திறனாளிகள் அரசாங்கத்திடம் இருந்து பெறும் உதவிகளை, வசதிகளை கேட்டு எழுதவும்
- தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் இந்திய மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களின் சாதனைகள் குறித்து தற்போதைய தகவல்களை இணையத்தின் மூலம் பெறுங்கள்



ஜூன் 21- சர்வதேச யோகா தினம்

***



# 6. நீர் குறித்த விழிப்புணர்வு





**துளி துளியாக நீர் சேர்ந்து ஓடுகிறது.**
**அதை நிலத்தில் ஊறச் செய்வோம்.**
**நீர் என்பது உண்மையான செல்வம்-அதை**
**நீண்ட காலம் சேமித்து வைத்துக் கொள்வோம்.**

நீர் என்றால் தண்ணீர். நீர் சேமிப்பு என்றால் நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதை சேமித்து பயன்படுத்துவது ஆகும். நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த முயற்சிச் செய்ய வேண்டும்.

சந்த் ஞானேஸ்வரின் ‘ஞானேஸ்வரி’ என்ற நூலில் நீரின் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது

**‘‘நகரங்களில் நீர்த்தேக்கங்கள் அமைக்க வேண்டும்’’**



**சந்த் ஞானேஸ்வர்**

பெரிய வனங்களை வளர்க்க வேண்டும் அதாவது நகரங்களில் நீர்த்தேக்கங்கள் உருவாக்க வேண்டும். மரங்களை நட்டால் தான் தண்ணீர் பற்றாக்குறை பிரச்சனைக் குறையும் என்பதனை நாம் உணர வேண்டும்.

நமக்கு வாழ தண்ணீர் அவசியம். தண்ணீரின் முக்கிய மூலமானது மழை. மழை எப்போதும் எல்லா இடங்களிலும் சமமாக பெய்யாது. சில இடங்களில் குறைவாகவும், சில இடங்களில் அதிகமாகவும் பெய்யும். சில இடங்களில் மழை இல்லாததால் வறட்சி ஏற்படுகிறது. எனவே நாம் தண்ணீரைச் சரியாக திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும்.

### உங்களுக்குத் தெரியுமா?

முன்பு லாத்தூர் நகரத்தில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. அந்த நேரத்தில் அரசு ரயிலின் மூலம் அங்கு தண்ணீர் வழங்கியது.

இந்தியாவில் மழை ஒரு குறிப்பிட்ட காலத்தில் பெய்யும். அதை நாம் மழைகாலம் என்று அழைக்கிறோம். அந்த மழை நீரைச் சரியாக பயன்படுத்தவும் சேமிக்கவும் நதிகளில் அணைகள் கட்டப்படுகின்றன. அணைகளில் சேமிக்கப்பட்ட நீரைச் சுத்திகரித்து குழாய்களின் மூலம் மக்களிடம் கொண்டு செல்கிறார்கள்.

### சற்று பார்ப்போம்!

* நீரை சேமிக்க நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

இந்தியாவில் நீர் மேலாண்மை முறைகளுக்கு பழங்காலத்திலிருந்தே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகத்தில் வீடுகளின் வளாகத்திலேயே கிணறுகள் இருந்தன. அவற்றின் மூலம் குடிநீர் கிடைத்தது. பின்னர் கௌதம புத்தரின் காலத்தில் துறவிகள் வசிப்பதற்காகப் பல மடாலயங்கள் தோண்டப்பட்டன. பயணத்தின் போது சிறிது ஓய்வெடுக்கவும் பருவமழைக் காலங்களில் சில நாள்கள் தங்குவதற்கும் குகைகள் பயன்படுத்தப்பட்டன. அவர்கள் குடிப்பதற்காக அங்கு மழை நீரை சேமித்து வைத்தனர். அது 'பன்போதி' என்று அழைக்கப்படுகிறது. மகாராஷ்டிராவில் உள்ள ஜுன்னாரைச் சுற்றித் தோண்டப்பட்ட மடாலயங்களில் இத்தகைய நீர்த்தேக்கங்கள் காணப்படுகின்றன. பேரரசர் அசோகர் கிணறுகளைத் தோண்டி பக்தர்களுக்கு நீர் வழங்கினார்.



சிவனேரிக் கோட்டையில் உள்ள நீர்த்தேக்கம்

சிகர் ஷிங்னாபூர் என்பது சதாரா மாவட்டத்தின் மான் தாலுகாவில் உள்ள ஓர் இடமாகும். சம்புமகா தேவர் கோயில் அமைந்துள்ள மலையில் தண்ணீர் வசதி இல்லை. சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் தாத்தாவான மாலோஜிராஜே போஸ்லே அங்கு ஒரு பெரிய ஏரியைக் கட்டினார்.



ஷிகர் ஷிங்னாபூரில் உள்ள சிவதீர்த் ஏரி



கங்கா சாகர் ஏரி-ராய்காட் கோட்டை

சத்ரபதி சிவாஜி மகாராஜ் கோட்டையை சுற்றியுள்ள நீரை முதலில் பார்த்த பின்னரே கோட்டையைக் கட்ட வேண்டும் என்று கூறியிருந்தார். அதாவது குடி நீர் கிடைக்கும் இடத்தில் தான் கோட்டையைக் கட்ட வேண்டும். சத்ரபதி சிவாஜி மகாராஜ் ராய்காட்டில் நீருக்காகச் சிறிய மற்றும் பெரிய ஏரிகளைத் தோண்டினார். இந்த ஏரிகளில் மழை நீரைச் சேமிக்க அவர் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். நீர்த் தேக்கங்களைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டும் என்றும் நீரை விவேத்துடன் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

புண்யஸ்லோக் அஹில்யாபாய் ஹோல்கர் கிணறுகளைத் தோண்டி ஏரிகளையும் குளங்களையும் உருவாக்கினார். இது அனைவருக்கும் தண்ணீர்க் கிடைக்க வழிவகுத்தது. அவர் நீர் நிலைகளை அமைத்து அவ்வழியே செல்பவர்களுக்கும் தண்ணீர் வழங்கினார். உதாரணமாக இகத்புரியில் உள்ள சிறந்த கிணறு, ஜெஜுரியில் உள்ள மல்ஹர் கௌதமேஷ்வர் ஏரி போன்றவை ஆகும்.



இகத்புரியில் உள்ள சிறந்த கிணறு



ஜெஜுரியில் உள்ள மல்ஹர் கௌதமேஸ்வர் ஏரி




**நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு:** வீடுகளின் கூரைகள், கட்டிடங்களின் சரிவுகள், மலை உச்சிகள் மற்றும் தரையில் விழும் மழை நீர் வீணாக்கப்படாமல் சிறப்பு முறையில் தொட்டிகளில் சேமிக்கப்படுகிறது அல்லது நிலத்தில் கழிவு நீர்த் தொட்டிகளை உருவாக்கி வெளியேற்றப்படுகிறது. இது நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கிறது. கிணறுகள் நீரால் நிரம்புகின்றன. மண்ணின் ஈரப்பதம் தக்க வைக்கப்படுகிறது. சுற்றுச் சுழல் சமநிலை பேணப்படுகிறது. மரம் நடுதல் மற்றும் மரம்வளர்ப்பு ஆகியவை மண் அரிப்பைத் தடுக்கின்றன. மரங்களின் வேர்கள் நீரை நிலத்தினுள் ஊடுருவச் செய்ய உதவுகின்றன.



## உங்களுக்குத் தெரியுமா ?

'வன்ராய்' என்பது புனேவில் மோகன் தாரியாவால் நிறுவப்பட்ட ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆகும். வன்ராய் அணைகள் இந்த அமைப்பால் கட்டப்பபட்டது. இது குறைந்த செலவில் கட்டப்பட்ட ஓர் அணையாகும். ஓர் ஓடையில் அல்லது வடிகாலில் ஓடும் நீரைத்தடுத்து நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்க உதவுகிறது. இது விவசாயத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்தப்படுகிறது.

**நீர் பாதுகாப்பு:** பூமியில் நன்னீர் ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன.மழை எல்லா இடங்களிலும் சமமாக பெய்வது இல்லை. எல்லா இடங்களிலும் அதன் அளவு ஏறக்குறைய மாறுபடுகிறது. மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. எனவே தண்ணீருக்கானத் தேவையும் அதிகரித்து வருகிறது. இத்தகைய நேரத்தில் தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டியது அவசியம். அத்துடன் நன்னீர் ஆதாரங்களைத் தூய்மையாக வைத்திருப்பதும் நீர் மாசுப்பாட்டைத் தடுப்பதும் அவசியமாகும்.

## உங்களுக்குத் தெரியுமா?

**நீர் மறுபயன்பாடு காலத்தின் தேவையாகும்:** சதாரா மாவட்டத்தில் உள்ள ஜகத்வாடியில் கழிப்பறைகளிலிருந்து வெளியேறும் நீர் வடிகட்டப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு பழத்தோட்டங்கள், தோட்டங்கள் மற்றும் சுத்தம் செய்வதற்கு மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு நீர் மீண்டும் மீண்டும் பயன்படுத்த அனுமதிக்கப்படுக்கிறது. நீர் மறுபயன்பாட்டு செயல்முறை நகரங்களில் அதிகமாக காணப்படுகிறது.

## சிந்தியுங்கள்!

- உங்கள் வீட்டில் பயன்படுத்திய தண்ணீரை எப்படி மறுபயன்பாடு செய்கிறீர்கள்?

**தண்ணீரைச் சேமிக்க சிறந்த பழக்கங்கள்-**

* தேவையான அளவு தண்ணீரை மட்டும் பயன்படுத்தவும்.
* குழாய்களைத் திறந்து விடாதீர்கள். கசிவுள்ள குழாய்களைச் சரிசெய்ய வேண்டும்.

நீர் சுத்திகரிப்பு என்பது தண்ணீரை தூய்மைப்படுத்துவதாகும். பல்வேறு காரணங்களால் நீர் மாசுப்படுகிறது. அதாவது அதில் தீங்கு விளைவிக்கும் கூறுகள் கலக்கின்றன. மாசடைந்த நீரைத் தனிப்பட்ட பயன்பாட்டிற்கோ அல்லது விவசாயத்திற்கோ பயன்படுத்தினால், அது உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும். எனவே நீர் சுத்திகரிப்பு அவசியமாகும்.



நீர் மாசுப்பாட்டிற்கான காரணங்கள்



## சொல்லுங்கள் பார்க்கலாம்!

* நீர் மாசுப்பாட்டிற்கான காரணங்கள் எவை?
* நீரைச் சுத்திகரிக்கும் முறைகள் யாவை?



டாக்டர் இராஜேந்திர சிங்

**இந்தியாவின் நீர் மனிதர்:** இராஜஸ்தானில் உள்ள மார்வாட் பகுதியில் மழை அரிதாகவே பெய்கிறது. மக்களுக்கு அன்றாடப் பயன்பாட்டிற்கும் விவசாயத்திற்கும் தண்ணீர் கிடைப்பதில்லை. டாக்டர். ராஜேந்திர சிங் அதே பகுதியில் வளர்ந்தவர். அவர் தண்ணீர்ப் பற்றாக்குறையை அனுபவித்திருந்தார். இதற்குத் தீர்வாக, அவர் மண் அணைகள் கட்டத் துவங்கினார். மண் அணைகள் மழை நீரைத் தடுத்தன. இந்த மண் அணைகளுக்கு 'ஜோஹாட் திட்டம்' என்று பெயர் . ஜோஹாட் திட்டம் செயல்படுத்தப்பட்ட இடங்களில் எல்லாம் காலம் செல்லச் செல்ல அப்பகுதி மேலும் பசுமையானது. இந்தப் பணியின் காரணமாக அவர் பிற்காலத்தில் இந்தியாவின் 'நீர் மனிதர்' என்று அறியப்பட்டார்.



அண்ணா ஹசாரே

மகாராஷ்டிரா மாநிலத்தின் அகில்யா நகர் மாவட்டத்தில் உள்ள ரலேகன் சித்தி கிராமத்தில் அண்ணா ஹசாரேயும் ஹிவாரே பஜார் கிராமத்தில் போபட்ராவ் பவாரும் கிராமங்களில் நீர் மட்டத்தை அதிகரிக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.



போபட்ராவ் பவார்



### உங்களுக்குத் தெரியுமா?

* மகாராஷ்டிராவில் மே பத்தாம் தேதி நீர் பாதுகாப்புத் தினமாக கொண்டாடப்படுகிறது. உயிரினங்களுக்கு நீர் ஓர் இன்றியமையாத மூலப்பொருள் ஆகும். எனவே நீரைப் பாதுகாப்பதும் சேமிப்பதும் அனைவரின் பொறுப்பாகும். நாம் நீர் குறித்த விழிப்புணர்வு பெற்று நீரைச் சேமிக்க வேண்டும்.



## சுய ஆய்வு

**கேள்வி 1. காரணத்தை எழுதுக**

(1) அவர்கள் ஆற்றின் மீது ஓர் அணையைக் கட்டுகிறார்கள்.

(2) லாத்தூர் நகரத்திற்கு ரயில் மூலம் தண்ணீர் வழங்கப்பட வேண்டியிருந்தது.

(3) சத்ரபதி சிவாஜி மகாராஜ் ராய்காட்டில் நீர் விநியோகத்திற்கு ஏற்பாடு செய்தார்.

(4) டாக்டர். இராஜேந்திர சிங் மண் அணைக் கட்டினார்.

**கேள்வி 2. பின்வரும் கேள்விகளுக்கானப் பதில்களைப் இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் எழுதுக.**

(1) உங்கள் பகுதியில் உள்ள நீர்மாசுப்பாடு குறித்து உங்கள் பெற்றோருடன் கலந்துரையாடி அதற்கான தீர்வுகளை எழுதுங்கள்.

(2) டாக்டர். இராஜேந்திர சிங் ஏன் இந்தியாவின் ‘நீர் மனிதர்’ என்று அழைக்கப்படுகிறார்?.




**கேள்வி 3. பின்வரும் படத்தைப் பார்த்து கீழே உள்ள கேள்விகளுக்கானப் பதில்களை எழுதவும்.**

(1) படத்தில் கொடுக்கப்பட்டுள்ள நீர்க்குப்பி எவ்வளவு நீர்க்கொள்ளும்?

(2) நீர்க்குப்பியின் (Bottle) விலை எவ்வளவு?

**கேள்வி 4. நிலத்தடி நீர் பாதுகாப்பு குறித்த பின்வரும் பத்தியைப் படித்து அதன் கீழே உள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**

**நிலத்தடி நீர் பாதுகாப்பு:** வீடுகளின் கூரைகள், கட்டிடங்களின் சரிவுகள், மலை உச்சிகள் மற்றும் தரையில் விழும் மழை நீர் வீணாக்கப்படாமல் சிறப்பு முறையில் தொட்டிகளில் சேமிக்கப்படுகிறது அல்லது கழிவு நீர்த் தொட்டிகளை உருவாக்குவதன் மூலம் நிலத்தில் உறிஞ்சப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் அதிகரிக்கிறது. கிணறுகள் நிரம்புகின்றன. மண்ணின் ஈரப்பதம் தக்க வைக்கப்படுகிறது. சுற்றுச் சூழல் சமநிலைப் பேணப்படுகிறது. மரங்களை நட்டு வளர்ப்பது மண் அரிப்பைத் தடுக்கிறது. மரங்களின் வேர்கள் நிலத்தின் நீரைத் தக்க வைக்க உதவுகின்றன.

(1) மழை நீர் எங்கே விழுகிறது?

(2) நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு என்ன காரணம்?

(3) மழை நீர் மண்ணில் ஊடுருவ என்ன செய்யப்படுகிறது?

(4) இந்தப் பத்தியின் அடிப்படையில் இரண்டு முழக்கங்களை உருவாக்கி எழுதவும்.

### செயல்பாடு

- மகாராஷ்டிராவில் மே 10 ஆம் தேதி ‘நீர்ப் பாதுகாப்பு தினமாக’ கொண்டாடப் படுகிறது. உங்கள் ஆசிரியரின் உதவியுடன் அது பற்றியத் தகவல்களைப் பெற்று சுருக்கமான விளக்கத்தை எழுதுங்கள்.



சுவையான நீருக்கான சத்தியாகிரகம்

- பெற்றோர்களின் உதவியுடன் ‘‘ஜல்யுக்த் ஷிவார் யோஜனா’’ மற்றும் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் திட்டங்கள் குறித்த தகவல்களைப் பெற்று இத்திட்டங்களின் நன்மைகளைப் பற்றிச் சுருக்கமாக எழுதுங்கள்.
- ஒரு பகுதியில் மழைப்பொழிவு எவ்வாறு அளவிடப் படுகிறது? ஆசிரியர்களின் உதவியுடன் பயன்படுத்தப்படும் கருவிகளைப் பாருங்கள்.
- மகாராஷ்டிராவில் உள்ள அணைகளின் படங்களை வட்டமிட்டு அவற்றை ஒரு நோட்டில் ஒட்டவும்
- அப்பகுதியில் உள்ள ஆறுகள் தொடர்பான பொருள்களை சேகரிக்கவும்.



# 7. இந்தியப் பாரம்பரிய மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை



கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் நம் நாட்டின் என்னென்ன பன்முகத்தன்மை காணப்படுகிறது ?

## வேற்றுமையில் ஒற்றுமை:



இந்திய தேசம் வெவ்வேறு பாரம்பரிய கலாச்சாரம் கொண்ட அழகான தேசம் ஆகும். நமது இந்திய வரலாறு மிகவும் பழமை வாய்ந்தது.

இந்தியா பல்வேறு கலாச்சாரங்கள், மொழிகள், மரபுகள் கொண்ட ஒரு நாடாகும். எவ்வளவு வேறுபாடுகள் இருந்தாலும் அனைவரும் இந்தியர்கள் என்ற ஒருமைப்பாட்டுடன் வாழ்கிறார்கள். இதுவே பன்முகத்தன்மையில் ஒற்றுமை எனப்படுகிறது.

### கலாச்சாரம் என்றால் என்ன ?

கலாச்சாரம் என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கைமுறை ஆகும். அதில் அடங்குபவை : மொழி, உடை, உணவு, திருவிழாக்கள், மத வழிபாட்டு முறைகள், கலை மற்றும் திறமைகள், இலக்கியம் மற்றும் பாரம்பரியம் போன்றவை இதில் அடங்கும்.

## திருவிழாக்கள்:

இந்தியாவின் பல பகுதிகளில் பல்வேறு திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இதில் பல திருவிழாக்கள் விவசாயம் மற்றும் காலநிலையுடன் தொடர்புடையவை. விவசாயம் இந்தியாவின் முக்கிய தொழிலாக இருப்பதால் இந்தியா ஒரு விவசாய நாடு என்று அழைக்கப்படுகிறது.



இந்தியாவின் பலவகையான திருவிழாக்கள்



பைல்போலா

பைல் போலா என்பது இந்திய கலாச்சாரத்தின் ஒரு முக்கியமான திருவிழா ஆகும். இந்த நாளில் எருதுகள் (மாடுகள்) வழிப்டப்படுகின்றன. விவசாயிகளுக்கு உழவுத்தொழில் மற்றும் பிற வேலைகளில் எருதுகள் மிகுந்த உதவி செய்கின்றன.

மகாராஷ்டிராவைத் தவிர இந்தியாவின் மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம்,தமிழ்நாடு போன்ற பல மாநிலங்களிலும் இந்த மாட்டுத் திருவிழா கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் இந்த விழா வெவ்வேறு பெயர்களிலும் முறைகளிலும் வெவ்வேறு நாள்களிலும் கொண்டாடப்படுகிறது.

மகாராஷ்டிராவில் இது ''போலா'' என்ற பெயரில் அறியப்படுகிறது. மராத்துவாடா பகுதியில் இது ஆவணி மாத அமாவாசை நாளில் கொண்டாடப்படுகிறது. மேற்கு மகாராஷ்டிராவில் இது பத்ரபத மாத அமாவாசையில் கொண்டாடப்படுகிறது. நாக்பூர் பகுதியில் சில இடங்களில் 'பெரிய போலா' மற்றும் அடுத்த நாள் 'சின்ன போலா' என இரண்டு நாள்கள் கொண்டாடப்படுகிறது. சத்தீஸ்கர் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் இதை 'போலா', கர்நாடகாவில் 'கோபூஜை' மற்றும் பெண்டி, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் 'எருவாக் பூர்ணிமா', தமிழ்நாட்டில் ''மாட்டுப்பொங்கல்'' போன்ற பல பெயர்களில் இந்த விழா நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. வட மற்றும் மேற்கு இந்தியாவின் சில இடங்களில் இதை 'கோவர்தன் அல்லது கோதன்'என்றும் அழைக்கின்றனர்.



## கண்டுபிடிக்கலாம்




- மகாராஷ்டிரா -பைல் போலா/ பெரிய போலா/சிறிய போலா
- சத்தீஸ்கர்/மத்திய பிரதேசம்-போலா
- வடக்கு மற்றும் மேற்கு இந்தியா கோவர்தன்/கோதன்
- கர்நாடகா-பெந்துர்/பேண்டி
- தமிழ்நாடு-மாட்டுப்பொங்கல்
- தெலுங்கானா/ ஆந்திரப்பிரதேசம்- இருவாக் பூர்ணிமா

இந்த திருவிழாவை முன்னிட்டு வீடுகளில் தோரணம் கட்டி, வாசலில் கோலம் போடப்படுகிறது. எருதுகளை எண்ணெய் தடவி குளிப்பாட்டி சுத்தமாக வைப்பர் கொம்புகளுக்கு வண்ணங்கள் பூசப்படுகின்றன. முதுகில் அழகான அலங்காரம் செய்யப்படுகிறது. கொம்புகளில் அலங்காரங்கள் அணிவிக்கப்படுகிறது. கழுத்தில் மணி மற்றும் வண்ணமயமான மாலைகள் அணிவிக்கப்படுகின்றன. இசைக்கருவிகளுடன் எருதுகள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகின்றன. வீட்டுக்கு முன் கொண்டு வந்து அவற்றுக்கு ஆரத்தி எடுக்கப்படுகிறது. அவற்றை வழிபட்டு பலகாரங்கள் நிவேதனம் செய்யப்படுகிறது. அந்த நாளில் எருதுகளுக்கு முழு நாள் ஓய்வு அளிக்கப்படுகிறது.

**பலவேறு மதம் மற்றும அவற்றின் விழாக்கள்**

| மதம் | விழா |
|---|---|
| இந்து | தீபாவளி, கணேஷ் சதுர்த்தி, தசரா |
| புத்த | .............................. |
| ஜைன | மகாவீர் ஜெயந்தி, பர்யுஷன் பர்வ |
| முஸ்லீம் | .............................. |
| கிறிஸ்தவ | நாதால் / கிறிஸ்துமஸ் |
| பார்சி | .............................. |
| சீக்கிய | குருநானக் ஜெயந்தி |

தீபங்களை ஏற்றி கொண்டாடப்படும் ‘தீபாவளி’ இந்தியாவின் ஒரு பெரிய திருவிழா ஆகும். இது குடும்ப ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சியின் விழாவாகும். கணேஷ் சதுர்த்தி மற்றும் நவராத்திரி போன்றவை இந்துகளின் முக்கியமானத் திருவிழாக்கள் ஆகும்.

புத்த மதத்தினருக்கு ‘புத்த பூர்ணிமா’ முக்கியமானது. ஜைன மதத்தினருக்கு ‘மகாவீர் ஜெயந்தி’ மற்றும் ‘பர்யுஷண் பாவா’ முக்கியமானவை. ‘ஈத்-உல்- பிதர்’என்பது முஸ்லீம்களின் பெரிய திருவிழா ஆகும். ‘கிறிஸ்துமஸ்’என்பது கிறிஸ்தவர்களின் திருவிழா ஆகும். பார்ஸிகள் ‘நவரோஸ்’ கொண்டாடுகின்றனர். சீக்கியர்கள் ‘குருநானக் ஜெயந்தி’கொண்டாடுகின்றனர். இவ்வாறான அனைத்து திருவிழாக்களும் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் மகிழ்ச்சியுடன் கலந்துக் கொண்டு ஒருவருக்கொருவர் வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றனர்.

‘சுதந்திர தினம்’ மற்றும் ‘குடியரசுதினம்’ போன்றவை தேசிய திருவிழாக்கள் ஆகும். இவை நாடு முழுவதும் உள்ள அனைத்து குடிமக்களாலும் பெரும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகின்றன.

திருவிழாக்களில் மக்கள் ஒன்று கூடுகிறார்கள். அவற்றில் ஒற்றுமையின் உணர்வு உருவாகிறது. திருவிழாக்களில் பாடல், நடனம், ரங்கோலி / கோலப் போட்டி, விளையாட்டு இடம் பெறுகின்றன. இதனால் கலைகள் அனைத்தும் வளர்கின்றன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கிராமக் கடவுள்களின் திருவிழாக்கள் கிராம மக்களை ஒன்று சேர்க்கின்றன.

## உணவில் வேறுபாடு:

இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்களின் உணவில் வேறுபாடு காணப்படுகிறது. பஞ்சாபி மக்களின் உணவில் பருப்பு, சப்பாத்தி முக்கியமானவை. கடற்கரைப் பகுதி மக்கள் மீனையும் அரிசி உணவையும் சாப்பிடுகிறார்கள். இதுபோல் சில பகுதிகளில் சில தனித்துவமான உணவுப் பொருள்கள் உள்ளன. மகாராஷ்டிராவில் பூரண்போளி, தென்னிந்தியாவில் இட்லி, சாம்பார் போன்ற உணவுகள் அந்தந்தப் பகுதிகளின் தனிச்சிறப்பாக உள்ளன.



## ஆடை வகைகளில் வேறுபாடு:



இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்களின் ஆடை வகைகள் வேறுபடுகின்றன. காஷ்மீரில் ஆண்கள் பைஜாமா, குர்தா அணிகிறார்கள். இராஜஸ்தானில் பெண்கள் வண்ணமயமான பாவாடைகள் மற்றும் மிக அழகிய கனமான வளையல்களையும் அணிகிறார்கள். நாகாலாந்து, மிசோரம் போன்ற கிழக்கு மாநிலங்களில் பெண்கள் கால் அகலமான பைஜாமா,குர்த்தி அணிகிறார்கள். இந்தியாவில் பெண்களின் பாரம்பரிய ஆடையான சேலை மிகவும் பிரபலமானது.

ஆண்களின் ஆடை வகைகளிலும் வேறுபாடுகள் உள்ளன. சிலர் பைஜாமா அணிகிறார்கள். சிலர் கைலி/ லுங்கி அணிகிறார்கள் . சிலர் பேண்ட் அணிகிறார்கள். சட்டை, குர்தா, ஜிப்பா, சதர், ஜாக்கெட் அல்லது கோட் அணிகிறார்கள். சிலர் தலையில் தொப்பி அணிகிறார்கள். வெவ்வேறு பகுதிகளில் தொப்பிகளின் வகைகளும் மாறுபடுகின்றன.

## விளையாட்டு :

இந்தியாவில் பலவகையான விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன. லகோரி, கிட்டிப்புள், கல்லா மண்ணா, கபடி,குஸ்தி போன்றவை பாரம்பரிய விளையாட்டுகளாக உள்ளன.

வழுவு கம்பம் விளையாட்டு உடலை சுறுசுறுப்பாகவும் புத்திக் கூர்மையை வளர்க்கவும் உதவுகிறது. இந்தியாவில் பழங்காலத்திலிருந்தே விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன.

நம் வாழ்க்கையில் விளையாட்டுக்கு முக்கிய இடம் உண்டு. விளையாட்டின் மூலம் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு வளர்கிறது. தலைமைத்துவம் என்ற குணம் வளர்ச்சி அடைகிறது. விளையாட்டில் வெற்றி-தோல்வியை விட உற்சாகம் முக்கியம். விளையாட்டில் சிறப்பு விதிகள் உள்ளன. அந்த விதிகளை விளையாட்டு வீரர்கள் பின்பற்ற வேண்டும்.



### தெரியுமா உங்களுக்கு?

கபடி என்ற இந்திய விளையாட்டு இப்போது உலகளவில் அங்கீகாரம் பெற்றுள்ளது. டாக்காவில் நடந்த உலகப் போட்டியில் இந்திய மகளிர் கபடி அணி வெற்றி பெற்றது.



உலகச் சாம்பியன் இந்திய கபடி மகளிர் அணி 2025



### தெரியுமா உங்களுக்கு?

- காஷாபாத் ஜாதவ் சதாராவில் வசிப்பவர். அவர் இந்திய ஃப்ரீஸ்டைல் மல்யுத்தவீரர். அவர் 1952 ஹெல்சின்கி ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்றார். சுதந்திர இந்தியாவுக்கு ஒலிம்பிக் பதக்கம் பெற்றுத் தந்த முதல் இந்தியர் ஆவார்.



காஷாபாத் ஜாதவ்



கோனேரு ஹம்பி

- கோனேரு ஹம்பி ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவர் இந்தியாவின் மிக இளம்வயது பெண் கிராண்ட் மாஸ்டர். இவர் சதுரங்க விளையாட்டில் மிகவும் திறமை வாய்ந்தவர்.

- திவ்யா தேஷ்முக் 19 வயது. இவர் நாக்பூரைச் சேர்ந்தவர். சதுரங்க விளையாட்டு விளையாடுகிறார், 2025இல் மகளிர் சதுரங்க உலகச் சாம்பியன் ஆனார். திவ்யா தேஷ்முக் ஆசிய சதுரங்கப் போட்டி, உலக சிறுவர் சதுரங்கப் போட்டி, இளைஞர் சதுரங்கப் போட்டிகளில் தங்கப் பதக்கங்கள் வென்றுள்ளார்.



திவ்யா தேஷ்முக்

## நாட்டுப்புறக் கலை

நாட்டுப்புறக் கலை நமது கலாச்சார பாரம்பரியம். இந்தியக் கலையின் மூலம் நாம் எளிதாக மகிழ்ச்சி அடைகிறோம். மக்கள் கல்வி பெறுகிறார்கள். கலாச்சாரம் பாதுகாக்கப்படுகிறது.

இராஷ்டிரசந்த் காட்கேபாபா தனது கீர்த்தனைகள் மூலம் கல்வி மற்றும் தூய்மையின் முக்கியத்துவத்தை மக்கள் மனதில் பதிய வைத்தார். அசத், மக்கள் விரும்பி அன்னாயாவ் சாத்தே, ஷாஹிர் அமர் ஷேக் மற்றும் திகவன்கள் தங்கள் படைப்புகள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

துறவிகள் மக்களுக்குச் சமத்துவச் செய்தியை வழங்கினர். அவர்கள் மக்களுக்கு சமத்துவக் கருணை, அகிம்சை, மற்றவருக்கு உதவுதல், சேவை, சமத்துவம், சகோதரத்துவத்தின் நற்பண்புகளைக் கற்பித்தார்கள்.துறவி துக்காராம், முக்தாபாய், ஜனாபாய், சொய்ராபால், கன்ஹோபாதீரா, புனித பனாபாய், ஷியூர்கர் போன்றோர் தனது கீர்த்தனைகள், அபங்கங்கள் மற்றும் சொற்பொழிவுகள் மூலம் பொது விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

பஞ்சாபின் பாங்டா, கர்நாடகாவின் யஷகானா, கோவா, நாகாலாந்து மற்றும் மேகாலயாவின் குச்சுப்புடி நடனம், அஸ்ஸாமின் பிஹூ நடனம், குஜராத்தின் கோலாட்டம், கும்மியாட்டம், இராஜஸ்தான் கூமர்நடனம், மகாராஷ்டிராவின் லாவணி நடனம் ஆகியவை அந்தந்த மாநிலங்களுக்குச் சிறப்பு வாய்ந்த ஒரு கலை ஆகும். பல்வேறு மாநிலங்களில் ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை போன்ற பல்வேறு வடிவங்களும் காணப்படுகின்றன. நம் நாட்டில் கலை, உணவு, மொழி, உடைகள்,பண்டிகைகள் பாரம்பரியங்கள் என பன்முகத்தன்மை உள்ளது. அப்படி இருப்பினும் வேற்றுமையில் ஒற்றுமை என்பது நமது நாட்டின் சிறப்பியல்பு ஆகும்.

## மகாராஷ்டிராவின் பல்வேறு நாட்டுப்புற கலைகள்


லாவணி


போவாடா


தசாவதாரம்


பஜன், கீர்த்தனை


பாரூட்


கோந்தல்


தமாஷா


கோலி நடனம்


பஞ்சாப்-பாங்கடா


கர்நாடகா யஷ்கானம்


கோவா-பொய்க்கால் குதிரை ஆட்டம்


நாகலாந்து/ மேகலாயா மூங்கில் நடனம்


குஜராத் -கர்பா மற்றும் தாண்டியா


ராஜஸ்தான்-கூமர்


அஸ்ஸாம்-பிகூ


மகாராஷ்டிரா-லாவணி

பல்வேறு மாநில நடனங்கள்

நம் நாட்டில் கலை, உணவு, மொழி, உடைகள், பண்டிகைகள், பாரம்பரியங்கள் ஆகியவற்றில் பன்முகத்தன்மை உள்ளது. எனினும் வேற்றுமையில் ஒற்றுமை என்பது நமது நாட்டின் சிறப்பியல்பு ஆகும்.

## சுய ஆய்வு

கேள்வி 1. கருத்துப்படத்தை பூர்த்தி செய்க.



**கேள்வி 2. மாநிலங்களில் கொண்டாடப்படும் பண்டிகைகளை எழுதுக**

| மாநிலம் | திருவிழா |
|---|---|
| (1) மகாராஷ்டிரா | ---------------------------------------- |
| (2) ஆந்திரப் பிரேதேசம் | ---------------------------------------- |
| (3) தமிழ்நாடு | ---------------------------------------- |
| (4) கேரளா | ---------------------------------------- |

**கேள்வி 3. கீழே உள்ள அட்டவணையை நிரப்புக**

| மாநிலம் | ஆடை | உணவுமுறை |
|---|---|---|
| பஞ்சாப் | ---------------<br>--------------- | ---------------<br>--------------- |
| ---------------<br>--------------- | ---------------<br>--------------- | பூரன்போளி |
| இராஜஸ்தான் | ---------------<br>--------------- | ---------------<br>--------------- |

**கேள்வி 4. மகாராஷ்டிராவில் என்னென்ன விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன?**

(1) ----------------------------------------------------------------

(2) ----------------------------------------------------------------

(3) ----------------------------------------------------------------

(4) ----------------------------------------------------------------

**கேள்வி 5. இணைக்க:**

| மாநிலம் | நாட்டுப்புறக்கலை |
|---|---|
| (1) தமிழ்நாடு | பிகூ |
| (2) அஸ்ஸாம் | குச்சுப்புடி (மூங்கில் நடனம்) |
| (3) இராஜஸ்தான் | கும்மியாட்டம் |
| (4) மேகலாயா | கூமர் |

## செயல்பாடு

- குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் உதவியுடன் அப்பகுதியின் பல்வேறு நாட்டுப்புறக்கலைகள், உடைகள், உணவு மற்றும் விளையாட்டுகள் பற்றிப் படங்கள் மூலம் அறிந்துக் கொள்ளுங்கள்.
- மகாராஷ்டிராவின் பல்வேறு நாட்டுப்புறக் கலைகள் தொடர்பான காணொளிகளை இணையத்தைப் பயன்படுத்தித் தேடுங்கள்.

***



# 8. போக்குவரத்து





**பல்வேறு வகையான போக்குவரத்துச் சாதனங்கள்:**

**குழந்தைகளே! மேலே உள்ள படத்தைக் கவனமாகப் பாருங்கள். நீங்கள் பார்த்த அல்லது பயன்படுத்திய போக்குவரத்துச் சாதனங்களைக் கண்டறிந்து, படத்திற்கு அடுத்துள்ள பெட்டியில் அவற்றைக் ✓ குறியிடுங்கள்.**

- பூமியில் மிகத் தொலைவு பயணிக்கப் பயன்படும் சாதனத்தைக் கண்டறியவும். அதன் அருகிலுள்ள பெட்டியில் ○ குறியிடவும்.
- மீதமுள்ள கருவிகளை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா?. அவை எங்கே இருந்தன? அவை எப்போது பயன்படுத்தப்பட்டிருக்கும் என்று நினைக்கிறீர்கள்? இதைப் பற்றி உங்கள் நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடுங்கள்.

மேற்கண்ட செயல்பாட்டிலிருந்து வெவ்வேறு காலங்களில் நாம் வெவவேறு போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தியிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். நாம் இப்போது பயன்படுத்தும் முறைகள் கடந்தகாலப் போக்குவரத்து முறைகளை விட வேகமானவை மற்றும் பாதுகாப்பானவை.

## போக்குவரத்து :


(படம்: மாட்டு வண்டி)


(படம்: சிற்றுந்து)

போக்குவரத்து எவ்வாறு செயல்படுகிறது? என்பதைப் புரிந்து கொள்வோம்

பண்டைய காலத்தில் மனிதர்கள் விலங்குகளை வாகனங்களாகப் பயன்படுத்தினர். பின்னர் சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் சக்கரங்கள் கொண்ட வண்டி உருவாக்கப்பட்டு, அதை இழுப்பதற்காகப் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் அதில் பூட்டப்பட்டது, இன்றும்கூட சில இடங்களில் விலங்குகளால் இழுக்கப்படும் வண்டிகள் பயன்பாட்டில் உள்ளன.

தொழில்நுட்பம் வளர்ந்ததால் விலங்குகளுக்குப் பதிலாக இயந்திரங்கள் வந்தன. வாகனங்கள் பயணத்தை எளிதாகவும் வசதியாகவும் வேகமாகவும் ஆக்கின.



### உங்களுக்குத் தெரியுமா?




ஹோவர்கிராஃப்ட் - நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய ஒரு வாகனம்



### முயற்சிக்கவும்!

**போக்குவரத்து மற்றும் தொடர்பு வழிகள்**

- நிலவழிப் பாதைகள்
  - சாலை பாதை
  - இரயில் பாதை
- நீர்வழிகள்
  - உள் பாதை
  - கடல் சார்ந்த நீர்வழிகள்
- வான்வழிப்பாதைகள்
  - உள்நாட்டு விமானப் பாதை
  - சர்வதேச விமானப் பாதை

**கீழே கொடுக்கப்பட்டுள்ள வாகனங்களின் பெயர்களை உரிய கட்டங்களில் எழுதுக-**

பேருந்து, ரயில், கார், ஹெலிகாப்டர், பயணப்படகு, ரிக்‌ஷா, விமானம், படகு,மெட்ரோ, சந்திரயான், தீயணைப்பு வண்டி, தராஃபா, கப்பல்

- **கீழுள்ள செயலை செய்து முடிக்கவும்.**

சைகை விளக்கில் உள்ள பின்வரும் வண்ண விளக்குகளின் பொருளை எழுதவும்.



(१) ------------------------------------------------------------

------------------------------------------------------------

(२) ------------------------------------------------------------

------------------------------------------------------------

(३) ------------------------------------------------------------

------------------------------------------------------------

**சாலை அடையாளங்கள், சின்னங்கள் மற்றும் அவற்றின் பொருள்களைப் பொருத்துக**

| குழு 'அ' | குழு 'ஆ' |
| --- | --- |
|  | **இங்கு வாகனங்கள் நிற்கக்கூடாது.** |
|  | **ஒலி எழுப்பாதே!** |
|  | **வேகத்தடை** |
|  | **ஒரு தொழிலாளி வேலை செய்துக்கொண்டு இருக்கிறார்.** |
|  | **அருகில் பள்ளிக்கூடம்** |

**சரக்கு :**

சரக்குப் போக்குவரத்து என்பது பொருள்கள், சரக்குகள் அல்லது மூலப் பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லும் ஒரு செயல் முறையாகும். பருமனான பொருள்கள் முதல் உடையக் கூடிய கண்ணாடிப் பொருள்கள் வரையிலான சரக்குகள் கொண்டு செல்லப்படுகின்றன. தேவைக்கேற்ப லாரிகள், தொடர்வண்டிகள், கப்பல்கள் அல்லது விமானங்கள் போன்ற வாகனங்கள் மூலம் இது செய்யப்படுகிறது. சரக்குகளை ஏற்றிச் செல்லும் தொடர்வண்டி 'சரக்குத் தொடர் வண்டி' என்று அழைக்கப்படுகிறது.

பெருநகரங்களில் தண்ணீர் மற்றும் எரிவாயு போன்றவையும் குழாய்கள் மூலமாகவே கொண்டு செல்லப்படுகின்றன.

**பெற்றோரின் உதவியுடன் தெரிந்துக்கொள்வோம்.**

- எரிபொருள் தேவைப்படாத வாகனம் எது?
- தொலைதூர மலைப் பகுதிகளில் பயணம் செய்வதற்கு எந்த விலங்குகள் பயன்படுத்தப்படுகின்றன?




நவீனகால மின்சார (EV) வாகனங்கள்



சாலைகள் அமைப்பது கடினமாக உள்ள இடங்களில் கம்பி வடப் பாதைகள் பயன்படுத்தப்படுகின்றன. மலைப்பாங்கான மற்றும் தொலைதூரப் பகுதிகளைப்போல சுரங்கங்களிலும் கம்பி வடப்பாதைகள் பயன்படுத்தப்படுகின்றன. எ.கா. ராய்காட் கம்பிவடப் பாதை



முற்காலத்தில் மக்கள் பயணத்திற்காகப் பல்லக்குகளையோ பெட்டிகளையோ பயன்படுத்தினர்.



மெட்ரோ



**யோசிக்கவும்!**

நீங்கள் சந்திராபூரில் உள்ள தடோபா புலிகள் காப்பகத்திற்குச் செல்ல விரும்புகிறீர்கள். அங்கு இரண்டு நாள்கள் தங்குவீர்கள். இந்தப் பயணத்திற்கு எப்படி புறப்படுவீர்கள்?

- பயணத்திற்கு கிளம்பும் நேரம் ............................
- பயண வழிமுறைகள் ............................
- பயண நேரம் ............................
- பயணத்திற்குத் தேவையான பொருள்ள்கள் ............................
- பாதையில் உள்ள முக்கிய இடங்கள் ............................

## உங்களுக்குத் தெரியுமா?

- 1853 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ம் தேதி இந்தியாவின் முதல் தொடர்வண்டி மும்பையிலிருந்து தானேவிற்கு இயக்கப்பட்டது. அது நிலக்கரியால் இயங்கியது.
- இந்தியாவின் முதல் மெட்ரோ கொல்கத்தாவில் தொடங்கியது.
- பெரும் வெள்ளம் போன்ற சூழ்நிலைகளில் வேறு எந்தப் போக்குவரத்துச் சாதனமும் சென்றடைய முடியாதபோது வான்குடைகளின் (பாராசூட்டு) உதவியுடன் தகவல் தொடர்பை மேற்கொள்ளலாம். அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு சேர்ப்பதற்கும் வான்குடைகள் பயன்படுத்தப்படுகின்றன.



(படம்: வான்குடைகள்)

### செய்தி அனுப்புதல்

தகவல்களையும் செய்திகளையும் பரிமாறிக் கொள்வது ''செய்திப் பரிமாற்றம்'' என அழைக்கப்படுகிறது.

### இதைப் பற்றி யோசிக்க :

உங்கள் நண்பர் வேறு கிராமத்தில் வசித்து வரும் வேளையில் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்க விரும்பினால், பின்வரும் வழிகளில் எது உங்களுக்கு மிகவும் எளிமையானது?

- உடனடியாக அவன் வீட்டிற்குச் செல்லல்.
- அவருக்கு அஞ்சல் மூலம் கடிதம் அல்லது பரிசு அட்டை அனுப்புதல்.
- அவரைத் தொலைப்பேசிமூலம் தொடர்பு கொள்வது.
- கைபேசியிலிருந்து அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புதல்
- மின்னஞ்சல்
- ஒரு புறாவின் காலில் கடிதத்தைக் கட்டி அவனுக்கு அனுப்புவது

## உங்களுக்குத் தெரியுமா?

முற்காலத்தில் புறாக்கள் மூலம் செய்திகள் அனுப்பப்பட்டன. இதற்காக புறாக்கள் வளர்க்கப்பட்டுப் பயிற்றுவிக்கப்பட்டன. முற்காலத்தில் மன்னர்களின் தூதர்கள், குதிரைகள் அல்லது ஒட்டகங்கள் மீது செய்திகளைக் கொண்டு செல்வார்கள். இந்தப் பணி கடினமானதாகவும் அபாயகரமானதாவும் இருந்தது. பின்னர் தபால்சேவை தொடங்கப்பட்டது.

**தபால் /அஞ்சல்துறை :** அஞ்சல்துறை மூலம் நாடு முழுவதும் மற்றும் வெளிநாடுகளுக்கும் நாம் கடிதங்களையும் பொருள்களையும் அனுப்பலாம். முக்கியமானக் கடிதங்களை கூடிய விரைவில் கொண்டு சேர்க்க 'விரைவுத் தபால்' வசதி பயன்படுத்தப்படுகிறது. நமது பொருள்களை நாட்டிற்குள்ளும் வெளிநாடுகளுக்கும் அனுப்ப பேருந்துகள், இரயில்கள், கப்பல்கள் மற்றும் விமானங்கள் போன்ற வாகனங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

**நீங்கள் எப்போதாவது தபால் நிலையத்திற்குச் சென்றிருக்கிறீர்களா? அங்கு நீங்கள் என்ன பார்த்தீர்கள்? என்று எங்களிடம் கூறுங்கள்.**

**தொலைபேசி:-** தொலைபேசியின் கண்டுபிடிப்பு உலகில் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தியது. தொலைபேசி உள்ளவரிடம் மிக எளிதாக தொடர்பு கொள்ள முடிந்தது. உலகம் மேலும் நெருக்கமானது. அதன் மிகவும் மேம்பட்ட வடிவம் ‘கைப்பேசி’தான்ஆகும்.



(படம்: ட்ரோன்)

### தகவல்தொடர்பு மற்றும் தகவல் பரப்புதலின் பிற வழிமுறைகள் :-

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், செய்தித்தாள்கள் ஆகியவற்றின் மூலம் தகவல் தொடர்பு நடைப்பெறுகிறது. பல்வேறு வகையானத் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

### உங்களுக்குத் தெரியுமா?

- தபால்தலைகள் நமக்கு ஏராளமான தகவல்களைத் தருகின்றன. அவற்றில் முக்கியமான நிகழ்வுகள் மற்றும் நபர்களின் படங்கள் அச்சிப்பட்டுள்ளன.
- சிலர் உள்நாட்டு மற்றும் சர்வதேச அஞ்சல்தலைகளைச் சேகரிக்கின்றனர்.
- சிறப்பு நிகழ்வுகளை முன்னிட்டு தபால் நிலையத்தால் சிறப்பு அஞ்சல் தலைகளும் உறைகளும் அச்சிடப்படுகின்றன
- இந்தியாவின் முதல் சிவில் விமானப் போக்குவரத்து நிறுவனமான டாடா( ஏர்லைன்ஸ்) விமானப் போக்குவரத்து 1932-இல் மும்பையில் நிறுவப்பட்டது.
- உலகம் முழுவதும் தகவல் தொடர்புக்குச் செயற்கைக்கோள்கள் பயன்படுத்தப் படுகின்றன.




बिरसा मुंडा



செயற்கைக்கோள்

### கண்டுபிடிக்கலாம்!

- தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?
- கணினியைக் கண்டுபிடித்தவர் யார்?

### சுய ஆய்வு:

**கே1. பெயர்களை எழுதுக:-**

(அ) சாலையில் செல்லும் வாகனங்கள் ------------------------------------------

(ஆ) நீர்வழி வாகனங்கள் ------------------------------------------------------------

(இ) இரயில் தண்டவாளத்தின் வழியாகச் செல்லும் ஒரு வாகனம் -------------------------

(ஈ) வான்வழியாகச் செல்லும் வாகனம் ----------------------------------------------

**கே.2. கருத்து வரைபடத்தை நிறைவு செய்க:-**




**கே. 3. சரியானச் சொற்களை வட்டமிடுக:-**

1) சரக்குகளை ஏற்றிச் செல்லும் இரயில்வண்டி (மெட்ரோ, சரக்கு இரயில், உள்ளூர் இரயில்)

2) தொலைதூரப் பகுதிகளிலும் சுரங்கங்களிலும் பயன்படுத்தப்படும் வாகன வகை (படகு, ரிக்ஷா, கம்பிவடம்)

3) கடிதங்களை விரைவில் வழங்குவதற்கான வசதி (அஞ்சல், விரைவு அஞ்சல், தந்தி)

4) பண்டைய காலங்களில் செய்திகளை அனுப்ப பயன்படுத்தப்பட்ட ஒரு பறவை (கழுகு, புறா, கிளி)

**கே. 4. பாடப்புத்தகத்தின் தொடக்கத்தில் QR குறியீட்டில் கொடுக்கப்பட்டுள்ள மகாராஷ்டிராவின் சுற்றுலா வரைப்படத்தை உங்கள் முன் வைத்துக்கொண்டு நீங்கள் வசிக்கும் இடத்திலிருந்து உங்களுக்கு விருப்பமான ஏதேனும் ஒரு சுற்றுலாத் தலத்திற்குச் செல்ல விரும்புகிறீர்கள்...**

(1) நீங்கள் சுற்றுலாச்செல்ல எந்த வாகனத்தைப் பயன்படுத்துவீர்கள்?

(2) வழியில் எந்தெந்தப் பெரிய கிராமங்கள்/நகரங்கள் பார்க்கக் கிடைக்கும்?

(3) அங்கே நீங்கள் முக்கியமாக என்ன பார்க்க விரும்புகிறீர்கள்?

**கே. 5. வகுப்பில் கைபேசிகள் பற்றிச் கலந்துரையாடுங்கள். அதன் நன்மைகள் மற்றும் தீமைகளைப் பற்றிய தகவல்களை எழுதுங்கள்.**

| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| ------------------------------------------ | ------------------------------------------ |
| ------------------------------------------ | ------------------------------------------ |
| ------------------------------------------ | ------------------------------------------ |

**செயல்பாடு :-**

- பண்டைய காலங்களில் பயன்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சாதனங்களின் படங்களை எடுத்து, அவற்றை ஓர் ஒட்டும் தாளில் ஒட்டி பெயர்களை எழுதவும்.
- பொதுப் போக்குவரத்து அமைப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் என்னென்ன உள்ளன? இது குறித்தத் தகவல்களைச் சேகரித்து பெற்றோரின் உதவியுடன் எழுதுங்கள்.

***



# 9. வரலாற்றுக் கட்டிடங்கள்



ஜீவன் சிக்ஷன் வித்யா மந்திர் பள்ளியின் இரண்டாவது கல்வியாண்டு தொடங்கியது. வகுப்பறைக்கு வந்த ஆசிரியர் விடுமுறையில் யார் யார் வெளியூர்களுக்கு சென்று வந்தீர்கள்? என்னென்ன செய்தீர்கள்? என்று ஆசிரியர் கேட்டார். சில மாணவர்கள் கையை உயர்த்தினார்கள் பின் ஆசிரியர் ''நீங்கள் சென்றிருந்த பகுதிகளில் உள்ள குகைகள், கோட்டைகள், மாபெரும் மனிதர்களின் பிறப்பிடங்கள், அருங்காட்சியகங்கள், தூண்கள் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களின் புகைப்படங்களை உங்கள் கைபேசியில் இருந்து எனக்கு அனுப்புங்கள். அடுத்தவாரம் அவற்றைக் கொண்டு ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்வோம்'' என்றார்.

### இதைப் பற்றி யோசிக்க

**விடுமுறை நாள்களில் நீங்கள் என்னென்ன புதிய செயல்பாடுகளைச் செய்யலாம்?**

ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்து எல்லா மாணவர்களையும் கண்களை மூடிக் கொள்ளச் சொன்னார். யாரும் கண்களைத் திறக்கவோ, வாயைத் திறக்கவோ கூடாது என்று அறிவுறுத்தியவாறே ஆசிரியர் வகுப்பறையில் இருந்த கரும்பலகையில் காகிதத்தை ஒட்டினார். காகிதம் ஒட்டும் சத்தத்தைக் குழந்தைகள் கேட்டனர். மாணவர்கள் ஆசிரியரின் அறிப்பை பெற்றவுடன், கண்களைத் திறந்து பார்த்து ஆச்சரியமடைத்தனர். மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் 'வாவ்! வாவ்!' என்று கூச்சலிட்டனர்.

தங்கள் விடுமுறையின் போது தாங்கள் பார்த்த கட்டிடங்கள் மற்றும் பொருள்களின் புகைப்படங்களையும், தாங்களே எடுத்த புகைப்படங்களையும் கொண்ட இரண்டு மூன்று பெரிய தாள்கள் தங்களுக்கு முன்னால் இருப்பதைப் பார்த்து குழந்தைகள் மகிழ்ச்சியடைத்தனர். அந்த ஆசிரியர், ''இப்போது ஒவ்வொருவராக, நீங்கள் எடுத்த புகைப்படங்களைப் பற்றி எங்களிடம் சொல்லுங்கள். யார் முதலில் சொல்வீர்கள்?''என்று கேட்டார்.

### முயற்சி செய்து பாருங்கள்

**நீங்கள் சென்றுப்பார்த்த வரலாற்றுத்தலங்களின் புகைப்படங்களைக் கொண்டு ஓர் அட்டவணையை உருவாக்குங்கள். அந்த அட்டவணைகளை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.**

உமா கையை உயர்த்தி, ''டீச்சர்! நான் என் பெற்றோருடன் சிவனேரி கோட்டைக்குச் சென்றிருந்தேன். சிவாஜி பிறந்த கோட்டையின் கதையை என் பெற்றோர் என்னிடம் சொன்னார்கள். சிவனேரியில் நான் குகைகள், நீருற்றுகள், சிவாகி தேவி கோயில், கொத்தளங்கள், கோட்டைகள் மற்றும் கோபுரங்களைப் பார்த்தேன். இந்தப் பயணத்தை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்'' என்றாள்.



சத்ரபதி சிவாஜி மகாராஜ் பிறந்த இடமான சிவனேரிக் கோட்டை



ராம்டெக் கோட்டை



ராம்டெக்கில் உள்ள ஸ்ரீராம் கோயில்

அப்போது நந்தன் எழுந்து நின்றான். அவன், நான் விதர்பாவில் உள்ள ராம்டெக்கிற்குச் சென்றிருந்தேன். ராம்டெக் என்பது நாக்பூர் மாவட்டத்தில் உள்ள ஒரு நகரம். ராம்டெக்கில் ஸ்ரீ ராமர் கோயில் உள்ளது. இங்கு 'ராம்நவமி' அன்று திருவிழா நடைபெறும். இந்த மலையில் ராம்டெக் கோட்டை உள்ளது. மாபெரும் கவிஞர் காளிதாசர் இங்குதான் மேகதூதம் என்ற காவியத்தை இயற்றினார்'' என்றான். குழந்தைகள் அனைவரும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.



மகாத்மா புலே வாடா-விஹார்

ஆசிரியர் ஒரு புகைப்படத்தைக் காட்டினாரர். ''இந்த அரண்மனைக்கு யார் சென்றது? என்று கேட்டதும், கார்கி தன் கையை உயர்த்தினாள். கார்கி சொல்லத் தொடங்கினாள். ''நாங்கள் விடுமுறைக்காக புனே சென்று இருந்தோம். புனேவில் உள்ள மகாத்மா புலே மற்றும் சாவித்திரிபாய் புலேவின் வீட்டைப் பார்த்தோம் . அந்த வீட்டின் வளாகத்தில் ஒரு சிறிய கிணறு உள்ளது. அக்காலத்தில் மகாத்மா புலே அனைத்து சாதி மற்றும் மதத்தினரையும் இந்தக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்க அனுமதித்திருந்தார். இப்பேது **புலே வாடாவை** மகாராஷ்டிர அரசு ஒரு பராம்பரிய தளமாக அறிவித்துள்ளது.''

என் அம்மா என்னிடம் ''புலே தம்பதியினரால் நாங்கள் நிறைய கற்றுக் கொண்டோம்'' என்று கூறினார். எம் அம்மா அவர்கள் கதையை என்னிடம் சொன்னார்கள். பிறகு, அவர் பெயரால் அழைக்கப்படும் ''சாவித்ரிபாய்புலே பல்கலைக் கழகத்திற்கு'' நாங்கள் சென்றோம். பல்கலைக்கழக வளாகத்தைப் பார்த்து நாங்கள் பிரமித்துப் போனோம். அங்கு அருங்காட்சியகங்கள், தோட்டங்கள், சிலைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், சுரங்கப் பாதைகள் என எல்லாவற்றையும் பார்த்தோம் என்று கூறினாள்.

அங்கிருந்து நாங்கள் சேனாபதி பாபட் சாலையில் உள்ள **''பாரத ரத்னா பாபாசாகேப் அம்பேத்கர்''** அருங்காட்சியகத்தைப் பார்க்கச் சென்றோம். பாபாசாகேப் அம்பேத்கர் எவ்வளவு

படித்தார் என்றும் அதன் காரணமாக அவர் எப்படி வளர்ந்தார் என்றும் அவர் பெற்ற 'பாரத ரத்னா' பதக்கம் இந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்றும் என் அம்மா என்னிடம் கூறினார். இந்தப் புதிய தகவலை நான் தெரிந்து கொண்டேன். அங்கிருந்து எங்கள் பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்படும் அருகிலுள்ள **''பால்பாரதி''** கட்டிடத்தையும் நாங்கள் பார்வையிட்டோம்.



பாரத ரத்னா பதக்கம்

ஜாஃபர் என்ற மாணவன், ''நான் புல்டானாவுக்குச் சென்றேன். அங்கே ஒரு விண்கல் மோதலால் உருவான **'லோனார் ஏரியை'**ப் பார்த்தேன். அந்த ஏரியின் தண்ணீரைக் குடிக்க வேண்டாம் என்று அப்பா என்னிடம் கூறினார். இராஜமாதா ஜிஜாவின் பிறந்த இடமான சிந்துகேட்ராஜா கிராமத்தைப் பார்த்தபோது நான் ஆச்சரியப்பட்டேன்'' என்றான்.


லோனார் ஏரி

பாத்திமா கூறினாள், ''நான் மும்பைக்குச் சென்றேன். என் வாழ்வில் முதன்முறையாகக் கடலைப் பார்த்தேன். கடற்கரையில் **'கேட்வே ஆஃப் இந்தியா'**வைப் பார்த்தேன்''.

அமிர்தா கூறினாள், ''நான் கொங்கன் சென்றேன். அங்கு **'சிந்துார்க்'** என்ற நீர்க்கோட்டையைப் பார்த்தேன். இந்த கோட்டையைப் பார்க்க, நாங்கள் கடலில் படகில் பயணிக்க வேண்டிருந்தது. படகு ஆடிக் கொண்டிருந்தது. நான் தண்ணீரில் ஒரு கோட்டையைப் பார்ப்பது இதுவே முதல் முறை ஆகும். இந்தக் கோட்டையில் ஒரு நன்னீர்க் கிணறும் உள்ளது.''


சிந்துதுார்க்

கம்பிவட் உதவியுடன் ராய்காட் சென்றோம். நாங்கள் கம்பிவடப் பயணத்தில் அமர்ந்தோம். **'ராய்காட்'** இது ஒரு அற்புதமான கோட்டை. சத்ரபதி சிவாஜி மகாராஜ் இந்தக் கோட்டையில்தான் முடிசூடப்பட்டார். நாங்கள் கம்பிவடப் பயணத்தில் சுயராஜ்யத்தின் தலைநகராக இருந்த இந்தக் கோட்டையைப் பார்த்தது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சத்ரபதி சிவாஜி மகாராஜின் கல்லறை இந்தக் கோட்டையில் தான் உள்ளது.



ராய்காட் கோட்டை



### சொல்லுங்கள் பார்க்கலாம் !

- நீங்கள் பார்வையிட்ட வரலாற்றுத் தலம் குறித்துச் சுருக்கமாக விவரிக்கவும்.
- வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தைப் பார்வையிடும்போது என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- பெற்றோரின் உதவியுடன் 'உலக பாரம்பரிய தளங்கள்' பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள மகாராஷ்டிராவில் உள்ள கோட்டைகளைப் பற்றிய தகவல்களைத் திரட்டி வகுப்பில் பகிரவும்.

ஆசிரியர் சொன்னார் ''பாருங்கள்! நாம் எவ்வளவு விஷயங்களைக் கற்றுக் கொண்டோம். பழைய கட்டிடங்களைப் பார்ப்பது, அவற்றைப் பற்றி அறிந்துக்கொள்வது, அந்த இடத்திற்குச் செல்வது ஆகியவை ஒரு பாரம்பரியப் பயணமாகும். இன்று நாம் பாரம்பரியப் பயணம் சென்று வந்தோம். இதுபோன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் பல பாரம்பரியப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்தப் பயணங்கள் மூலம் பழைய பொருள்கள் மற்றும் கட்டிடங்களைப் பற்றி நமக்கு நிறைய தகவல்கள் கிடைக்கின்றன. நாம் கண்டிப்பாக அங்கு செல்ல வேண்டும்''.

நாம் இந்த இடங்களைப் பாதுகாக்க வேண்டும் அல்லவா ? இந்த வரலாற்றுச் சின்னங்களில் நாம் நம் பெயர்களை எழுதக்கூடாது. அங்கே நாம் குப்பைகளை வீசக் கூடாது. நெகிழிப் புட்டிகளை/பாட்டில்களை வீசக்கூடாது. நமது இந்தப் பாரம்பரியத்தை நாம் கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.



# சுய ஆய்வு

**கேள்வி 1. கருத்து வரைபடத்தை நிறைவு செய்க.**

(1) சிவனேரி
- குகைகள்
- 
- 
- 
- 

(2) சிந்துதுர்க்
- கடற்கோட்டை
- 
- 

(3) ராய்காட்
- சிவாஜியின் முடிசூட்டு விழா
- 
- 
- 

**கேள்வி 2. சரியான இணைகளைப் பொருத்துக.**

| குழு 'அ' | குழு 'ஆ' |
|---|---|
| (1) ராம்டெக் கோயில் | (அ) சிந்துகேத்தின் மன்னர் |
| (2) ராஜ்மாதா ஜிஜாபாய் பிறந்த இடம் | (ஆ) சேனாபதிபாப்ட் சாலை, புனே |
| (3) டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அருங்காட்சியகம் | (இ) நாக்புர் |

**கேள்வி 3. சரியான பதில்களை எழுதுக.**

(1) சாவித்திரிபாய் புலே பெயரிடப்பட்ட பல்கலைக்கழகம் – ________

(2) பாடநூல் தயாரிப்பு மையம் – ________

**கேள்வி 4. பின்வரும் வாக்கியங்களைத் திருத்தி எழுதுக**

(1) சிந்துதுர்க் ஒரு மலைக்கோட்டை.

(2) சிவனேரிக் கோட்டையை அடைய நீங்கள் கம்பிவடப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.



**கேள்வி 5. நீங்கள் என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பீர்கள்?**

**வரலாற்றுக் கட்டிடங்கள்**

- குப்பைகளைப் போடாதீர்கள்!
- 
- 
- 

## செயல்பாடு

- உங்கள் பகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடங்களைப் பார்வையிட்டு, அவற்றைப் பற்றி எழுதுங்கள்.
- கோட்டைகளின் படங்களைச் சேகரித்து, அவற்றை ஒரு (தொகுப்பேடு) நோட்டுப்புத்தகத்தில் ஒட்டவும்.
- மகாத்மா புலேவைப் பற்றி கிஷோர் இதழில் வெளிவந்த கட்டுரைக்கு, பாடப்புத்தகத்தின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டில் உள்ள இணைப்பைப் பார்க்கவும்.

***



# 10. கதை: வீரம் மற்றும் புரட்சியின்





சத்ரபதி சிவாஜி மகாராஜ்



மகாத்மா ஜோதிராவ் புலே



சாவித்திரிபாய் புலே



மகாராஜா சயாஜிராவ் கெய்க்வாட்



இராஜரிஷி ஷாஹூ மகாராஜ்



பண்டித ரமாபாய்



மகரிஷி தோண்டோ கேசவ் கர்வே



டாக்டர். பாபா சாகேப் அம்பேத்கார்



டாக்டர். பஞ்சாப்ராவ் தேஷ்முக்



**முயற்சி செய்து பாருங்கள் :-**

படங்களில் உள்ள மாமனிதர்களைப் பற்றிய தகவல்களை இணையத்தின் உதவியுடன் சேகரிக்கவும் இதற்காக கர்மவீர் பாபுராவ் பாட்டிலின் உதாரணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### கர்மவீர் பௌவுராவ் பாட்டீல்:-




''ரயத் சிக்ஷன் சன்ஸ்தா'' என்பது இந்தியாவில் உள்ள ஒரு பழமையான மற்றும் பரவலாகச் செயல்படும் கல்வி நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் நிறுவனர் கர்மவீரர் பாவுராவ் பாட்டீல். அனைத்து சாதி மற்றும் மதங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கல்வி வழங்க முயன்றார். அவர் மாணவர்களுக்காக ஒரு விடுதியைத் தொடங்கி 'சம்பாதித்து க்கற்றுக்கொள்' என்ற திட்டத்தையும் ஆரம்பித்தார்.



ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார். மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்றனர். ஆசிரியர், ''இன்று நான் உங்களுக்கு ஒருவரைப் பற்றி சொல்லப் போகிறேன். நீங்கள் உங்கள் பெற்றோரிடம் பேசி மகத்தான மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். நீங்கள் வீட்டிற்குச் சென்றதும், இன்று நான் உங்களுக்குச் சொல்லப்போகும் நிகழ்வுகளைப் பற்றி உங்கள் பெற்றோரிடம் கூறுங்கள்'' என்று ஆசிரியர் தனது உரையை கூறத் தொடங்கினார்.

**சிரிஷ் குமார் :-**

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியர்களுக்கு அநீதி இழைத்து வந்தது. ஆங்கில அரசு இந்தியர்களைச் சுரண்டியது. இந்திய மக்கள் பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராட்டம் தொடங்கினர். ''போராடு அல்லது செத்துமடி'' என்ற முழக்கம் எல்லா இடங்களிலும் முழங்கப்பட்டது. 1942-ல் மகாத்மா காந்திஜி (பிரிட்டிஷாரை) ஆங்கிலேயரைப் பார்த்து ''வெள்ளையனே வெளியேறு'' என்று கூறினார்.


கிரிஷ்குமார்

நம் நாட்டில் ஆங்கிலேய எதிர்ப்புச் சூழல் வலுப்பெற்று வந்தது. நாடு முழுவதும் போராட்டங்கள் தொடங்கின. இந்தப் போராட்ட இயக்கத்தில் பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டனர். காண்டேஷ் மாவட்டத்தின் நந்தூர்பாரைச் சேர்ந்த 16 வயது மாணவரான ஷிரிஷ்குமார் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஓர் ஊர்வலத்தை நடத்த முடிவு செய்தார். அவரும் அவரது நண்பர்களான சசிதர், லால்தாஸ், கன்ஷியாம் மற்றும் தன்சுகலால் ஆகியோரும் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஓர் ஊர்வலத்தை நடத்தினர். பள்ளி மாணவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலம் நந்தூர்பாரில் உள்ள ஜண்டா சதுக்கத்தில் அமைதியாகச் சென்று கொண்டிருந்தது. ஊர்வலத்தைக் கலைக்குமாறு ஷிரிஷ் குமாருக்கும் அவரது நண்பர்களுக்கும் காவல்துறை உத்தரவிட்டது. ஷிரிஷ் குமாரும் அவரது நண்பர்களும் இந்த உத்தரவுக்குச் செவிசாய்க்கவில்லை. 1942, செப்டம்பர் 9 அன்று காவல்துறை இந்த ஊர்வலத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இந்த மாணவர்கள் நாட்டிற்காக வீரமரணம் அடைந்தனர்.



**கண்டுபிடிக்கலாம் வாருங்கள்:-**

வஸ்தாத் லாஹுஜி சால்வே, ராஜகுரு மற்றும் விடுதலை வீரர் நானா பாட்டீல் ஆகியோரின் பணிகள் குறித்தத் தகவல்களை வழங்கும் புத்தகங்களைத் தேடிப் படியுங்கள்.

**சாந்தி கோஷ், சுனிதி சவுத்ரி:-**

வங்காளத்தைச் சேர்ந்த இரண்டு பள்ளி மாணவிகளின் கதை. சாந்தி கோஷ் மற்றும் சுனிதிசௌத்ரி இருவரும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். சாந்தியின் தந்தை தேவேந்திரநாத் ஒரு பேராசிரியராக இருந்தார். அவர் தன் மகளுக்குத் தேசபக்தியை ஊட்டி வளர்த்தார். பள்ளிப் பருவத்தில் ஆங்கிலேயர்கள் நமது எதிரிகள் என்றும் நாம் அவர்களைத் தோற்கடித்து சுதந்திரம் பெற வேண்டும் என்றும் மட்டுமே சாந்தி அறிந்திருந்தாள். 1931-இல் அவர்கள் இருவரும் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் உரையைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றனர் அவர்கள் உணர்ச்சி வசப்பட்டனர். சாந்திகோஷ் தனது நோட்டுப் புத்தகத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் கையொப்பத்தைப் பெற்றார்.


சாந்தி கோஷ்


சுனிதி சவுத்ரி

பின்னர் அவர்கள் ''யுகந்தர்'' என்ற புரட்சிகர அமைப்பில் பணியாற்றத் தொடங்கினர். இந்தக் காலக்கட்டத்தில் வங்காளத்தின் கொமில்லாப் பகுதியைச் சேர்ந்த பிரிட்டிஷ் அதிகாரி ஸ்டீவன்ஸ் இந்தியர்களுக்கு எதிராக அட்டூழியங்களைச் செய்து வந்தார். ஊர்வலம் சென்றவர்களை அவர் தடிகளால் அடித்து வந்தார். அவர்களின் தலைகள் உடையும் வரை அவர் அடிப்பார். அவரது அநீதியை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அந்தத் தீய ஆங்கில அதிகாரிக்கு ஒரு பாடம் புகட்ட அவர்கள் இருவரும் முடிவு செய்தனர்.

ஸ்டீவன்ஸ் தன் உயிருக்கு அஞ்சினார். அவர் தன் வீட்டிலேயே ஓர் அலுவலகத்தை அமைத்திருந்தார். அவர் அந்த வீட்டைக் காவல் காத்து வந்தார். பொதுமக்கள் அவனரச் சந்திக்க முடியாது. இருவரும் அவரைச் சென்று சந்திக்க முடிவு செய்தனர்.அவர்கள் இருவருக்கும் கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. அச்சமின்றி இருவரும் ஸ்டீவன்ஸின் வீட்டிற்குச் சென்றனர். அவரே அவர்களைச் சந்திக்க வெளியே வந்தார். பேச்சு வார்த்தைக்குப் பிறகு சுனிதி மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து அவரைச் சுட்டாள். அவர் அந்த இடத்திலேயே சரிந்து விழுந்தார். அவர்கள் இருவரும் பிடிபட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டனர். பின்னர் 1939-ல் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

## தெரிந்து கொள்ளலாம்:-

கி.பி 1818 ல் ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கைப்பற்றிய பிறகு மகாராஷ்டிராவின் முதல் புரட்சியாளரான 'உமாஜி நாயக்' ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடினார். ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடி அவர்களின் ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்று உமாஜி அழைப்பு விடுத்தார். அவரது பணிகள் புனே, சதாரா, அஹல்யாநகர் (அகமதுநகர்) போன்ற பகுதிகளுக்கும் பரவின.

பின்னர் அவரது பணியைப் புரட்சியாளர் வாசுதேவ் பல்வந்த் பட்கே மற்றும் சாபேகர் சகோதரர்கள் முன்னெடுத்துச் சென்றனர். சாபேகர் சகோதரர்களிடமிருந்து உத்வேகம் பெற்று சுதந்திரப் போராட்ட வீரர் விநாயக் தாமோதர் சாவர்க்கர் சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கினார்.

## உங்களுக்குத் தெரியுமா?

புனே மாவட்டம் அம்பேகான் தாலுக்காவில் உள்ள மஹாலுங்கே கிராமத்தைச் சேர்ந்த இளைஞரான பாபு கெனு சையத், மும்பையில் ஒரு துணி ஆலையில் பணிபுரிந்து வந்தார். 1930-ல், மும்பையில் வெளிநாட்டுப் பொருள்களுக்கு எதிரானப் புறக்கணிப்பு இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த இயக்கத்தில் பாபுகெனு முன்னணியில் இருந்தார். ஒருமுறை ஒரு சரக்கு லாரியில் வெளிநாட்டுத் துணிகள் கடத்தப்பட்டுக் கொண்டிருந்தன. அப்போது பாபு கெனு மூவணண்க் கொடியைத் தன் கையில் ஏந்தியப்படி அந்தச் சரக்கு லாரிக்கு முன்னால் நின்றார். லாரியின் ஓட்டுநர் பாபு கெனு மீது லாரியை ஏற்றினார். அவர் நாட்டிற்காகத் தன்னையே தியாகம் செய்தார்.


பாபு கெனு செயத்

## கற்றுக்கொள்ளலாம் வாருங்கள்!



அம்பேத்கர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவை அரசியலமைப்புச் சபையின் தலைவரான டாக்டர். இராஜேந்திர பிரசாத்திடம் சமர்ப்பித்தார்.

1946 டிசம்பர் 9 அன்று டாக்டர் இராஜேந்திர பிரசாத் தலைமையில் அரசியலமைப்புச் சபை அமைக்கப்பட்டது. இந்தியா 1947 ஆகஸ்டு 15 அன்று சுதந்திரம் பெற்றது. அதன் பிறகு, 1947 ஆகஸ்டு 21 அன்று டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கரை வரைவுக் குழுவின் தலைவராகக் கொண்டு வரைவுக்குழு அமைக்கப்பட்டது அவரது தலைமையில் அரசியலமைப்பின் இறுதி வரைவு 1949 நவம்பர் 26 அன்று அரசியலமைப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அரசியலமைப்பு 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது. எனவே நவம்பர் 26 அரசியலமைப்புத் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## சுய ஆய்வு

**கே.1. பின்வரும் நபர்களுடன் தொடர்புடைய இடங்களின் பெயர்கள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை அவர்களின் பெயர்களுக்கு முன் எழுதுக.** (நந்துர்பார், கொமில்லா, புனே, மஹாலுங்கே)

(1) பாபு கெனுவின் கூற்று --------------------------

(2) ஷிரிஷ் குமார் --------------------------

(3) ஸ்டீவன்ஸ் --------------------------

(4) புரட்சியாளர் உமாஜி நாயக் --------------------------

**கே.2. பின்வரும் கேள்விகளுக்கானப் பதில்களை ஒரே வாக்கியத்தில் எழுதுக:-**

(1) பிரிட்டிஷாரை (ஆங்கிலேயரை) எதிர்த்து ஷிரிஷ் குமார் தலைமையிலான பேரணியில் யார் யார் பங்கேற்றார்?

(2) சாந்தி கோஷ் மற்றும் சுனிதி செளத்ரி எந்தப் புரட்சிகர அமைப்பில் பணிபுரிந்து வந்தனர்?

(3) ரபாத் கல்வி நிறுவனத்தை நிறுவியவர் யார்?

**கே.3. எழுதுவோம்:**

(1) ஆங்கிலேயர்களுக்கு எதிரான காந்திஜியின் பிரகடனம்

(2) சாந்தி கோஷிடம் தேசப்பக்தியை ஊட்டியவர்கள்

(3) சாபேக்கர் சகோதரர்களிடமிருந்து உத்வேகம் பெற்றுச் சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கியவர்கள்.

(4) கர்மவீரர் பெளராவ் பாட்டீல் தொடங்கிய திட்டம்.

**கே.4. பின்வரும் கேள்விகளுக்கானப் பதில்களை மூன்று அல்லது நான்கு வாக்கியங்களில் எழுதுக:**

(1) ஷிரிஷ் குமார் தொடங்கிய இயக்கம் பற்றிய தகவல்களைத் தரவும். ..........................

(2) பாகெனுசையத் நாட்டிற்காக தன் உயிரைத் தியாகம் செய்தார். .............................

**கே.5. கீழ்கண்டோரைக் குறித்து மூன்று அல்லது நான்கு வாக்கியங்கள் எழுதுக.**

(1) ஷிரிஷ் குமார்

(2) பாபு கெனு செயத்

**செயல்பாடு:**

- உங்கள் பள்ளியில் உள்ள பிரபலமானவர்களின் புகைப்படங்களைப் பட்டியலிடுங்கள்!
- இந்திய சுதந்திர இயக்கத்தில் பங்கேற்றப் பெண்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவர்களின் பட்டியலைத் தயாரிக்கவும்
- உங்கள் பகுதியைச் சேர்ந்த மாபெரும் மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து ஊக்கமளிக்கும் ஒரு சம்பவத்தைத் தேர்ந்தெடுத்து அதைப் பற்றி எழுதுங்க்கள். முடிந்தால் அந்த நபரின் புகைப்படத்தை ஒட்டவும்.

***



# 11. சுற்றுச் சூழல் பாதுகாப்பு





மகாத்மா காந்தி ஜெயந்தியைக் கொண்டாட மைதானத்தில் கூடியிருந்தனர். தலைமை ஆசிரியரின் அறிவுறுத்தலின்படி, பள்ளித் தூய்மைப் பணி தொடங்கப்பட்டது. வினய் சுத்தமான, நேர்த்தியான ஆடைகளை அணிந்து முதல் வரிசையில் நின்று கொண்டு இருந்தான். வினய் வேலையில் சலிப்புற்றிருந்தான். அவன் தன் வயிற்றைத் தொட்டு வயிற்று வலி இருப்பது போல் நடித்து ஓரமாக அமர்ந்தான். தூய்மைப் பணியில் வினய் பங்கேற்காததற்கானக் காரணத்தை தலைமை ஆசிரியர் புரிந்து கொண்டார். அவர் அவனைத் தனது அலுவலகத்திற்கு அழைத்து, தனக்கு அருகில் அமர வைத்தார். அவர் அவனிடம் சில பட அட்டைகளைக் காட்டி கேள்விகள் கேட்டார். வினய் அந்தப் படங்களைக் கவனிக்கத் தொடங்கினான்.

## முயற்சி செய்து பாருங்கள்!

**படங்களைச் சரியான வரிசையில் அடுக்கவும்.**















**சொல்லுங்கள் பார்க்கலாம்!**

ஏன் எல்லோரும் மகிழ்ச்சியாக நடைப்பாதையில் நடக்கத் தொடங்கினார்கள்? வினய் ''முதல்வரிடம் ''சுத்தம் என்றால் என்ன? நாம் ஏன் அதைக் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று கேட்டான்.

முதல்வர் பேசத் தொடங்கினார். ''சுத்தம் என்பது ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கும் எடுக்கப்படும் ஓர் அக்கறையாகும். இதற்காக, ஒருவர் தன்னையும் பொது இடங்களையும் சுற்றுச் சூழலையும் சுத்தமாகப் பராமரிப்பது அவசியம். தனிப்பட்டத் தூய்மையுடன் வீடு மற்றும் சுற்றப்புறங்களின் தூய்மையில் குப்பைகளைச் சரியான இடத்தில் போடுவதும் கழிவு நீரை முறையாக அகற்றுவதும் அடங்கும். இதன் காரணமாக தூய்மை எல்லா இடங்களிலும் தென்படும். தூய்மை எல்லா இடங்களிலும் ஓர் இனிமையான மற்றும் மகிழ்ச்சியான சூழலை உருவாக்குகிறது.



**சிந்தித்துச் சொல்லுங்கள்!**

- உடலைத் தவறாமல் சுத்தம் செய்யாவிட்டால் என்ன நடக்கும்?
- சில பகுதியில் குப்பைகளும் துர்நாற்றமும் இருந்தால் என்ன நடக்கும்?
- நமது வீடு, பள்ளி, சுற்றுப்புறம், கிராமம் மற்றும் நகரத்தை யார் சுத்தம் செய்வார்கள்?

வினயின் மனதில் பல கேள்விகள் எழுந்தன. வினய் பேசத் தொடங்கினான். ஒவ்வொரு ஆண்டும் மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் தேதியில் நாங்கள் ஒரு தூய்மைப் பிரச்சாரத்தைத் தொடங்குகிறோம். அப்படியென்றால் அதற்கு முன்பு தூய்மை முக்கியமானதாக இருக்கவில்லையா ? தூய்மைக்காக யாரும் உழைக்கவில்லையா? முதல்வர் வினயிடம் தூய்மையைப் பற்றி மேலுமம் விளக்கத் தொடங்கினார்.



**உங்களுக்கு தெரியுமா?**

நம் இந்தியாவில் தூய்மைப் பராம்பரியம் மிகவும் தொன்மையானது. பண்டைய மக்கள் கூட தூய்மையை முக்கியமானதாகக் கருதினர், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவில் மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பா போன்ற அழகான நகரங்கள் இருந்தன. இந்த மிகப் பழமையான நகரங்களில் நல்ல சாலைகள், கழிவுநீர் அமைப்புகள் மற்றும் பொதுக்குளியல் அறைகள் இருந்தன. மக்கள் தங்கள் வீடுகளையும் சாலைகளையும் நீர்நிலைகளையும் தூய்மையாகப் பராமரித்தனர்.



## உங்களுக்கு தெரியுமா?



இராஷ்டிரசந்த் காட்கே பாபா

இராஷ்டிரசந்த் காட்கே பாபா அமராவதி மாவட்டத்தில் உள்ள ஷெங்காவ்ன் என்ற இடத்தில் பிறந்தார். இராஷ்டிரசந்த் காட்கே பாபா அவரது பெயர் தேபுஜி ஜிவ்ராஜி ஜானோர்கர் ஆகும். அவர் எப்போதும் ஒரு அரிவாளைக் கையில் வைத்திருந்தார். அவர் கந்தல் அங்கி அணிந்து, கையில் அரிவாளை வைத்திருப்பதால் அவரை 'கட்கே பாபா' என்று அழைத்தனர். அவர் செல்லும் கிராமங்களைப் பெருக்கிச் சுத்தம் செய்து வந்தார். மகாராஷ்டிர மாநிலத்தில் 'துறவி காட்கே பாபா கிராமத் தூய்மை இயக்கம்'' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இயக்கம் சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர், வீடு, தான் மற்றும் சுற்றுப்புறத்தின் தூய்மை அத்துடன் கழிவுநீர், கழிவு அகற்றுதல் போன்றவற்றுக்கானத் திட்டமிடல் ஆகியவற்றை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுத்தம் என்பது தனிப்பட்ட சுத்தத்தில் தொடங்குகிறது. அதேசமயம் சுற்றுப்புறம் மற்றும் பொது இடங்களின் தூய்மையும் சம அளவு முக்கியமானது. தங்களையும் தங்கள் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்வது ஒவ்வொரு தனிநபரின் பொறுப்பாகும்.

வெளியே மாணவர்கள் அனைவரும் அந்தப் பகுதியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். சில குழந்தைகள் வயலில் புதர்போல் வளர்ந்திருந்த புற்களை அகற்றிக் கொண்டிருந்தனர். மற்றவர்களோ மரங்களின் இலைகளைச் சேகரித்துக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்த வினய், ''எங்கள் வயலில் நிறைய மரங்கள் உள்ளன. பெரிய மரங்களின் இலைகள் உதிர்ந்து கழிவாகிவிடும். அதிலிருந்து நாங்கள் உரம் தயாரிக்கிறோம்'' என்றான்.

தலைமை ஆசிரியர், ''நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் மரங்களை நடுகிறோம்'' என்றார். வினய், டீச்சர்! மரம் நடுதல் என்றால் புதிய மரங்களை நடுவது ஆகும். இந்த ஆண்டு எங்கே, எத்தனைப் புதிய மரங்களை நட்டீர்கள்? நான் என் வீட்டின் பின்புறத்தில் இரண்டு மரங்களை நட்டேன்.

### சொல்லுங்கள் பார்க்கலாம்!

- ஆண்டு முழுவதும் பசுமையாக இருக்கும் மரங்கள் எவை?
- மரங்கள் இல்லாவிட்டால் என்ன நடந்திருக்கும்?

### முயற்சி செய்து பாருங்கள்!

- தொட்டாச் சிணங்கிச் செடியின் இலைகளை மென்மையாகத் தொடவும்.
- ஒரு செடியைத் தொட்டியில் நட்டு, தண்ணீர் ஊற்றாமல் சில நாள்களுக்கு இருண்ட அறையில் வைக்கவும்.

தலைமை ஆசிரியை பேசத் தொடங்கினார். மரங்களுக்கும் உயிர் உண்டு. அவை உயிர்வாழ நீர், காற்று மற்றும் சூரிய ஒளி தேவை. இந்திய விஞ்ஞானியான டாக்டர் ஜகதீஷ் சந்திர போஸ்தான் மரங்களுக்கும் உயிர் உண்டு என்பதை உலகில் முதன் முதலில் நிரூபித்தவர். நம்மைப் போலவே அவற்றுக்கும் உணர்வுகள் உண்டு. அவை மகிழ்ச்சி, சோகம் வெப்பம் மற்றும் குளிர் ஆகியவற்றை உணர்கின்றன. மேலும் நீங்கள் அவற்றைத் தொடும்போது கூட அவை அறிந்து கொள்கின்றன.

நாம் புதிய மரங்களை நட வேண்டும். அவற்றை நாம் காப்பாற்றி காடு அழிவதைத் தடுக்க வேண்டும். ஏனெனில், மரங்கள் நமக்கு ஏராளமானவற்றைத் தருகின்றன.



## யோசித்து எழுதுங்கள்!






## உங்களுக்குத் தெரியுமா?

- சிப்கோ இயக்கம் 1973 : காட்டைப் பாதுகாப்பதற்கானப் போராட்டம். இமயமலை அடிவாரத்தில் உள்ள ஒரு பெரிய காடு. மரங்கள் பெருமளவில் வெட்டப்பட இருந்தன. சண்டி பிரசாத் பட் மற்றும் சுந்தர்லால் பஹிகுணா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மரங்கள் வெட்டப்படுவதிலிருந்து அவற்றைப் பாதுகாக்கப் பெண்கள் அவற்றைக் கட்டிப்பிடித்தனர்.
- ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5ம் தேதி ‘உலகச் சுற்றுச் சூழல்’ தினமாகக் கொண்டாடப்படுகிறது.



## கற்றுக்கொள்ளலாம் வாருங்கள்!

‘‘தேவராய்’’ என்றால் கடவுளின் பெயரால் பாதுகாக்கப்படும் புனிதக் காடு என்று பொருள். தேவராய் இயற்கையாகவும் பண்பாட்டு ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பேணுவதற்காக அவை பாதுகாக்கப்பட வேண்டும். இங்கு மரங்களை வெட்டுவது தடை செய்யப் பட்டுள்ளது.

அகில்யாநகர் மாவட்டம் சங்கமநேரில் உள்ள பேம்கிரி கோட்டையின் அருகே ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. இந்த மரம் மகாவட்விருட்சம் என்றும் அழைக்கப்படுகிறது. இது மகாராஷ்டிர மாநிலத்திலேயே மிகப் பெரிய மரம் என்று நம்பப்படுகிறது. இந்த மரம் பொதுமக்களின் பங்களிப்பின் மூலம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சுயராஜ்யத்தின் தொலை நோக்காளரான ஷாஜிராஜே பெம்கிரி கோட்டையில் சுயராஜ்யத்தை நிறுவ முயன்றார்.



மிகப்பெரிய ஆலமரம் - பேம்கிரி





சாலு மர்தா திம்மக்கா:

சாலு மர்தா திம்மக்கா: சாலு மர்தா திம்மக்கா கர்நாடகாவைச் சேர்ந்த ஒரு சுற்றுச் சூழல் ஆர்வலர். அவர் நூறு வயதைக் கடந்தவர். திம்மக்கா சாலு மர்தா என்றால் மரங்களின் வரிசை என்று பொருள். அவர் ஆரம்பத்தில் 385 ஆல மரங்களை நட்டார். அவற்றின் வேர்களில் மிகுந்த கவனம் செலுத்தி அரசமரம். அத்திமரம் போன்ற ஆயிரக்கணக்கான மரங்களை நட்டார். மரங்களைத் தனது சொந்தப் பிள்ளைகள் என்று அவர் கூறுவது வழக்கம். இந்திய அரசு அவர்களின் இந்த மரம் வளர்க்கும் செயலுக்காக 'பத்மஸ்ரீ' விருது வழங்கி கௌரவித்தது.



சந்த் துக்காராம்

புனித துக்காராம் அபங்கத்தில் கூறியுள்ளார்.

''மரங்களும் காடும் நமக்கே சொந்தம்
பறவைகளும் அங்கே இனிமையாகப்
பாடுகின்றன.''

தலைமை ஆசிரியை வினயிடம் பேசிய உடனேயே நான்காம் வகுப்புக்குச் சென்றார். அவர் 'நான்காம் வகுப்புப் பாடப் புத்தகத்தை எடுத்து சத்ரபதி சிவாஜி மகாராஜாவினால் சொல்லப்பட்ட குறிப்பை அவனிடம் காட்டி, 'மரம் பாதுகாப்புக்கானக் கொள்கை' சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் ஆணையில் கூறப்பட்டுள்ளது. மரங்கள் காற்றைச் சுத்தமாக வைத்திருக்கின்றன' 'மண் அரிப்பைத் தடுக்க உதவுகின்றன, மாசுபாட்டைக் குறைக்கின்றன, மழைநீரைச் சேமிக்கின்றன. நமக்கு பழங்கள், காய்கறிகள், மருத்துவத் தாவரங்கள், மரக்கடைகள் போன்றவற்றை வழங்குகின்றன. அவை பல்வேறு விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் புகலிடமும் அளிக்கின்றன. மரம் நடுதல் மற்றும் மரத்தைப் பாதுகாத்தல் ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும் என்றார்.

இதையெல்லாம் கேட்ட வினய், ''முன்பு, நான் தூய்மைப் பணிகளைச் செய்யத் தயங்கி வந்தேன். ஆனால் இப்போது தூய்மையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டேன். அதே சமயம், மரம் நடுவதன் நன்மைகளையும் நான் புரிந்து கொண்டேன். இனிமேல் தனிப்பட்டத்தூய்மை, சுற்றுப்புறத் தூய்மை மற்றும் மரம் நடுதல் ஆகியவற்றில் முன்னணியில் இருப்பேன்.'' என்றான்.

## சுய ஆய்வு

**கேள்வி 1. சரியானச் சொல்லை எழுதி வாக்கியத்தை நிறைவு செய்க.**

(1) அக்டோபர் 2 அன்று ------------------ இன் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது.

(2) ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் மொகஞ்சதாரோ, ------------------ போன்ற அழகான நகரங்கள் இருந்தன.

(3) இராஷ்டிரசந்த் கட்கே பாபா அமராவதி மாவட்டத்தில் ------------------ பிறந்தார்.

(4) மரம் நட்டதற்காக இந்திய அரசு ------------------ பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது.

**கேள்வி 2. பின்வரும் அட்டவணையை நிரப்புக.**




| | | |
|---|---|---|
| (1) | ------------------------------ | ------------------------------ |
| (2) | ------------------------------ | ------------------------------ |
| (3) | ------------------------------ | ------------------------------ |
| (4) | ------------------------------ | ------------------------------ |
| (5) | ------------------------------ | ------------------------------ |

**கேள்வி 3. சரியான இணைப்பைப் பொருத்துக.**

| குழு 'அ' | பதில் | குழு 'ஆ' |
|---|---|---|
| (1) உலக சுற்றுச் சுழல் தினம் | | (அ) மரம் வளர்ப்பு |
| (2) தேவ்ராய் | | (ஆ) ஆணைகள் |
| (3) சத்ரபதி சிவாஜி மகாராஜ் | | (இ) ஜூன் 5 ஆம் தேதி |
| (4) சாலுமர்தா திம்மக்கா | | (ஈ) கடவுளின் புனித காடு |

**கேள்வி 3. இப்பகுதியில் உள்ள மரங்களுக்கு உதாரணங்கள் எழுதுக.**




**செயல்பாடு**

- பெற்றோரின் உதவியுடன் பிஜ்மாதா ரஹிபாய் போபேரே பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.
- உங்கள் பகுதியில் உள்ள துப்புரவுப் பணியாளர்களைச் சந்தித்து நேர்காணல் செய்யுங்கள்.
- இணையத்தின் உதவியுடன் மகாராஷ்டிராவில் உள்ள தேவ்ராய் மற்றும் சரணாலயங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.
- நீங்கள் பயன்படுத்தும் தானியங்களையும் விதைகளையும் சேகரித்து, அவற்றிலிருந்து நாற்றுகளை உருவாக்குங்கள்.

***





# 12. தேசிய ஒருங்கிணைப்பு



**நிகழ்வு: 1**

ஒரு நாள் என்ன நடந்தது என்றால் வெவ்வேறு நிறங்கள் ஒன்றுடன் என்று சண்டையிடத் தொடங்கின. சிவப்பு நிறம், 'நான்தான் மிகவும் அழகானவள். என் நிறம் செம்பருத்திப் பூவைப் போன்றது. உதிக்கும் சூரியனைப் போன்றது'' என்றது. வெள்ளை நிறம், ''இல்லை, நான்தான் மிகவும் அழகானவள். என் நிறம் அமைதியின் நிறம்'' என்றது. பச்சை நிறம், ''அப்படியெல்லாம் இல்லை, என் நிறம் மரத்தைப் போன்றது. இலைகளைப் போன்றது. நான் இல்லாமல் இந்த பூமியை உங்களால் கற்பனைச் செய்து பார்க்க முடியுமா?'' என்றது. நீல நிறம், ''ஆஹா! அப்படியானால் வானம் இல்லாமல், கடல் இல்லாமல் இந்த உலகத்தை உங்களால் கற்பனைச் செய்து பார்க்கமுடியுமா?'' என்றது.

அப்போது வீசிய தென்றல் அவர்களிடம் ''ஓ, அப்படிச் சண்டையிடாதீர்கள்! நமது இந்திய நாட்டின் தேசியக் கொடியைப் பாருங்கள். அதில் வெவ்வேறு வண்ணங்கள் எப்படி ஒன்றிணைந்துள்ளன. அவற்றிடமிருந்து நாம் ஒன்றைக் கற்றுக் கொள்வோம்! இந்தியத் தேசியக் கொடியானது நமது நாட்டின் ஒற்றுமை, சுதந்திரம் மற்றும் இறையாண்மையின் சின்னமாகும்'' என்று கூறியது.

நம் நாட்டில் பல்வேறு சின்னங்கள் உள்ளன. இந்தச் சின்னங்கள் நமக்கிடையே ஒற்றுமை உணர்வை உயிர்ப்புடன் வைத்திருக்க உதவுகின்றன. அவை நம் நாட்டின் விழுமியங்களை நமக்கு நினைவூட்டுகின்றன. தேசியக் கொடியைப் போலவே தேசிய ஒற்றுமையின் சின்னம் நமது தேசியக் கீதம் ஆகும். இந்தியாவின் தேசியக் கீதம் ஜன கன மன ஆகும். நாம் அனைவரும் வெவ்வேறு மொழிகளைப் பேசினாலும், இந்தப்பாடல் நம் அனைவருக்கும் ஒரு பாடலாகும். தேசியகீதம் இசைக்கப்படும் போது நாம் அனைவரும் மரியாதையுடன் எழுந்து நின்று அதை மதிப்பது நமது கடமையாகும். அதுபோலவே வந்தேமாதரம் நமது தேசியப் பாடலாகும்.



**உங்களுக்கு தெரியுமா?**

**இந்தியத் தேசியக் கொடியில் உள்ள வண்ணங்களின் அர்த்தத்தைக் கண்டறிந்து எழுதவும்.**

செந்நிறம் – ------------------------------------------------------------

வெள்ளை – ------------------------------------------------------------

பச்சை – ------------------------------------------------------------

**அசோகச் சக்கரம்- முன்னேற்றம் மற்றும் வேகத்தின் சின்னமாகும்.**
**அது இருபத்திநான்கு ஆரங்களைக் கொண்டுள்ளது.**

நம் நாடான இந்தியாவில் வெவ்வேறு மக்கள் பல்வேறு மாநிலங்களில் வாழ்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசுகிறார்கள், வெவ்வேறு ஆடைகளை அணிகிறார்கள், வெவ்வேறு பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். ஆனாலும் அனைவரும் ஒன்று, ஒரே நாட்டின் குடிமக்கள்.



## நிகழ்வு: 2

தேசிய ஒருமைப்பாடு குறித்து ஆசிரியர் கூறியதாவது வகுப்பறையில் சுற்றிப் பாருங்கள். நாம் ஒருவருக்கொருவர் வித்தியாசமாகத் தெரிகிறோம். ஆனாலும் இந்த வகுப்பறையில் நாம் ஒன்றாக இருக்கக் கற்றுக் கொள்கிறோம். நாம் கதைகள் சொல்கிறோம், பாடல்கள் பாடுகிறோம், சில சமயங்களில் சண்டையிடுகிறோம். ஆனாலும் அவற்றை நாம் தீர்த்துக் கொள்கிறோம். நாம் ஒருவரையொருவர் கவனித்துக் கொள்கிறோம். ஒருவரையொருவர் மதிக்கிறோம். இந்த வகுப்பறையைப் போலவே, நமது நாடான இந்தியாவும் பன்வகைமையால் ஆனது. இத்தகைய மாறுபட்ட கோணங்கள் இருந்தபோதிலும் ஒரே நாட்டில் கண்ணியத்துடன் ஒன்றாக வாழ்வதும் நாம் அனைவரும் இந்தியர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்வதும் தான் தேசிய ஒருமைப்பாடு என்று அழைக்கப்படுகிறது.

### படிக்கவும்!

மனிதன் பல உறுப்புகளால் ஆனவன்.
வானவில் பல வண்ணங்களால் ஆனது.
இந்தப் பூச்சாடி பல வண்ண மலர்களால்
அலங்கரிக்கப்பட்டுள்ளது. நாங்கள் பல
மொழிகளில் பாடல்களைப் பாடுகிறோம்.
பலதரப்பட்ட கலாச்சாரங்கள், பல்வேறு
விழாக்கள் மற்றும் பலவிதமான உடைகள்
நம் நாடான இந்தியாவை உருவாக்குகின்றன.

### பார்த்துச் சொல்லுதல்!

## நிகழ்வு: 3

ஒரு புதிய கல்வியாண்டு தொடங்கியிருப்பதாகக் கற்பனை செய்துக் கொள்ளுங்கள். உங்கள் வகுப்பில் ஒரு புதிய மாணவி சேர்ந்துள்ளார். அவரது தாய்மொழி பெங்காலி. நீங்கள் அவருடன் எவ்வாறு உரையாடுவீர்கள்? அவருக்கு எப்படி உதவுவீர்கள்? வகுப்பில் அவருக்கு இடமளிக்க என்ன செய்வீர்கள் ? ஆசிரியரின் உதவியுடன் இதைப் பற்றி விவாதிக்கவும்.

### படத்தை வரைக!

| தேசியக் கொடி | தேசியப் பறவை |
|---|---|
|  |  |

தேசியப் பழம்



தேசியப்பூ





**கண்டுபிடிக்கலாம் வாருங்கள்!**

இணையத்தின் உதவியுடன் மாநிலப் பறவை, மாநிலப் பழம், மாநில விலங்கு மற்றும் மாநில மலர் பற்றிய தகவல்களைக் கண்டறியுங்கள்.

மகாராஷ்டிர மாநிலம் 1960 ஆம் ஆண்டு மே.1-ஆம் தேதி உருவாக்கப்பட்டது. மகாராஷ்டிராவில் மே. 1 ஆம் தேதி மாநிலத் தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஒரு மாநிலத்திற்கு மாநிலத்தினம் இருப்பது போலவே, அதற்கு மாநிலப் பாடல், மாநிலப் பறவை, மாநிலப் பழம், மாநில விலங்கு மற்றும் மாநில மலர் போன்றவையும் உள்ளன.

தேசிய ஒற்றுமைக்கு வெவ்வேறு சின்னங்களும் இலச்சினைகளும் எவ்வளவு முக்கியமோ, அதேபோல வெவ்வேறு தேசிய விழாக்களும் முக்கியமானவை. நாம் 1947 ஆகஸ்டு 15 அன்று சுதந்திரம் பெற்றோம். எனவே ஆகஸ்டு 15-ஐ சுதந்திரத் தினமாக கொண்டாடுகிறோம். இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது எனவே ஜனவரி-26 ஐ ‘குடியரசு தினமாக‘ கொண்டாடுகிறோம். இந்த நாள்கள் அனைத்து இந்தியர்களாலும் ஒன்றாகக் கொண்டாடப்படுகின்றன. இந்த நாளில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.



## உங்களுக்குத் தெரியுமா?

ராகேஷ் சர்மா: 1984-ல் ராகேஷ் சர்மா இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் ஆனார். அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி அவரிடம், ‘‘விண்வெளியிலிருந்து இந்தியா எப்படித் தெரிகிறது ?’’ என்று கேட்டார். அதற்கு ராஜேஷ் சர்மா ‘‘எல்லா இடங்களிலிருந்தும் நன்றாகத் தெரிகிறது!’’ என்று பதிலளித்தார்.

(பாடப்புத்தகத்தின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டில் உள்ள இணைப்பின்மூலம் ராகேஷ் ஷர்மாவின் காணொளியைப் பார்க்கவும்)

## சுய ஆய்வு

**கேள்வி 1. பின்வரும் கேள்விகளுக்கானப் பதில்களை எழுதுக.**

(1) இந்தியத் தேசியக் கொடியைப் பற்றிய சுருக்கமான விளக்கத்தை எழுதுக.

(2) இந்தியாவின் முதல் விண்வெளி வீரரின் பெயர் என்ன?

(3) நமது தேசிய மலர் எது?

**கேள்வி 2. சரியான வார்த்தையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.**

(1) மூவண்ணக் கொடியில் உள்ள சக்கரம் ----------------------

(அ) சுதர்சன சக்கரம் (ஆ) அசோகச் சக்கரம் (இ)பரம்வீர்சக்கரம் (ஈ) நீர் சுழற்சி

(2) ஆகஸ்டு 15 ----------------------

(அ) சுதந்திரத் தினம் (ஆ) அரசியலமைப்புத் தினம் (இ)மகாராஷ்டிரா தினம் (ஈ) குடியரசுதினம்

**கேள்வி 3. பொருத்துக.**

| குழு ‘அ’ | குழு ‘ஆ’ |
|---|---|
| (1) தேசியப் பறவை | (அ) ஜன கன மன |
| (2) தேசியப் பழம் | (ஆ) வந்தே மாதரம் |
| (3) தேசியப் பாடல் | (இ) மாம்பழம் |
| (4) தேசியக் கீதம் | (ஈ) மயில் |

**கேள்வி 4. உங்கள் தாய்மொழியின் பெயரை எழுதுக. மகாராஷ்டிராவின் அண்டை மாநிலங்களின் மொழிகளின் பெயர்களை எழுதுக.**

**கேள்வி 5. பாடப் புத்தகத்தின் அட்டையை உற்றுநோக்கி இந்தியாவின் பன்முகத்தன்மையை விளக்குக.**

### செயல்பாடு

- தேசியச் சின்னங்களைப்பற்றி அறிந்து அவற்றின் படங்களைச் சேகரியுங்கள்.
- தேசபக்திப் பாடல்களைச் சேகரித்து,அவற்றின் தொகுப்பை ஒரு புத்தகத்தில் அச்சிடவும்.
- நாம் வசிக்கும் மாவட்டத்தை ஒட்டியுள்ள 2-3 மாவட்டங்களில் என்னென்ன வட்டார மொழிகள் பேசப்படுகின்றன?

***

# 13. கேட்போம், பேசுவோம், புரிந்துக்கொள்வோம்.




படத்தில் நீங்கள் என்னென்ன காட்சிகளைப் பார்க்கிறீர்கள் என்று சொல்லுங்கள்?

- உங்கள் பள்ளியில் கொடியேற்றும் விழா எந்தெந்தத் தேதிகளில் நடைபெறும்?
- கொடியேற்றத்திற்காக நீங்கள் செய்யும் ஏற்பாடுகள் குறித்து உங்கள் குழுவில் கலந்துரையாடுங்கள்.
- ஒரு பத்துரூபாய் நோட்டை எடுத்துக் கொள்ளுங்கள். அதிலுள்ள படத்தைப் பற்றி உங்கள் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பிறருடன் கலந்துரையாடுங்கள்.




மாணவர்களே! நாம் நண்பர்கள், மற்றவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சொல்வதை அமைதியாகக் கேட்க வேண்டும். நமது எண்ணங்களை உறுதியாக வெளிப்படுத்த வேண்டும். நமது எண்ணங்களை வெளிப்படுத்தும்போது மற்றவர்களின் கருத்துகளையும் நாம் மதிக்க வேண்டும். இது நமது தலைமைப் பண்புகளை வளர்க்கிறது.

## நாம் கவனித்துப் பேசுவோம்!

- மகாராஷ்டிர பாடல்களைக் கேட்டு சுருதி தவறாமல் பாடுங்கள்.
- கொடியேற்றும் விழாவில் நீங்கள் என்ன முழக்கங்களை முன் வைக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.

**பின்வரும் சூழ்நிலைகளில் நீங்கள் என்ன செய்வீர்கள்?**

- உங்கள் நண்பர் உடல்நிலைச் சரியில்லாமல் இருக்கிறார்.
- உன் நண்பரின் பாட்டிக்குக் கண் பார்வை சரியாக இல்லை. அவர் சாலையைக் கடந்துசெல்ல விரும்புகிறார்.
- உங்கள் வீட்டில் உள்ள ஒருவர் அடிக்கடி தனது கைப்பேசியைப் பார்க்கிறார்.

## தெரிந்து கொள்ளுங்கள்!

## ஒற்றுமையின் பலம்

### சிட்டுக்குருவிகளும் வேட்டைக்காரனும்.

குழந்தைகளே, இந்தக் கதையைக் கேட்டிருக்கிறீர்களா?

அடர்ந்தகாட்டில் ஒரு பெரிய ஆலமரத்தில் பல சிட்டுக்குருவிகள் வாழ்ந்தன. அந்த ஆலமரத்தில் சின்ன சிவப்பு ஆலம் பழங்கள் பழுத்திருந்தன. சிட்டுக்குருவிகள் அவற்றைப் பறித்துச் செல்லும். அதனால் அங்கே ஏராளமானச் சிட்டுக்குருவிகள் இருந்தன.

அந்தச் சிட்டுக்குருவிகளுக்கு மத்தியில் புத்திசாலியும் அனுபவசாலியுமான ஒரு சிட்டுக்குருவி இருந்தது. அது எப்போதும் எல்லோரையும் ஒன்றாக இருக்குமாறு அறிவுறுத்தும்.

ஒரு நாள் ஒரு வேட்டைக்காரன் காட்டிற்கு வந்தான். ஆலமரத்திற்கு அருகில் ஏராளமானச் சிட்டுக்குருவிகள் இருப்பதை அவன் கண்டான். அந்தச் சிட்டுக் குருவிகளைப் பிடித்துவிடலாம் என்று அவன் நினைத்தான். இதற்காக அவன் ஒரு தந்திரத்தை வகுத்தான். அவன் அந்த மரத்தின் அடியில் சிட்டுக் குருவிகளுக்காக நிறைய விதைகளைப் போட்டான். அதன் மீது ஒரு வலையை விரித்துவிட்டுச் சிட்டுக்குருவிகளுக்காகக் காத்திருந்தப்படி அருகில் மறைந்திருந்தான்.

சிறுது நேரத்தில் சிட்டுக் குருவிகள் விதைகளையும் பழங்களையும் பொறுக்கக் கீழே வந்தன. அவை அனைத்தும் விதைகளைப் பொறுக்குவதில் மும்முரமாக இருந்தபோது வேட்டைக்காரன் விரித்த வலையில் சிட்டுக்குருவிகள் அறியாமல் சிக்கிக் கொண்டன. ஐயோ! இப்போது அவற்றிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சிட்டுக்குருவிகள் தப்பிக்கப் போராடத் தொடங்கின. ஆனால் பயனில்லை! அவை அனைத்தும் பயந்து போய் ஒன்றையொன்று பார்க்கத் தொடங்கின.

சிட்டுக்குருவிகள் தொடர்ந்து முயன்றன. ஆனால் அவற்றால் முடியவில்லை. இறுதியாக அந்தச் சாமார்த்தியமான சிட்டுக்குருவி அனைவரிடமும் ''நாம் அனைவரும் நம் அலகுகளால் வலையைப் பிடித்துக்கொண்டு ஒரே நேரத்தில் பறந்து செல்லோம்''என்று சொன்னது. அனைத்தும் அதன் வார்த்தைகளுக்குச் சம்மதித்தன. அவை அனைத்தும் ஒரே நேரத்தில் வலையுடன் வானத்தில் பறந்தன.

வேட்டைக்காரன் குழம்பமடைந்து வலையைப் பிடிப்பதற்காக அவற்றின் பின்னால் ஓடத் தொடங்கினான். ஆனால் அவனால் ஒரு சிட்டுக்குருவியைக் கூடப் பிடிக்க முடியவில்லை. ஓடும்போது அவன் கீழே விழுந்தான். சிட்டுக்குருவிகள் சற்றுத் தொலைவில் இருந்த எலி அண்ணனிடம் சென்றன. அவை உதவிக்காக அவரை அழைக்கத் தொடங்கின. அவைகளைக் கண்டதும் எலி அண்ணனும் தன் நண்பர்களுடன் சிட்டுக்குருவிகளுக்கு உதவ ஓடின.

எலிகள் எல்லா வலைகளையும் கடித்துத் துண்டித்து, சிக்கலில் மாட்டிக் கொண்டிருந்த சிட்டுக்குருவிகளைச் சில கணங்களில் மீட்டன. எல்லா சிட்டுக்குருவிகளும் அவருக்கு மிகவும் நன்றி தெரிவித்தன.



## சொல்லுங்கள் பார்க்கலாம்!

இந்தக் கதையிலிருந்து நாம் என்ன கற்றுக்கொண்டோம்?

ஆசிரியரின் உதவியுடன் இந்தப் படத்தைப் புரிந்துக் கொள்ளுங்கள்.

இந்தப்படம் கோலாப்பூர் அருகே உள்ள கித்ரேஷ்வர் கோவிலில் எடுக்கப்பட்டது. இரண்டு அன்னங்கள் தங்கள் அலகுகளில் ஒரு குச்சியைப் பிடித்திருக்கின்றன. ஓர் ஆமையும் அந்தக் குச்சியைப் பிடித்திருக்கிறது. மேலே உள்ள படங்களை அடிப்படையாகக் கொண்டு உங்களால் ஒரு கதை சொல்ல முடியுமா? ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் உதவியுடன் ஒரு கதையைத் தயார் செய்யுங்கள்.


கித்ரேஷ்வர் கோயிலில் உள்ள சிற்பம்

இது நமக்கும் பொருந்தும். நம்நாட்டில் நாம் அனைவரும் ஒற்றுமையாகவும் ஒருமைப்பாட்டுடனும் இருந்தால், முடியாத அரிய பல காரியங்களைக்கூட எளிதாகவும் விரைவாகவும் செய்துவிட முடியும், அல்லவா?



## உங்களுக்குத் தெரியுமா?



19 வயதுக்குட்பட்ட மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் சங்கம்




இந்திய மகளிர் கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்றது.



பார்வையற்றோர் உலகக் கோப்பை கிரிக்கெட் - வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி.

2025 மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பையின் பல்வேறு போட்டிகளில் இந்த அணிகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுப் பட்டத்தை வென்றுள்ளன. இவை நமது நாடான இந்தியா பெருமைப்பட வேண்டிய விஷயங்கள் /செயல்கள் ஆகும். கிரிக்கெட் போன்ற ஒரு குழு விளையாட்டில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எப்படி வெற்றி பெற்று, நமது நாட்டின் பெருமையை உயர்த்த முடியும் என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகளாகும். அதே சமயம், கிரிக்கெட் விளையாடும் போது பார்வையற்ற பெண்களின் செயல்பாடு மிகவும் பாராட்டத்தக்கது.



## சுய ஆய்வு

**கேள்வி 1. பின்வரும் சூழ்நிலைகளில் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள் என்பதை எழுதுக.**

(1) உங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தும்போது- ..........................................................

(2) பெரியவர்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறார்கள்- ..........................................................

(3) பள்ளியில் தேசியக் கீதம் இசைக்கப்படும் போது- ..........................................................

(4) மாச்சில் (பிஸ்கட்) மற்றும் சாக்லேட் சாப்பிட்ட பிறகு அவற்றின் உறைகள் உங்களிடம் இருந்தால்-..........................................................

(5) ஒரு மாற்றுத்திறனாளி உங்கள் நிறுவனத்திற்கு வந்தால்-..........................................................

**கேள்வி 2. பின்வரும் படங்களில் காணப்படுபவைக் குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**




குப்பை

(1) ஈரக் கழிவு மற்றும் உலர் கழிவுத் தொட்டிகளைச் சுற்றி குப்பைக் குவிந்துள்ளது.

..........................................................

..........................................................

(2) சிறுவன் மரங்களை நடுகிறான்.

..........................................................

..........................................................



மரத்தோட்டம்

(3) மாற்றுத் திறனாளி மாணவர் ஒருவர் சக்கர நாற்காலியில் நண்பரால் பள்ளியிலிருந்து அழைத்துச் செல்லப்படுகிறார்.

..........................................................

..........................................................



மாற்றுத் திறனாளி மாணவர்

### செயல்பாடு

- இந்தியப் பெண் வீராங்கனைகளின் படங்களைச் சேகரித்து, அவற்றை ஒரு தொகுப்பு நோட்டுப்புத்தகத்தில் ஒட்டி, அவர்களின் பெயர்களை எழுதவும்.
- ஈசாப் நீதிக் கதைகள் மற்றும் பஞ்ச தந்திரக் கதைகள் பற்றிய தகவல்களை உங்கள் பெற்றோரிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளுங்கள். அதை வகுப்பில் கூறுங்கள்.
- நன்னெறி செயல்பாட்டுச் செயலில் உங்களுக்குப் பிடித்தமான சம்பவம் ஒன்றைப் பற்றி எழுதுங்கள்.

***

**அன்பு குழந்தைகளே!**

யாராவது ஒருவர் உங்களை தகாத முறையில் தொடுவதைப் பற்றி நீங்கள் சங்கடமாக உணர்ந்தால், நீங்கள் அமைதியாக இருக்கக் கூடாது. நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால்.

1. உங்களை நீங்களே குற்றம் சொல்லாதீர்கள்.
2. நீங்கள் நம்பும் ஒருவரிடம் சொல்லுங்கள்.
3. நீங்கள் போக்சோ மின் பெட்டி மூலம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கும் தெரிவிக்கலாம்.

நீங்கள் ஒரு பாதுகாப்பற்ற தொடுதலைப் பெறும்போது, நீங்கள் மோசமாகவும், குழப்பமாகவும் மற்றும் உதவியற்றவராகவும் உணரலாம்.
நீங்கள் மோசமாக உணர வேண்டியதில்லை, ஏனெனில் அது உங்கள் தவறு அல்ல.




இந்த பொத்தானை அழுத்தவும்

போக்சோ மின் பெட்டி NCPCR@gov.in

நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராகவோ, துன்பப்படுத்தப்பட்டவராகவோ, குழப்பத்திற்கு உட்பட்டவராகவோ, தவறான நேர்மையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டவராகவோ, மனக் கலக்கத்திற்கு உட்பட்டவராகவோ அல்லது அப்படிப்பட்ட துன்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அறிந்தவராகவோ இருந்தால்...

1098 என்ற எண்ணுக்கு அழைக்கவும்... ஏனென்றால் சில எண்கள் நல்லவை!
சில எண்கள் வாழ்க்கையை மாற்றும்!!




துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைபேசி சேவையான சைல்ட்லைன் 1098, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் சைல்ட்லைன் இந்திய நிறுவனத்தின் முன்முயற்சியாகும்.

புதிய விடியலை நோக்கி
Towards a new dawn

**ஆசிரியர் குறிப்பு :** நல்ல தொடுதல்-கெட்ட தொடுதல் (குட் டச்-பேட் டச்) குறித்து மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்








மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே.

आपल्या सभोवतालचे जग भाग-२ इयत्ता तिसरी (तमिळ माध्यम)

₹ 65.00

